# பிஞ்சுச் சாவு



கலைஞர்
கவிஞர் வாலி
கவிப்பேரரசு வைரமுத்து
கவிக்கோ அப்துல்ரகுமான்
இன்குலாப்
காசி ஆனந்தன்
கவிஞர் முத்துலிங்கம்
தொல். திருமாவளவன்
தமிழச்சி தங்கபாண்டியன்
அறிவுமதி
கவிவேந்தர் மு.மேத்தா
பழநிபாரதி
தாமரை
த.பழமலய்
ஆறாவயல் பெரியய்யா
மனுஷ்யபுத்திரன்
சுப. வீரபாண்டியன்
காமகோடியன்
கோவி. லெனின்
நா. முத்துக்குமார்
கவிஞர் புவியரசு
விவேக்
சுப. உதயகுமாரன்
ராதாகிருஷ்ணன் பார்த்திபன்
யுகபாரதி
பா. விஜய்
ஆரூர் தமிழ்நாடன்
தீபச்செல்வன்
இளையகம்பன்
பாரிவேந்தர்
சென்னிமலை தண்டபாணி
ஈரோடு தமிழன்பன்
கபிலன் வைரமுத்து
யாழன் ஆதி
ஆர்.சி. மதிராஜ்
கவிஞர் தெய்வச்சிலை
நெல்லை ஜெயந்தா
சேரங்குலத்தான்
நெல்லை கண்ணன்
தாகம் செங்குட்டுவன்
எஸ். ராஜகுமாரன்
செல்மா. மீரா
பேராசிரியர் வி. மருதவாணன்

கவிஞர் இளையபாரதி
சுகன்
கவிவாணன்
தமிழ்முழக்கம் சாகுல்அமீது
சே.த. இளங்கோவன்
அமீர் அப்பாஸ்
பா. செல்வி
பாவலர் வையவன்
பாரதி வசந்தன்
பேராசிரியர் தி.இராசகோபாலன்
மு. முருகேஷ்
கு.கா. பாவலன்
தஞ்சாவூர் கவிராயர்
உதயை மு. வீரையன்
இயக்குநர் யார் கண்ணன்
கவிஞர் பெ. சிதம்பரநாதன்
வாணம்பாடி இளமுருகு
ஆரூர் புதியவன்
ஞானாச்சாரியார் கண்ணன்ஜி
ச. பாபுஜி
பிறைசூடன்
வாணியம்பாடி அப்துல்காதர்
இலக்கியா நடராஜன்
கவிஞர் பொன்னடியார்
சங்கரசுப்பிரமணியன்
அ. பாரூக்கனு
இரா.பெ. வெற்றிச்செல்வி
கவிஞர் கே.ஆர். சுப்பிரமணியம்
காடாம்புலியூர் கா. சங்கரன்
மகிராஜா
ந. இராசசேகரன்
வெள்ளாங்குளி வி.ரமேஷ்
புதுவைத் தமிழ் நெஞ்சன்
செல்வ. மதிவாணன்
வெற்றிப் பேரொளி
அருள்குமார்
ஈரோடு இறைவன்
ஆண்டாள் பிரியதர்ஷினி
திண்டுக்கல் ஐ.லியோனி
மரபின்மைந்தன் முத்தையா
ஆலந்தூர் மோகனரங்கன்
கு. ஸ்ரீகல்பவிருட்சா
குகை மா. புகழேந்தி
இ.எஸ். லலிதாமதி

**பாலச்சந்திரனுக்கு**
**முன்னணிக் கவிஞர்களின்**
**கவிதாஞ்சலி**

8/50



# பிஞ்சுச் சாவு

பாலச்சந்திரனுக்கு

முன்னணிக் கவிஞர்களின் கவிதாஞ்சலி!

பரீஸ் அறிவாலயம்
புத்தகசாலை
7 - RUE - PERDONNET
75010 - PARIS - FRANCE
TELE : 0144720334
FAX - 01 44720335

நக்கீரன்
வெளியீடு

பிஞ்சுச் சாவு

முதல் பதிப்பு 2013
பக்கங்கள் 216
நூலின் அளவு (14X21.5) டெமி
விலை ரூ.125/-

வெளியீடு
**நக்கீரன் பப்ளிகேஷன்ஸ்**
105, ஜானி ஜான்கான் சாலை
இராயப்பேட்டை
சென்னை 14
தொடர்புக்கு 044 43993029

அட்டை மற்றும் உள் வடிவமைப்பு
**ஆர்.சி.மதிராஜ்**

கட்டமைப்பு
**ஆர்.எஸ்.பைண்டர்ஸ்**
சென்னை 5

அச்சாக்கம்
**சாருபிரபா பிரிண்டர்ஸ்**
சென்னை 14

**PINCHU CHAVU**

First Edition 2013
Pages 216
Book Size (14X21.5) Demy
Price Rs.125/-

Published by
**Nakkheeran Publications**
105, Jani JahanKhan Road
Royapettah, Chennai 14
Ph 044 43993029

Wrapper & Inner Designed by
**R.C.Mathiraj**

Binding by
**R.S.Binding Works**
Chennai 5

Printed at
**Saaruprabha Printers**
Chennai 14

ISBN 978-93-81828-58-8



இந்நூல்
ஈழ விடியலுக்கு
சமர்ப்பணம்!

பதிப்புரை

# கண்ணீரில் பிறந்த கவிதைகள்!

பிரபாகரனின் மகன் பாலச்சந்திரன், தன் உயிரைக்கொடுத்து உலகின் பார்வையை தமிழீழத்தின் பக்கம் திருப்பியிருக்கிறான்.

அவன் மார்பைத் துளைத்த தோட்டாக்கள், லட்சக்கணக்கான தமிழீழ மக்கள் கொன்றுகுவிக்கப்பட்ட கொடூரத்தை உலகின் பார்வைக்குக் கொண்டுசென்றன.

அவனது ஒற்றை மரணம், ஒரு இனத்தின் சாவை பிரகடனப்படுத்தி உலகின் விழிகளை ஈரமாக்கியது. அங்கே அநியாயமாகச் சாகடிக்கப்பட்ட அப்பாவித் தமிழ்க் குழந்தைகளின் பிரதிநிதியாய், அவனது மரணம் உலக அரங்கின் முன்பாக அணிவகுப்பு நடத்தியது.

கொடுங்கோலன் ராஜபக்சேவின் கடைவாயோரம் ஒழுகும் மனித ரத்தத்திற்கு, பாலச்சந்திரன் ஒரு உயிர்ப்பான சாட்சி. அவனது ஒற்றை மரணம் உலகையே உலுக்கியிருக்கிறது. திசைகளைத் தேம்பவைத்திருக்கிறது. ராஜபக்சேவுக்கு எதிராக, கோடிக்கணக்கான நெற்றிக்கண்களைத் திறக்கவைத்திருக்கிறது. ஈழத் தமிழர்களுக்கான உரிமைக்குரலை, அவனது உதட்டில் உறைந்த மௌனமும் எழுப்பிக்கொண்டிருக்கிறது.

எனவே பாலசந்திரனின் வீரச்சாவை கௌரவிக்கவும், அப்படி கௌரவிப்பதன் மூலம் தமிழீழத்திற்கான தணலை வெப்பம் குறையாமல் பதப்படுத்தவும் நக்கீரன் எடுத்த முயற்சிதான் இந்தக் கவிதைகள்.

பிரபல கவிஞர்களிடமிருந்து பாலச்சந்திரன் குறித்த கவிதைகளை பெற்று நக்கீரனில் ஒரு கவிதை தொடராக வெளியிடலாம் என்ற ஆலோசனையை தம்பி இணையாசிரியர் காமராஜ் தெரிவித்தார்.

முதல் கவிதை வெளிவந்ததும் ஏனைய கவிஞர்களும் வாசகர்களும் தங்கள் உணர்வுகளைக் கவிதைகளாக்கி தாமாக நக்கீரனுக்கு அனுப்ப ஆரம்பித்தனர். அந்தக் கவிதைகள் தமிழகத்தின் வேதனைக் கொந்தளிப்புகள். காயங்களில் இருந்தும் கண்ணீரில் இருந்தும் பிறந்துவந்த இலக்கியத் தெறிப்புகள்.

தமிழீழத்திற்காக தமிழக மாணவர்கள் தன்னெழுச்சியாய்ப் போராடியபோது நக்கீரனில் வெளியிடப்பட்ட இத்தகைய கவிதைகள் அவர்களின் வாட்களாகவும் கேடயங்களாகவும் அவர்களின் கைகளுக்குப் போனது. அவை போராட்டக் களங்களில் புரட்சியுடன் புழங்கின.

இப்படி நக்கீரனில் வெளியிடப்பட்ட, நக்கீரனுக்கு வந்துசேர்ந்த கவிதைகளில் இருந்து 87 கவிஞர்களின் கவிதைகளை மட்டும் தொகுத்து உங்கள் கைகளில் ஒப்படைக்கிறது நக்கீரன்.

இந்தத் தொகுப்பிற்கு ஈழ வலி என்ற தலைப்பை முதலில் சூட்டினோம்.

கவிப்பேரரசு வைரமுத்து அவர்கள் ஈழ வலிஎன்றால் அது பொதுவானதாக இருக்கும். பாலச்சந்திரனின் பிஞ்சுச்சாவு ஒரு பிரளயத்தையே உருவாக்கி இருக்கிறது. எனவே பிஞ்சுச் சாவு என்ற தலைப்பையே தொகுப்பிற்கு வைக்கலாமே என்று ஆலோசனை சொன்னார். உடனே ஏற்றுக்கொள்ளப்பட்டது. அண்ணன் வைரமுத்து அவர்களுக்கு நன்றி!

இந்த தொகுப்பிற்காக கவிதைகள் கேட்டபோது தமிழுலகத்தின் முன்னணிக் கவிஞர்கள் அனைவரும் தங்களுணர்வைப் பதிவு செய்ய ஊக்கத்தோடு முன்வந்தார்கள்.

முத்தமிழறிஞர் கலைஞரிடம் கவிதை கேட்டபோது, கால அவகாசம் கேட்பாரென்று கருதினோம். ஆனால் அவரோ மற்ற இளைய கவிஞர்களை விடவும் மிக விரைவாக, கேட்ட அடுத்த நாளே கவிதையைக் கொடுத்து, தனக்கு மூப்பில்லை என நிரூபித்தார்.

கவிதைகள் மூலம் தமிழகத்தின் எண்ணங்களை உணர்ச்சிப் பூர்வமாகப் பதிவுசெய்திருக்கும் அத்தனைக் கவிஞர்களுக்கும் நன்றி தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்தத் தொகுப்பு தமிழகத்தின் மனவலியை எட்டுத் திசைகளுக்கும் எடுத்துச்செல்லும் ஆவணம்.

இதை நக்கீரன் தன்கடமை உணர்வோடு பதிவு செய்திருக்கிறது.

என்றென்றும் உங்கள்

**நக்கீரன் கோபால்**

# உள்ளே...


| | |
|---|---|
| கலைஞர் | 8 |
| கவிஞர் வாலி | 10 |
| கவிப்பேரரசு வைரமுத்து | 15 |
| கவிக்கோ அப்துல்ரகுமான் | 17 |
| இன்குலாப் | 20 |
| காசி ஆனந்தன் | 22 |
| கவிஞர் முத்துலிங்கம் | 24 |
| தொல். திருமாவளவன் | 26 |
| தமிழச்சி தங்கபாண்டியன் | 30 |
| அறிவுமதி | 32 |
| கவிவேந்தர் மு.மேத்தா | 37 |
| பழநிபாரதி | 38 |
| தாமரை | 40 |
| த.பழமலய் | 42 |
| ஆறாவயல் பெரியய்யா | 44 |
| மனுஷ்யபுத்திரன் | 47 |
| சுப. வீரபாண்டியன் | 50 |
| காமகோடியன் | 52 |
| கோவி. லெனின் | 54 |
| நா.முத்துக்குமார் | 56 |
| கவிஞர் புவியரசு | 57 |
| விவேக் | 59 |
| சுப. உதயகுமாரன் | 61 |
| ராதாகிருஷ்ணன் பார்த்திபன் | 63 |
| யுகபாரதி | 67 |
| பா.விஜய் | 69 |
| ஆரூர் தமிழ்நாடன் | 73 |
| தீபச்செல்வன் | 75 |
| இளையகம்பன் | 77 |
| பாரிவேந்தர் | 79 |
| சென்னிமலை தண்டபாணி | 81 |
| ஈரோடு தமிழன்பன் | 84 |
| கபிலன் வைரமுத்து | 87 |
| யாழன் ஆதி | 89 |
| ஆர்.சி. மதிராஜ் | 90 |
| கவிஞர் தெய்வச்சிலை | 92 |
| நெல்லை ஜெயந்தா | 96 |
| சேரங்குலத்தான் | 98 |
| நெல்லை கண்ணன் | 101 |
| தாகம் செங்குட்டுவன் | 102 |
| எஸ். ராஜகுமாரன் | 104 |
| செல்மா மீரா | 106 |

| | |
|---|---|
| பேராசிரியர் வி. மருதவாணன் | 109 |
| கவிஞர் இளையபாரதி | 111 |
| சுகன் | 115 |
| கவிவாணன் | 118 |
| தமிழ்முழக்கம் சாகுல்அமீது | 120 |
| சே.த.இளங்கோவன் | 123 |
| அமீர் அப்பாஸ் | 126 |
| பா.செல்வி | 128 |
| பாவலர் வையவன் | 130 |
| பாரதி வசந்தன் | 133 |
| பேராசிரியர் தி.இராசகோபாலன் | 136 |
| மு.முருகேஷ் | 138 |
| கு.கா. பாவலன் | 140 |
| தஞ்சாவூர் கவிராயர் | 143 |
| உதயை மு.வீரையன் | 145 |
| இயக்குநர் யார் கண்ணன் | 147 |
| கவிஞர் பெ.சிதம்பரநாதன் | 151 |
| வானம்பாடி இளமுருகு | 153 |
| ஆரூர் புதியவன் | 155 |
| ஞானாச்சாரியார் கண்ணன்ஜி | 158 |
| ச.பாபுஜி | 160 |
| பிறைசூடன் | 163 |
| வாணியம்பாடி அப்துல்காதர் | 165 |
| இலக்கியா நடராஜன் | 169 |
| கவிஞர் பொன்னடியார் | 172 |
| சங்கரசுப்பிரமணியன் | 174 |
| அ.பாரூக்கனு | 175 |
| இரா.பெ.வெற்றிச்செல்வி | 177 |
| கவிஞர் கே.ஆர்.சுப்பிரமணியம் | 179 |
| காடாம்புலியூர் கா.சங்கரன் | 181 |
| மகிராஜா | 183 |
| ந.இராசசேகரன் | 185 |
| வெள்ளாங்குளி வி.ரமேஷ் | 187 |
| புதுவைத் தமிழ் நெஞ்சன் | 189 |
| செல்வ. மதிவாணன் | 191 |
| வெற்றிப் பேரொளி | 193 |
| அருள்குமார் | 196 |
| ஈரோடு இறைவன் | 199 |
| ஆண்டாள் பிரியதர்ஷினி | 201 |
| திண்டுக்கல் ஐ.லியோனி | 203 |
| மரபின்மைந்தன் முத்தையா | 205 |
| ஆலந்தூர் மோகனரங்கன் | 207 |
| கு. ஸ்ரீகல்பவிருட்சா | 211 |
| குகை.மா. புகழேந்தி | 213 |
| இ.எஸ். லலிதாமதி | 214 |




# கவிதையல்ல; கண்ணீர்ப் பொழிவு!

## கலைஞர்

□

முருகன், சாந்தன், பேரறிவாளன்;
உருகுது நெஞ்சம் இந்த மூவரை நினைத்தால்!
விண்மீன் தரைநோக்கி வீழும் நொடியில்
வன்முறை உணர்வு தலைதூக்கி விடுமே!
நன்முறையில் அதனைத் தவிர்ப்பது நலமே!
பன்முறையும் பண்பினர் பலரும்
மரணத்துக்கு மரணம் தண்டனை ஆகாதென்றும்;
அதனாலே;
மரண தண்டனை கூடாதென்றும்
அலறிச் சென்றார்;
அன்பை அருளிச் சென்றார்!
அவர்கள் மொழி கேட்பதற்கு;
இந்த அரும்புச் செல்வன்
அகலவிழி திறந்து பார்க்கின்றானா?
மாவீரன் மகனை விட்டுவிடு என்று
சிங்கள வெறியை மனம் நொந்து கேட்டபோதும்;
கொழுப்பெடுத்த அந்தத் துப்பாக்கிமுனைக் கொலையோ
அந்தக் கொழுந்தின் உயிரைக் காக்கவில்லை;
அதைத் தடுக்க முடியா தமிழினத்தார்
அவரில் மிச்சமுள்ள
இந்த மூவர் உயிரையாவது மீட்டு
இன்முறுவல் பூத்திட
வாய்ப்பளித்தால் இன்னும்
வாழுகின்ற தாய்க்குலம்
எங்கள் தமிழ்க்குலம்
என்றும் வாழ்த்துமே!

■



# புலால் தின்னும் புத்தன்!

## கவிஞர் வாலி

□

சோழத் தமிழன்
சோர்வு தவிர்க்க ஓர்
'அண்ணா' வாய்த்தது போல்
ஈழத் தமிழன்
ஈனம் தவிர்க்க ஒரு 'தம்பி'
வாய்த்தான்!
முப்பதெழுத்தில் அடங்கி இருக்கிறது
தமிழின் உயிரும்; மெய்யும்
ஆனால்
ஆறெழுத்தில் அடங்கியிருக்கிறது
தமிழரின் உயிரும் மெய்யும்!
பிரபாகரன்!
அவ்
ஆறெழுத்து அல்லால்,
வேறெழுத்து உளதோ
உலகத் தமிழரின்
உள்நாக்கிலும் உளத்திலும் உட்கார?
நீரெழுத்து என்றான
ஈழத் தமிழரின் வாழ்வை
நிலையெழுத்து என்று ஆக்கவல்லது
அவ்
ஆறெழுத்து
அன்றி ஆரெழுத்து?

பிரபாகரனின்
பிதா
வேலுப்பிள்ளை; அந்த
வேலுப்பிள்ளை பெற்ற
பிள்ளையை...
கதிர்காமத்துக்
கந்தனைப் போல்
வேல்பெற்ற
பிள்ளை எனலாம்;
பார்வதியின்
சூல்பெற்ற
பிள்ளை எனலாம்;
ஈழத் தமிழர் விழி
ஈரமெல்லாம்
வற்றாத புனலாம்; அவனதை
வற்றவைக்க வந்த அனலாம்!
மாதரசி
மதிவதனியைத்
திருமணம் முடித்தான்
திருப்போரூரில்;
ஆனால்
அவன்
அகத்தைப் படிக்காமல்
புறத்தைப் படித்தான்...
தாழ்ந்தும்
தவித்தும் தன்
இனத்தோரெல்லாம்
இருப்போரூரில்!
தகவார்ந்த
தந்தை செல்வா சென்ற
காந்தி வழியில்
காரியம் ஆகாதென்று
நேதாஜி வழியை
நேர்ந்தான்;
தூர்த்தரைத்
தூர்க்கத்
துடைப்பம் உதவாதென்று
துப்பாக்கியைத் தேர்ந்தான்!

நிலப்படை;
நீர்ப்படை;
நீள் விசும்புப் படை;
என்றவன் முப்படை கண்டான்;
எம்நிலத்தை
எம்மிடம் ஒப்படை என்றான்!
சேர
சோழ
பாண்டியர்க்குப்
பிற்பாடு...
படை திரட்டிய
பச்சைத்தமிழன் இவனானான்;
முப்படையையும்
முக்கண்ணாகக் கொண்ட
சிவனானான்!
ஆலயங்களில் நாம்
ஆராதிக்கும்
ஆண்டவனாரெல்லாம்
அன்புமழை;
அவர்கள் கரங்களிலேயே
ஆயுதங்கள் இருக்கையில்
அறத்தைக் காக்க மனிதனும்
ஆயுதம் ஏந்தினால் என்ன பிழை?
தீர்த்தம் விழையாது
தீனி விழையாது
தீர்ந்து போனான்
திலீபன் எனும் தீர்த்தன்
கண்ணிழப்பினும்
மண்ணிழக்க மாட்டேன்
என்று
குட்டிமணி என்பான்
கொட்டடியில் ஆர்த்தன்!
எங்கே இருக்குமோ வீரம்;
அங்கே இருக்கும் சோரம்;
உடனிருந்தே
உளவு சொன்னது
ஒரு நா; அது கரு நா; அந்தக்
கரு நா பெயர் கருணா!

பிரபாகரன் எனும் சொல்
ஒளிப்
பிழம்பெனப் பிரகாசிக்கும்
சூரியனைக் குறிக்கும்;
சூரியனோ
சூழும் இருளைத் தின்று
செரிக்கும்!
அது
அத்தமிக்கும் ஓரிடத்தில்;
அதேநேரம்
அவிர்ந்திருக்கும் வேறிடத்தில்;
இருப்பதுமாய்;
இல்லாததுமாய்
இருப்பதுதான் அது;
அணையா
நெருப்பதுதான் அது.
கண்டேன் சேனல் நான்கை;
அது
காட்டியது சிங்களர் தீங்கை;
எரிந்தது என் ஈரக்குலை;
என் சொல்ல அந்த கோரக்
கொலை?!
பிரபாகரனின்
பிள்ளையே! வர இருக்கும்
வில்லங்கம் புரியாது
எதையோ
வாயில் சுவைக்கும்
வெள்ளையே!
ஆறிரண்டு வயதான
அம்புலியே!
காடையர்
கண்ணுக்கு
அம்புலியும் ஆனதென்ன
வெம்புலியே!
புலியின் புதல்வன்
புலியானான் என்றால்
பொருத்தம்
புல்லரின் புல்லட்டுக்குப்
பலியானான் என்பதுதான்

வருத்தம்!
வண்டு துளைத்தாலே
வலி தாங்காப் பூவே! அஞ்சு
குண்டு துளைத்துன்னைக்
கொண்டதென்ன சாவே?
சலனம் ஏதுமின்றி
சாவை எதிர்கொண்டாயாமே?
அடடா!
அதுதான் விந்தை!
கவுரவப் படுத்தினாய்
கண்ணா! நீயுன்
தந்தை
விந்தை!
முடிகூட
முளைக்காத
வழவழ மார்பும்; சின்னஞ்சிறு
வயிறு மடிப்பும் கண்டால்...
எவனாவது
ஏவுவானா தோட்டா?
ஏவினான்
என்றால்
புத்தனே
புலால் தின்னக் கூட்டா?
என் சொல்லி
என்ன?
தன்
தலையாய்
இலங்கை ஏற்றிருக்கிறது ஒரு
விலங்கை!

■





# அக்கினிக் குஞ்சு!

## கவிப்பேரரசு வைரமுத்து

□
எந்தப் போர்விதி சொன்னது
பட்டாம் பூச்சியின் சிறகில்
பாஸ்பரஸ் வீசலாமென்று?

வீரன் ஈன்ற மகன்
வெண்பளிங்கு மார்பழகன்
சுட்டபழமாய் வெட்டவெளியில்
கிடந்தபோது
விரைந்தோடும் காலமும்
உறைந்துற்றது ஒரு கணம்!

விருட்சம் விழுந்தபோதும்
அதிராத பூமி
இந்த இலை விழுந்தபோது
நடுங்கி அடங்கியது!



பாரதி வரிகளுக்கு
ஈழத்தில் பொருள் தந்தாயடா
இறவாச் சிறுவா
தழல்வீரத்தில் குஞ்சென்றும்
மூப்பென்றும் உண்டோ?

எங்கள் விதையை அழித்தன தோட்டாக்கள்
என்றேனும் ஒருநாள்...
விழுந்த தோட்டாக்கள் விதைகளாகும்
அன்றும் இன்றுபோல்
சகலகண்களையும் மூடிக்கொண்டுபோ
சர்வதேச சமூகமே!

■



# “நெருப்புக்குச் சாவில்லை”

## கவிக்கோ அப்துல் ரகுமான்

□

அந்தப் பால் வடியும் முகத்தில்
பகைவனின் முகத்தை
அவனால் எப்படிப்
பார்க்க முடிந்தது?

குழந்தைகள்
மழைத்துளி போன்றவர்கள்

மழைத்துளியில் ஏது
ஏரி, குளம், குட்டைகளின்
முகவரி?

எமனுக்கு உணவாகப் போகிறோம்
என்பது தெரியாமல்
ஏதோ உண்டுகொண்டிருக்கும்
அந்த வாய்

அங்கே அழுகைகளும்
செத்துக் கிடக்கின்றனவோ?

அச்சமே அறியாத
அந்தக் கண்கள்
யாரைப் பார்க்கின்றன?



மதி காட்டிச் சோறூட்டிய
மதிவதனியையா?

தன்னைத் தழுவ நேரமில்லாமல்
துப்பாக்கியையே தழுவிக்கொண்டிருந்த
தந்தையையா?

அல்லது
இருளே திகைக்கும்
எதிர்காலத்தையா?

பள்ளியில் இருக்க வேண்டிய
பருவத்தில்
பகைவனின் பதுங்கு குழியில்

கண்ணீராலும் ரத்தத்தாலும்
எழுதப்பட்டது
உன் பாடப் புத்தகம்

இந்த மூட்டைகளில்
என்ன இருக்கிறது?

புறநானூற்றின் சாம்பலா?

பரணி பாடிய இனத்தின்
ஓலங்களா?

இந்த அக்கினிக் குஞ்சு
வளர்ந்தால்
தன் காட்டையே எரித்துவிடும்
என்று அஞ்சியோ
பகைவன் உன்னை அணைத்தான்?

நெருப்புப் பொறி சாகலாம்
ஆனால்
நெருப்புக்குச் சாவில்லை

புத்தர் பிரானே!

புத்தம் சரணம் கச்சாமி
சங்கம் சரணம் கச்சாமி
தர்மம் சரணம் கச்சாமி

என்ற உங்கள்
கொள்கை மந்திரம்
இலங்கையில் மட்டும் ஏன்

ரத்தம் சரணம் கச்சாமி
படுகொலை சரணம் கச்சாமி
அதர்மம் சரணம் கச்சாமி
என்று மாறிப்போனது?

■



# திசை எங்கும் கேட்கும் கேவல்!

## இன்குலாப்

□

போராடும் இனத்தின் வாழ்வை வைத்துச்
சூதாடிய கொடிய நாட்களில்
எம் கண்ணெதிரிலேயே
மானுடத்தைப் பிய்த்துப் புசித்தபடியே
மரணம் நடந்தது.

எதிர்ப்பின் சொற்கள் எல்லாம்
தீர்ந்து போயின
எம் மொழியில்.

சொல்லற்று நிற்கிறேன்
இன்று
என் மௌனமும் துளைக்கப்படுகிறது

அனைத்தையும் முடித்தனர்
ஒரு தடயமுமின்றி.

குருதி ஓடையில் கால்நனைக்க அஞ்சிய
குருகுகள்
பால்மணம் மாறாப் பாலகரின்
கடைசி ஓலத்தை எடுத்துத்
திசைஎங்கும் கேவுகின்றன.

எல்லா முழக்கங்களையும்
இன்னும் துப்பாக்கிச் சத்தங்களையும்
மிஞ்சி
அந்தப் பார்வைகளின்
மௌனங்கள் பேசுகின்றன.

எந்தச் சொல்லாலும்
அந்தக் காயங்களை
ஈடு செய்ய முடியாது.

சுருண்டு வீழும்
ஒரு சின்னஞ்சிறு குருவி,
எரியும் ஓர் அரும்பு,
குருதி உறைந்த அச்சிறு துளைவழி
விரியும்
ஓர் இனத்தின் சாம்பல்மேடு.

துளையுண்டுள்ளது
என் எழுத்து மட்டுமன்று
இனிவரும் காலத்து
இளைய நிலாவும்.

துளைபட்டவை எல்லாம்
சாட்சி சொல்லும்

ஓரினத்தின் அளப்பரிய ஈகத்துக்கும்
அரசுகளின்
எல்லை கடந்த துரோகத்துக்கும்

■



# முகையிலே உதிர்ந்த பிள்ளை

## காசி ஆனந்தன்

□

பன்னிரண் டகவையில் பாலச்சந் திரன்உயிர்
பறித்தானே பாறை நெஞ்சன்
பொன்னெழில் இளம்பிறை நிலவொன்று மண்மிசை
பொத்தென்று வீழக் கண்டோம்!
சின்னவன் தமிழனாய்ப் பிறந்ததைத் தவிரஓர்
சிறுபிழை செய்த துண்டோ?
இன்னுயிர் இழந்தஎன் பிள்ளையின் நிழற்படம்
இரும்பையே உருக்கு தையா!

முற்றிக்காய் ஆகாமல் முதிர்ந்து பழுக்காமல்
முகையிலே உதிர்ந்த பிள்ளை
பெற்றதாய் தந்தையர் பக்கத்தில் இல்லாமல்
பிணமாகி விழுந்த பிள்ளை
சுற்றிச்சிங் களர்படை சூழத்தன் சிறுமார்பில்
சுடுகுண்டை ஏற்ற பிள்ளை
ஒற்றையாய் மடிகையில் என்னதான் நினைத்தானோ?
ஒன்றுமே தெரிய வில்லை!




அப்பன் தலைவனாய் இருந்தும் அவன்பிள்ளை
அலைவுற்றான் போர்க்க ளத்தில்!
முப்புறம் நெருப்பெழ நின்றபோர் முனையிலே
முறுவலோ டிருந்தான் பிள்ளை!

தப்பலாம் பிழைக்கலாம் எனும்சாவின் அச்சங்கள்
தவறியும் எழாத நெஞ்சம்!
ஒப்பிலாத் தலைமகன் வழிவந்த தமிழ்மகன்
ஒருவனைத் தொலைத்து விட்டோம்!

இணையற்ற சாவென்பார் தலைவர்கள் சாவினை!
இவன்சாவை என்ன சொல்வார்?
கணைபாய்ந்த தெனவையத் திசைநாலும் தணல்தோய்ந்து
கலக்கும்சா ஒன்று செய்தான்!
துணைவேண்டி அழவில்லை! துடித்ததாய்ப் படமில்லை!
துணிவோடு சாவை ஏற்றான்!
அணையாத விளக்கானான்! தமிழீழ வழக்கானான்!
அழுகின்றோம் அழுகின் றோமே!

பொய்யில்லை எங்கள் புலிப்பிள்ளை கொடுஞ்சாவில்
புயல்நாளை பிறப்பெ டுக்கும்!
துய்யநெஞ் சுடையவன் சின்னவன் தூங்கினான்
தூங்காது நாடு பொங்கும்!
ஐயிரு திசைகளும் நெருப்பெழும்! தமிழீழம்
அரசுகொண் டுலகை ஆளும்!
வையகம் உளவரை பாலச்சந் திரன்பெயர்
வரலாற்றில் நிலைத்தி ருக்கும்!

■



# தெய்வமும் உண்டு கொல்? தெய்வமும் உண்டு கொல்?

## கவிஞர் முத்துலிங்கம்

□

பூமலரும் நேரத்தில் பூங்கொடியை அறுப்பதுபோல்
பாலச்சந்திரன் உயிரைப் பாவிகள் அறுத்தனரே!

தாமரைத் தண்டில் தணல்அள்ளிப் போட்டதுபோல்
சின்னஞ்சிறு குயில்மேல் தீயள்ளிப் போட்டனரே!

வாழை இளங்குருத்தை வாளால் துணிப்பதுபோல்
தாழை இளமரத்தைத் தரைமீது சாய்த்தனரே!

பாவமென்ன செய்தான் பாலச்சந் திரக்குழந்தை?
பச்சைப்பொய் சொல்கிறதே பாழ்படப்போ கும்இலங்கை!

சுட்டுக்கொல் லும்முன்னே துங்கமணிப் பிள்ளையவன்
என்ன நினைத்தானோ? எதையெண்ணித் துடித்தானோ?

அமெரிக்க மற்றும் ஐரோப்பா தேசத்தால்
தமிழீழம் பெறுவதற்குச் சாத்தியம் இருக்கிறதா?

இதுவரை இந்தியா இலங்கைச் சிங்களர்க்கு
நீட்டிவரும் உதவிகளை நிறுத்த முன்வருமா?

பாவத்திற்கு மேல்பாவம் பண்ணும் வகையினிலே
அரக்கர்களுக் காதரவை மேலும் அளித்திடுமா?

எத்தனை கோயில்களை இடித்தான் சிங்களவன்!
ஆயிரத்து நானூறு ஆலயத்தை இடித்ததுவாய்
சிங்கள அமைச்சனே செருக்கோடு சொன்னானே!

இதையெல்லாம் கேட்டும் இன்னும் தமிழரினம்
ஆவேசப் படாமல் அமைதியாய் இருக்கிறதே!

இராஜபக்சே சொல்லிவரும் இமாலயப் பொய்களுக்கு
பாரதம் இன்னும் பக்கத்துணை யாயிருந்தால்
ஐ.நா. மன்றத்தில் அதுவும்குற் றக்கூண்டில்
நிற்கும் நிலைவருமே! நீணிலமே உமிழ்ந்திடுமே!
என்று பலவற்றை எண்ணி மனம்வருந்தி
ஏன்பிறந்தோம் தமிழினத்தில் என்றுநொந் திருப்பானோ?

பாலச் சந்திரனைப் பதைபதைக்கக் கொன்றவனை
காலதேவன் என்றைக்குக் காலால் மிதிப்பானோ?
நின்றுகொல்லும் தெய்வமென்று நீணிலத்தார்
சொன்னதெல்லாம்
இலங்கையைப் பொறுத்தவரை ஏன்இன்னும் நடக்கவில்லை
தெய்வமும் உண்டுகொல்! தெய்வமும் உண்டுகொல்!

■



# பேசுகிறான் பாலச்சந்திரன்

## தொல். திருமாவளவன்

□

தப்பிக்கத் தெரியாமலா
கடைசி வரையில்
களத்தில் நின்றோம்...

பதுங்க வழியின்றியா
பகைவனிடம் சிக்கினோம்?

மண்டியிட வாய்ப்பின்றியா
மாவீரர்கள் ஆனோம்?

பிரபாகரனின்
இன்னொரு பிள்ளை
எங்கோ ஓடி
ஒளிந்துகொண்டான் என
எள்ளி நகையாட
அந்த ஈனக் கும்பலுக்கு
எப்படி இடம் கொடுக்க
முடியும்?

அந்த பயந்தாங்கொள்ளிகளை
அவர்களின்
பதுங்கு குழியிலேயே
சந்தித்தோம்!

பாவம் பாலச்சந்திரன்!

பசிக்கு
ஏதோ சாப்பிடுகிறான்
என்று என் மீது
உங்களுக்குப் பரிதாபம்!

நாங்கள்
சயனைடு நஞ்சையும் கூட
அப்படித்தான்
சுவைத்துத் தின்போம்!

சாவுக்கு அஞ்சினால்தானே
பகை கண்டு அச்சம் வரும்?

என் விழிகளில்
அவனுக்கு
'மிரட்சி' தெரியவில்லை
'புரட்சி' அனல் வீசியிருக்கிறது!

என் முகத்தில்
அவன்
ஒரு 'அப்பாவி'யைப்
பார்க்கவில்லை!
என் அப்பாவைப்
பார்த்திருக்கிறான்!

ஈழமண்ணில் முளைக்கும்
புல்லும் அவனுக்குப்
புலியாய்த் தெரியும்!

வன்னிக் காட்டில்
மலரும்
காந்தள் பூக்களும்
அவனுக்கு
புதர்களிலிருந்து நீளும்
புலிகளின் நாக்குகளாய்த்
தெரியும்!

புலிகளுக்குப் பிறந்த
குட்டிப் புலியை
அவனால் எப்படி
குழந்தையாய்ப்
பார்க்க முடியும்?

பனிக்குடத்தில் புரளும்
பிஞ்சுக்கும் அஞ்சி
கர்ப்பிணிகளின்
அடிவயிறு கிழித்த
கோழைகளுக்கு
இளம்புலியாய்
வளரும்
என் மீது எப்படி
கருணை வரும்?

நாங்கள்
களமாடியது
கருணைக்காக அல்ல;
விடுதலைக்காக!

என் துணிச்சலின் அழகு
அவனைத் துளைத்திருக்கும்!

என் நெஞ்சுரத்தைச் சோதிக்க
நெருப்புத் துண்டுகளால்
என் நெஞ்சைத் துளைத்தான்!

என் குருதியில் குளித்த
குண்டுகள் யாவும்
'இவன் குட்டி பிரபாகரன்' என
கூவிச் சொன்னது!



வீரச்சாவைத்
தழுவிக் கொண்டே
ஈழத் தாயின்
மடியில் விழுந்தேன்!

எனக்கு
இரக்கம் வேண்டாம்;
ஈழம் வேண்டும்!

என் குடும்பத்தின் மீது
பரிவு வேண்டாம்;
பரிவு
போராளிகளுக்கு
இழிவு!

என் குடும்பத்தின்
உறுப்பினர்கள்
ஐந்து பேர் அல்ல
எட்டு கோடிப் பேர்!

எனக்குப்
பாசம் வேண்டும்...
அதைவிட
இனத்திற்குத்
தேசம் வேண்டும்!

■



# ‘அறங் கூற்றாகும்...’

## தமிழச்சி தங்கப்பாண்டியன்

□

அவசரமா ஓடுற அண்ணமாரே தம்பிமாரே
அன்னாட பொழப்புக்கு அல்லாடும்
அய்யாமாரே, அம்மாமாரே
ஒரு நிமிஷம் ஒக்காந்து
கேட்பியளா மக்கமாரே

அம்புலிக் கணக்கா வளர்ந்த மகன்
அரை நெலவாத் தேய்ஞ்ச கதை
புளி ஏப்பக்காரவுக மத்தியிலே
பசி ஏப்பக்காரன் பட்ட கதை
அரைக் கவளம் கஞ்சியைத் தட்டி
அப்பத்தைக் குரங்குகள் பிச்ச கதை
கோவணத்துணி பிடுங்கிப்
பட்டும் கைத்தறியும்
ராசாக்கமார் நெஞ்ச கதை
அத்தனையும் சொல்லுதய்யா அவன்
கருப்புப்பட்டி வைச்ச
காக்கிக்கலர் அரைடவுசர்.

பித்தம் தலைக்கேறி சித்தம் குலையுதய்யா
அவன் பிச்சு மிச்சம் வைச்ச
பிஸ்கோத்தைப் பார்க்கையிலே
அம்புட்டுச் சொந்தமும்
அங்காளி பங்காளியும்
இங்கால இருக்கையிலே
அறியாப் புள்ள அவன்
அலைபாயும் கண்ணுமுழி
நாண்டுக்கிட்டுப் போன நாக்கைப் போல
நட்டமா நிக்குதய்யா நடுநெஞ்சுக்குழி மேலே!

'ஏஞ்சாமி இப்படி'ன்னு
நாயத்தைக் கேட்கப்
பாவிமக நான்
நாலெழுத்துப் படிக்கலதான்
பாடையிலே போகையில
பக்கத்துல ஒப்பு வைக்க
பத்துப்பேர் கூடத் தேறாத
கைநாட்டுச் சிறுக்கி நான்
நாதியத்த நாட்டுப்புறந்தேன்.

இருந்தாக்க என்ன
ரெண்டு மக்க பெத்தெடுத்த
என் நெறஞ்ச வயிரெரிஞ்சு,
பால் சொரந்து ஓய்ஞ்ச இப்
பாவி மக முலை
ஒன்னத் திருவி எறிவேன்
நின்னு கொல்லட்டும் அது
நீலியின் வெஞ்சினமாய்!

■




# எங்கள் அப்பா!

## அறிவுமதி

□

அப்பா!
எல்லா அப்பாக்களையும்
போல்
நீயும்
இருந்திருந்தால்
என்
தாத்தாவும்
பாட்டியும்
இந்நேரம்
முசிறியில்
அங்கே
மூச்சோடு
இருந்திருப்பார்கள்!

அப்பா!
எல்லா அப்பாக்களையும்
போல்
நீயும்
இருந்திருந்தால்
என்
அக்கா
அமெரிக்காவிலும்



என்
அண்ணன்
கனடாவிலும்
நான்
இலண்டனிலும்
சொகுசாகப்
படித்துக்
கொண்டிருப்போம்!

என்
அப்பாவா நீ?
இல்லையப்பா!
நீ
நீ
நீ
எங்கள்
அப்பா!

எங்கள் என்பது
அக்கா
அண்ணன்
நான்
மட்டும்
இல்லை!

எங்கள் என்பது...
செஞ்சோலை
காந்தரூபன்
செல்லங்கள்
மட்டும்
இல்லை!

எங்கள் என்பது...
உலகெங்கிலும்
உள்ள
என்
வயதுக்கு
நெருங்கிய
என்

அண்ணன்கள்
என்
அக்காள்கள்
என்
தங்கைகள்
என்
தம்பிகள்
அனைவருக்குமானது!

ஆம்... அப்பா!
நீ
எங்கள்
அனைவருக்குமான
ஆண் தாய்'
அப்பா!
அதனால்தான்
சொல்கிறேன்.

நான்
மாணவனாக
இருந்திருந்தால்
என்
மார்பில்
மதிப்பெண்களுக்கான
பதக்கங்கள்
பார்த்திருப்பாய்!

நான்
மானமுள்ள
மகனாய்
இருந்ததால்தானே அப்பா
என்
மார்பில்
இத்தனை
விழுப்புண்கள்
பார்க்கிறாய்!

சிங்கள வீரர் ஒருவரது
மனைவியின்

வயிற்றில்
வளர்ந்த
கருவுக்கும்
கூட
கருணை காட்டிய
அப்பா!

உன்
பிள்ளை
உலக
அறமன்றத்துக்கு
முன்.
ஒரே
ஒரு
கேள்வி
கேட்கிறேன்!

பன்னிரெண்டு
வயது
பாலகன்
துப்பாக்கி
தூக்கினால்
அது
போர்க்
குற்றம்!

பன்னிரெண்டு
வயது
பாலகன்
மீது
துப்பாக்கியால்
சுட்டால்...
இது
யார்க்
குற்றம்!

என்னைச் சுட்ட
துப்பாக்கியில்
எவர்


எவர்
கைரேகைகள்!

உலக
அறமன்றமே!
உன்
மனசாட்சியின்
கதவுகளைத்
தட்டித்
திறக்க

உலகெங்கிலுமுள்ள
பாலச்
சந்திரர்கள்
அதோ
பதாகைகளோடு
வருகிறார்கள்!

பதில்
சொல்லுங்கள்!

■





# புலிக்குட்டி

## கவிவேந்தர் மு.மேத்தா

□

ஒரு
புலிக்குட்டியைச்
சுட்டுப் பொசுக்கின
எலிக்குட்டிகள்!
பூனைக்குட்டிகளின்
ஆரவாரத்தோடும்
ஆசிர்வாதத்தோடும்

■



# ஒளியுடன் விளையாடுகிறாய்

## பழநிபாரதி

☐

பிரபாகரப் பிஞ்சே!
மதிவதனிப் பிறையே!
உன்னைச் சுற்றிலும் அடுக்கிவைக்கப்பட்டிருந்த
மணல் மூட்டைகளில்
மனிதக் கடலின் ஈரம்
வற்றிப் போயிருந்தது!

ஈரம் வற்றியது அறியாமல்
வாய் திறந்து தவித்த மீன்குஞ்சுகள்
உன் கண்களில் துடித்தன!

மரணத்தின் நதிச் சுழலை
மீன்கள்
அவ்வளவு அமைதியாய்
கடக்குமா என்ன?

அது எரிமலையின் முன்னமைதியா
பெரும்புயலின் பின்னமைதியா
தெரியவில்லை!

திக்கற்ற தமிழர்களின்
வெள்ளந்திக் கண்கள்
உன்னுடையதாயிருந்தன!

அங்கே
காணாமல் போன
உன் சகவிளையாட்டுப்பிள்ளைகளின்
தனிமை
உன்னைச் சூழ்ந்திருந்தது!

'ஊமையானது கோயில் மணி
உறைக்குள்ளே போனது நாதஸ்வரம்'
என்றான் புதுவை இரத்தினதுரை!

உன் அமைதி
ஆலயமணிகளை உலுக்குகிறது!

உன் மூச்சில்
ஆயிரம் நாதஸ்வரங்கள்!

சவத்துணியான
போதிமர நிழலெடுத்து
துறவாடை அணிந்துகொண்டவர்களையும்
தலைப்பாகை கட்டிக்கொண்டவர்களையும்
முக்காடு போட்டுக்கொண்டவர்களையும்
உன் அமைதி
உற்றுக் கவனித்துக்கொண்டிருக்கிறது!

மூடப்பட்ட உன் கண்கள்
மீண்டும் எப்படி
இப்படி பிரகாசிக்கின்றன என்று
அவர்கள்
உன்னைக் கவனித்துக்கொண்டிருக்கிறார்கள்!

நீ உன்னோடு மரித்த
இலட்சம் குழந்தைகளோடு
ஒளியுடன்
விளையாடிக்கொண்டிருக்கிறாய்!

■



# தேசத்தின் சுடர்!

## தாமரை

□

வழியெங்கும் பிணங்கள்
பற்றியெரியும் தீக்கோளங்கள்
புகை வளையங்கள், உருகி ஒழுகும் உடல்கள்,
ஓலங்கள், அவலக் குரல்கள், முனகல்கள்...

ஊடாக நடந்து செல்கின்றன
இரண்டு பிஞ்சுப் பாதங்கள்...
மெய்க்காப்பாளர்கள் சூழ
ஓர் இளவரசன் செல்கிறான்
மகுடம் அணியாத ஒரு மாமன்னனின்
கட்டளையை ஏற்று...

நரகத்தின் வாசலை அவர்கள்
அடைந்தபோது
தனித்தனியாகப் பிரிக்கப்பட்டனர்...
மணல் மூட்டைகளின் சிம்மாசனத்தில்
அமர்ந்திருக்கிறான் இளவரசன்...


கண்ணெதிரே காப்பாளர்கள்
சிதைக்கப் படுகிறார்கள்...
தாயும் தந்தையும்
அகற்றப்பட்டு விட்டனர்
சகோதரன் சகோதரி கதை
முடிந்து விட்டிருந்தது...
தூக்கி வளர்த்த அண்ணன்மார்கள்
அக்காமார்கள் துடிதுடிக்க
வதைசெய்யப் படுகின்றனர்...

ஓடி விளையாடிய மண்
கைப்பற்றப்பட்டது
தலை கோதிய காற்றும்
சிறைப்பட்டு விட்டது...
மக்களும் அழிந்தார்கள்...

சூரியன் கண்ணை மூடிக்கொண்ட
அன்றைய காலையில்
'எம்முடைய' என்ற எல்லாம்
அகற்றப்பட்டுவிட்டன...

என்ன முயன்றும் அகற்றமுடியவில்லை
அவர்களால்
அகன்ற இரு விழிகளிலிருந்து
அச்சமின்மையையும்
குழந்தைமையையும்!

■



# மார்பில் அல்ல முதுகில்தான்! குண்டு அல்ல குத்துதான்!

## த.பழமலய்

□

''செத்துப் பிழைத்தேன்'' என்றார் நண்பர்.
''அப்படியா'' என்று நகையாடினேன் நான்.
எமலோகம் சென்று வந்தவரிடம் கேட்டேன்
''எமனுக்கு இன்னும் எருமைக் கடாதானா?
மாணிக்கவாசகர் பாடும்
'திருப்படையாட்சி'யும் 'மழுப்படையாட்சி'தானா?''

''நீங்கள் இப்படித்தான் பேசுவீர்கள்.
எமன் இப்போது எமலோகத்தில் இல்லை.
மறுபிறவி எடுத்துப் பூமியில் இருக்கிறார்.''
''எங்குஎன்று நான் சொல்கிறேன்
இலங்கையில்!''

புத்தருக்குச் சாதகக் கதைகள் உண்டு.
அவர்கள் மறுபிறவியில் நம்பிக்கை உடையவர்கள்.
எமன் இலங்கையில் பிறந்திருக்கலாம்.
அவர்கள் மறுக்கமாட்டார்கள்;
பெருமைப்படுவார்கள்.

அவன் கொல்லமாட்டான்.
மகிந்தர்கள் கூடக் கட்டளைகள்தாம் இடுகிறார்கள்;
பொன்சேகாக்கள் கொல்கிறார்கள்.

கோழைகளால் கொல்ல முடியாது;
ஆணைகள்தாம் சொல்ல முடியும்.
கொத்துக் குண்டுகளை வீசச் சொல்வார்கள்.

கொத்துக் குண்டுகள்
ஒரு கூட்டத்தை அழிக்க மட்டும் அல்ல;
ஒருவரை அழிக்கவும்.
அய்யனுக்குக் கொத்துக் குண்டு.
அருந்தமிழ் மைந்தனுக்கு அய்ந்து குண்டு.


சுட்டவனை/ சுட்டவர்களை
நான் பாடுகிறேன்.
மார்பிலே சுட்டிருக்கிறார்களே
என்னும் மாட்சிக்காக.
மார்பில் சுடுபவர்களும், மார்பில் சுடப்படுபவர்களும்
மதிக்கப்பட வேண்டியவர்கள்.
அது, பிரபாகரனுக்கும் தம்பிகளுக்கும்
நேர்ந்ததோ இல்லையோ
பாலச்சந்திரனுக்கு நேர்ந்திருக்கிறது.

வரலாறு மறக்காது.
ஆனால் நேற்றும், இன்றும்
முதுகில் குத்தியவர்களுக்கு / குத்துபவர்களுக்கு
நானும் நீங்களும்
'பிழைத்துப் போகிறார்கள்' என்று கூடப்
பெருந்தன்மை காட்டலாம்.
வரலாறு மன்னிக்காது.
இவர்களுக்கு மார்பில் குண்டேந்தும்
'படை மாட்சி' இருக்காது.

திருவள்ளுவர் பாடமாட்டார்.
உரையாசிரியர்களும் உரை எழுதார்.
இவர்களுக்கு
மார்பில் அல்ல, முதுகில்தான்!
குண்டு அல்ல, குத்துதான்!

■





# காட்சி!

## ஆறாவயல் பெரியய்யா

□

மயில்களின் ஆட்டமும்
வண்டினப் பாடலும்
பண்ணமைத்த இன்னிசையும்
கண்விழித்த நோக்கரும்
அனுமதிக்கப்பட்டிராத
தடுப்பரண் மேடை

புறக்குண்டுகளை தாங்கித் தடுக்கும்
மணல்மூட்டைகளே திரைச்சீலை

மேடையில்
மாமல்லை வெண்ணைக் கல்லில்
செதுக்கிக் கிடத்திய
பிள்ளைநிலாச் சிலையென
உச்சித்திசை நோக்கி
உயிர்நீங்கிக் கிடக்கிறது
தாயைப் பிரிந்த
சேயின் அரும்புமேனி



அரிச்சுவடியும் எண்சுவடியும்
அறிந்து நிறைத்திராத
அரும்புநெஞ்சுனுள்
எதைத்தேடி பாய்ச்சப்பட்டன
இத்தனை துப்பாக்கி ரவைகள்?

அரும்புநெஞ்சினன் உயிர்க்கொலை
அரங்கேறிய சிறுபொழுது
விழிப்பிற்கும் உறக்கத்திற்கும்
உறக்கத்திற்கும் விழிப்பிற்கும்
நுழைவாயிலான
குருதி மலைமுகில் தழுவும் அந்தியா?

முருகு அலைமயில் ஏறும் சந்தியா?
அரும்புநெஞ்சினன் உயிர்க்கொலை
அரங்கேறிய மேடைப் பின்புலத்தில்
அவன் உருவை ஆற்றுவதற்காக
முன்பே ஆக்கப்பட்டிருந்தனவோ
கீழ்நோக்கிய குழியும்
மேல்நோக்கிய சிதையும்

அரும்புநெஞ்சினுள்
வீரிய விசைக் குண்டுகள்
பாய்ந்து உயிர் பறிப்பதற்குச்
சற்றுமுன்னம்
நிகழ்ந்த உரையாடல்
அவனால்
முக்கனி இனிப்பொடு சொல்லப்பட்டதா?
வேம்பின்காய்க் கைப்பொடு செவிக்கப்பட்டதா?

இதற்கெல்லாம்
சிதைந்த அரும்புவிட்டுப்
பறந்த ஆத்மாவான
அவனும் சொல்லான்
அவனியும் அறியா

வானளக்கும்
வெளியரங்கப் பெருந்திரையில்
நான் காண்பதெல்லாம்

புருவமும் இமையுமற்ற
சிரவிழிச்
செங்கண் மணிப்பரலால்
ரௌத்திரம் விரித்த
புலியாடைக் கதிரை நினைந்து
தாய்ப்பால்க் கவுச்சி
வாய்மாறாப் பாலகனை
கொன்றுஇனக் குணம்காட்டிய
நரமாமிசப் புகைநாற்றச்
சிங்களனின் சிறுநகை முகத்தில்
வடிகிறது
சால்புடைய மானுட உலகம்
காறித்துப்பிய
எச்சில்!

■



# தலைமுறைகளின் ரகசியக் காயம்

## மனுஷ்யபுத்திரன்

□

குழந்தைகளைக் கொல்பவன்
விடுமுறையில் வீட்டுக்குச் செல்லும்போது
கொல்லப்பட்ட குழந்தைகளின்
புகைப்படங்களை தன் குழந்தைகளுக்காக
எடுத்துச் சென்றான்

விளையாட்டுப் பொருள்கள்
தின்பண்டங்கள்
புத்தாடைகள் எதையும் விட
கொல்லப்பட்ட ஒரு குழந்தையின் புகைப்படம்
குழந்தைகளுக்கு மிகுந்த வியப்பூட்டுகிறது.
படைவீரனின் குழந்தை அவனிடம் கேட்டது
''நீ உன் கைகளாலேயே
இவனை சுட்டுக் கொன்றாயா'' என்று.

படைவீரன்
''ஆம்... உன்னை அணைத்துக் கொள்ளும்
அதே கைகளால்தான்
அவனை சுட்டுக் கொன்றேன்
முன்பொரு நாள்
துல்லியமாக ஒரு பறவையை

சுட்டு வீழ்த்தினோமே
அதே போலத்தான்'' என்றான்.

குழந்தைகள் ஏன் கொல்லப்படுகிறார்கள் என்பதை
குழந்தைகளால் புரிந்துகொள்ள முடிவதில்லை
அது ஒரு விளையாட்டு என்றுதான்
அவர்கள் நினைக்கிறார்கள்
உண்மையில் மொத்த உலகமுமே
அதை அப்படித்தான் புரிந்துகொள்ள விரும்புகிறது
அது அமைதிக்கான போரில்
ஒரு தந்திர விளையாட்டு

நான் ஒரு முறை
வேறொரு யுத்தத்தில்
நிராதரவாகக் கிடக்கும்
ஒரு குழந்தையின் பொம்மை
புகைப்படத்தைக் கண்டேன்
நான் அந்த பொம்மைக்குச் சொந்தமான
குழந்தை என்னவாகியிருக்கும் என
நீண்ட நாட்கள் யோசித்துக்கொண்டிருந்தேன்

இப்போது கற்பனைகளுக்கு அவசியமில்லை
நிராதரவாகக் கிடக்கும்
கொல்லப்பட்ட குழந்தைகளே
ஏராளமாகக் கிடக்கிறார்கள்.

ஒரு குழந்தையைக் கொல்வதற்கு முன்
''அவன் பசிக்கிறது'' என்கிறான்
அவனுக்கு தின்பதற்கு ஏதாவது தருகிறார்கள்
குடிப்பதற்குத் தண்ணீர் தருகிறார்கள்
அந்த படைவீரர்களில் யாராவது ஒருவன்
அந்த சிறுவனை ரகசியமாக
முத்தமிட்டிருக்கவும் செய்யலாம்.
கொல்லப்படவிருக்கும் ஒரு குழந்தை
அங்கே வெறுமனே அமர்ந்திருக்கிறான்.
இந்த உலகம் இன்னும் எவ்வளவு
கருணைமிக்கதாக இருக்கிறது
என்பதை நினைக்கும்போது
நான் மனமுடைந்து போகிறேன்


நீங்கள் இந்தக் கதையை
எத்தனையாவது முறை படிக்கிறீர்கள்?
வேண்டாம்
உங்கள் காதுகளை மூடிக்கொள்ளுங்கள்
உங்கள் கண்களை மூடிக்கொள்ளுங்கள்
உங்கள் இதயத்தை மூடிக்கொள்ளுங்கள்
ஒரு சிறுவனின் பச்சை ரத்தம்
இந்த மண்ணில் பெருகுவதை
ஒரு தியானத்தைப் பார்ப்பதுபோல
பார்ப்பதற்கு ஒரு பயிற்சி தேவை
நீங்கள் ஒரு பாலச்சந்திரனின்
படத்தை மட்டும் பார்த்தால் போதாது
இன்னும் நிறைய படங்கள்
நமக்காகக் காத்திருக்கின்றன.

இன்றைய என் மதுவில்
கொல்லப்பட்ட ஒரு குழந்தையின்
ஒருதுளி ரத்தத்தை கலந்து விடுகிறேன்
பிறகு எனது பரம்பரையின்
எல்லா மதுக்கோப்பைகளிலும்
அந்த ரத்தத்தைக் கலக்கிறேன்
எனது குழந்தைகளுக்கு
அந்த ரத்தத்தின் ருசி
என்னவென்பதைக் காட்டுகிறேன்

எங்களது ஒவ்வொரு தலைமுறையின்
ரகசிய காயமாக அந்த ரத்தத் துளி
இனி பயணம் செய்துகொண்டே இருக்கும்.

■





# மரணித்தும் வாழும் வீரப் புலிக்குட்டி!

## சுப.வீரபாண்டியன்

□

பிறகுதான் தெரிந்தது
என்னைப்போல் அழுதிருக்கின்றனர்
இன்னும் பலரென்று!

மார்பில் ஐந்து குண்டுகள் தாங்கி
மரணித்துக் கிடந்தாய் மகனே...
அந்தப் படம் பார்த்துக் கூட
அசைந்து விடவில்லை எங்கள் இரும்பு மனம்.



கள்ளமில்லாத உன் கண்கள் எதையோ
கவனித்துக் கொண்டிருக்க
கடித்துக் கொண்டிருந்தாயே ஒரு
ரொட்டித் துண்டை....
அந்தப் படம்... அந்தப் படம்தான் மகனே
அடிவயிற்றில் நெருப்பை அள்ளிக் கொட்டியது.

எங்கு பார்த்தாயோ
எதைத் தின்றாயோ
என்ன நினைத்தாயோ அந்த
இறுதி நிமிடங்களில்...
எங்களுக்குத் தெரியாது
பயந்திருந்தால் கொஞ்சம் நீ
பதறித் திரும்பியிருந்தால்
ஒரு குண்டாவது
உன் முதுகில் பாய்ந்திருக்கும்
இல்லை மகனே

எல்லாக் குண்டுகளையும்
ஏந்தி இருக்கிறாய் உன் நெஞ்சில்...
புலி பெற்ற குட்டியல்லவா?
ஒன்று மட்டும் உறுதி மகனே
புலிகள் மிச்சம் வைத்த சிங்கள வெறியைப்
புலிக் குட்டியின் மரணம்
போட்டுப் பொசுக்கும்.

■



# 'விதை நெல்லே'

## காமகோடியன்

□
போராளியின் மைந்தனவன்
போராளியில்லை!
போராடும் வயதுமில்லை;
போர்க்குணம் சிறிதுமில்லை;
சூரியனில் பூத்த சுந்தரப் பிறை;
'பால'சந்திரன்; அவ்வளவே!

ஆணவ ராணுவக் கிடங்கில்
அகத்தை முகத்தில் காட்டிய
அம்புலி!
துயரமும் பயமும் கலந்து
சாந்தம் நீந்திய காந்தம்;
புத்தனுக்கு 'மனித மாமிசம்'
படைக்கும் 'பாவ' பூமியில்
புத்தனாய் அமர்ந்திருந்த பாலகன்;
அந்தப் பாலகன்,
ஈழ வயலின் 'விதைநெல்'

கிளியைப் பார்த்தால்
கிறுக்கனும் ரசிப்பான்!
வெண்முயலைக் கண்டால்
வெறியனும் சிநேகிப்பான்;
கொஞ்சும் மைனாவை
வஞ்சகனும் கொஞ்சுவான்;
அந்தப் பஞ்சுச் சிலையை

பஞ்சாமிர்தத்தை
நெஞ்சில் சுட்டான் நீசன்;
யாரவன்? யாராவன்?

மடையனா? கடையனா?
'மனிதம்' மரித்த அரக்கனா?
சந்தனக் கொடியை எரித்த
கந்தகப் பொடியா?
எங்கள் ஒப்பாரிக்கும் ஒப்பாத
உலுத்தனா? 'சீழ்' நாறும்
சீக்காளியா? சீ... சீ...
குண்டு துளைத்ததே
குறிஞ்சி மலர்ச் செம்பூவை!
எங்கள் கண்களும் கண்ணீரும்
காந்து கின்றதே!
உள்ள நெருப்பு சட்டென
உயிரையும் பற்றிக் கொண்டதே!

நீ நினைக்கிறாய்...
பச்சை உடம்பில்
துளை போட்டாய் என்று;
இல்லை! இல்லை!
பச்சை மூங்கிலில்
துளை போட்டிருக்கிறாய்!
அந்தப் புல்லாங்குழல்
புரட்சிகீதம் இசைக்கப்போகிறது!

உயிரை உயிர்கொண்டு தேடி;
அழைத்து வந்து உயிர்த்தெழுந்து;
உன்னை... அழிக்கப்போகிறது!

அந்த ஈழவயலின் விதைநெல்;
நூறாகி, லட்சமாகி, கோடியாகி
கொடி நாட்டப் போகிறது!

கயவர்களே!
காலம் பதில் சொல்லும்
காத்திருங்கள்!

■



# உறைந்த உயிரில் உறங்காத வரலாறு!

## கோவி.லெனின்

□

சக பிள்ளைகளோடு சடுகுடு ஆடும் அகவை.
அவன் கண்களில் ஒளிர்கிறது
களங்கமில்லாக் குழந்தைப் பார்வை.

படுபாதகன் படையிடம் சிக்கி
நெஞ்சிலே குண்டு தாங்கி
வீழ்ந்தும் வீழாத வீரக்கொழுந்தின்
மரண நொடிகளைப் பதிவுசெய்த அந்தக்
கொடூரப் புகைப்படத்தின் முதுகுப் பக்கத்தை
உங்களில் எத்தனை பேர் கவனித்திருப்பீர்கள்?

இயற்கையால் தொப்புள் கொடி அறுக்கப்பட்டு
இலங்கையால் உயிர்த்தலம் நசுக்கப்பட்ட
சகோதர ஈழத்தின் ரத்த வரலாற்றை
வெறுமையின் எழுத்துகளால் பதிவிட்டிருக்கிறது
அந்தப் புகைப்படத்தின் முதுகுப் பக்கம்.

பாலகன் படத்தின் முன்பக்கம் சொல்லும்
ஈழத்தின் துயரச் செய்தி
இங்கே சிலருக்கு அரசியல்
சிலருக்கு வியாபாரம்
சிலருக்கு வாழ்நாள் பிழைப்பு.

முதுகுப் புறத்தில் பொதிந்திருக்கிறது
புறமுதுகு காட்டாதவர்களின் வீரமும்
மண்மீட்பிற்கான உயிர்த்தியாகமும்
இந்த இனத்திற்கேயுரியத் துரோகமும்
உட்பகையும் சரிவுகளும் பேரழிவும்.

இனமழித்த கொடுங்கோலர்களின்
குருதி வழியும் குரூரச் சிரிப்பினை
கைதட்டி ரசிக்கின்ற வல்லரசுகளும்
வஞ்சம் தீர்த்த அரசுகளும்.

உலகம் உறங்க தர்மம் மயங்க...
ஏதிலியாய் நிர்கதியாய் அலையும்
இனத்தின் விடுதலையை
இந்தக் கவிதை பெற்றுத்தரப் போவதில்லை
எனினும், காலம் விட்டுத் தரப்போவதில்லை.

■



# அறத்துப்பால்!

## நா.முத்துக்குமார்

□

கண்ணீர்த் துளியை மையாய் மாற்றி
கவிதை எழுதுகிறேன்! உன்னை
கழுகுகள் சுற்றிக் கொன்றதை நினைத்து
கனவிலும் அலறுகிறேன்!

ஐயோ உந்தன் புகைப்படம் பார்த்து
அதிர்ந்து நடுங்குகிறேன்! நான்
அடிக்கடி எந்தன் மகன்முகம் பார்த்து
உன்முகம் திரும்புகிறேன்!

ஒருகணம் திகைத்து மறுகணம் பதைத்து
மறுபடி புலம்புகிறேன்! அந்த
கடவுளை நிறுத்திக் கேள்விகள் கேட்க
வெறியுடன் கிளம்புகிறேன்!

அன்பே! அமுதே! ஆரடித் தாரோ?
தெரிந்தே வருந்துகிறேன்! எங்கள்
அத்தனைத் தமிழர் சார்பிலும் உந்தன்
மன்னிப்பை வேண்டுகிறேன்!

எத்தனை எத்தனை கனவுகண் டாயோ
என்றே வாடுகிறேன்! உன்னை
எவனழித் தானோ அவன்குலம் அழிய
அறம்நான் பாடுகிறேன்!

■





# பாலச்சந்திர பிரபாகரம்

## கவிஞர் புவியரசு

□

கழுவிக்கொண்டிருக்கிறேன்
கறை போகவேயில்லை!

ராம ராவணர்கள்
எப்போதோ
கைகழுவிப் போனார்கள்!

ராவணன்
திரிகோணமலைக் கடற்கரையில்
கைகழுவிக்
காணாமல் போனான்!

இராமன்
சரயு நதிக்கரையில்
கை கழுவுகையில்
மூழ்கிச் செத்தான்!



கங்கையில் கண்ணன்
அயோத்திக் குளத்தில்
அசோகன்
பிலாத்து
செங்கிஸ்கான்
இட்லர் எல்லோருமே
கைகழுவியாயிற்று!

இருபத்தோராம் நூற்றாண்டு
ராவணன்
புத்தம் சரணம் கச்சாமியில்
கைகழுவி
சீனச்சரிகை பார்டர்
அமெரிக்க டவலில்
சுத்தமாய்க் கை துடைத்து
சாப்பிடப் போய்விட்டான்!

ஐயோ,
என் அன்புச்செல்வன்
பாலச்சந்திர பிரபாகரா;
நீ சாக்லெட் தின்று
வாய் துடைக்கும் முன்பே
உன்னைத் துடைத்துப்போட்டனர்!
ஐந்து குண்டுத் துளைகள் வழியே
பீய்ச்சியடித்த ரத்தம்
தமிழனாகிய
என் நெஞ்சமெல்லாம்...

நான் எதில் குளித்து
எதில் துடைப்பேன் பாலா!

■



# பேசும் படம்!

## விவேக்

□

பிஸ்கட் உண்ணும்
பிஞ்சுக் குஞ்சை
பிணம் தின்பவர்கள்
சுட்ட படம்!

மலராத மொட்டின்
மார்புக் கூட்டை
மனித மிருகங்கள்
கிழித்த படம்!

ஆட்டுக்குட்டியின்
அறியாத் தருணத்தில்
வேட்டை நாய்கள்
விளையாடிய படம்!

மலைமுகட்டில் இருந்த
மனிதாபிமானம்
தலைகீழாய் வீழ்ந்து
தவித்த படம்!

‘ஓ’வென்று அழுது
ஒழுகிய ரத்தமெல்லாம்
சாவின் விழிவழியே
சரிந்து வழிந்த படம்!

கரும்புத் தண்டின்மேல்
எறும்பு ஊறும்போது
இரும்புத் தடியாலே
இடித்துக் கொன்ற படம்!

சிறுத்தையின் குட்டியை
சிறுநரிக் கூட்டங்கள்
மருண்டு பார்க்கையில்
மார்பிலே சுட்ட படம்!

புலியின் குட்டிதனை
பூனைபோல் தூக்கிவந்து
அலிகள் கூட்டமொன்று
அடித்துக் கொன்ற படம்!

எந்தப் படம் பார்த்தாலும்
கலைகின்ற மேகம்தான்
இந்தப் படம் தமிழ்நாட்டின்
நிலையான சோகம்தான்!

மற்றவர்கள் அமைதிகாக்க
மாணவர்கள் புரட்சிபூக்க
குற்றம்கண்டு தமிழர்கள்
கொதித்து எழுந்த படம்!

மானமுள்ள தமிழனுக்கு
மனசாட்சி கூசும்படம்
ஈனஓநாய்கள் வரைந்த
இரக்கமில்லா பேசும்படம்!

பால்முகத்தின் பூவிழியில்
படுகொலைகள் தெரிந்தாலும்
நாளை உண்டு தமிழ்ஈழம் என்று
நமக்குச் சொன்ன படம்!

■



# இளம்பிறையே பாலச்சந்திரா நீதானடா சாட்சி!

## சுப.உதயகுமாரன்

□

அற்றைத் திங்கள் அவ்வெண்ணிலவில்
பண்ணையில் கூடி பலரோடு குடித்திருந்த
கொலைகார பாதகன் குபீரென்று சிரித்தான்
ஏன் சிரித்தாய் என்று வினவினர் தோழர்கள்
ஏதுமில்லை என்றவன் எதையோ மறைத்திடவே
விடவில்லை தோழர்கள், விடாப்பிடியாய் நின்றிருந்தார்.


அன்றொருநாள் ஒருசிலரை ஆற்றங்கரையில்
அகாலநேரத்தில்
அப்படியே போட்டுத்தள்ளி அங்கேயே புதைத்துவிட்டேன்
எல்லோரும் எளிதில்சாக ஒருவன்மட்டும் உயிர்விடும்போது
இளம்பிறையே பாலச்சந்திரா நீதானடா சாட்சி என்றான்
தலைநிமிர்ந்து தற்செயலாய் விண்ணைப் பார்த்தேன்
அந்த இளம்பிறை பாலச்சந்திரன் என்கண்ணில் பட்டான்.

பாலனே சந்திரா பூமிக்கு நீயும் புறப்பட்டு வருவாயா?
நீதிமன்றத்துக்கு வந்து நீயும் நிஜசாட்சி சொல்வாயா?
குடித்து குதூகலித்திருந்த கொலைகாரன் குலுங்கிச்
சிரித்தான்
குடிகார நண்பரெல்லாம் கூவிச்சிரித்துக் கும்மாளமிட்டார்
ஐந்தாறு மாதங்களில் அவர்களுக்குள் ஒரு சண்டை வந்து
அகிலமறிந்தது அக்கொலையை அடுத்தடுத்த
விளைவுடனே!

இனப்படுகொலை பாவியும் இணைந்திருந்த பாதகரும்
முதிராத இளம்பிறை முகிழ்க்காத பாலன்தானே என்றிருந்தார்
அஞ்சாது, அழாது, அரற்றாது,
அலட்சியமாய் ஏறிட்டுப் பார்த்து
விதியே என்செய்ய நினைத்திட்டாய் என் தமிழ்ச் சாதியை?
வினவிக்கொண்டிருந்த நீ
இப்படி நான்காண்டுகளுக்குப் பிறகு
நியாயம் கேட்டு நிற்பாய் என்று நினைக்கவில்லை
நாசவாதிகள்

தேரா மன்னா செப்புவதுடையேன் என
சிலம்பெறிந்து நீதிகேட்ட
கண்ணகிக் குலப்பிறப்பே கண்மணியே
வா மகனே வந்து கேள்!
எங்கும் பிறவாதவன் உறுதிப் பிறழாதவன்
இரும்புப் பிரபாகரன்
எங்களுக்குத் தந்த தமிழர் குலவிளக்கே தலைநிமிர்ந்து கேள்!
இது இனப்படுகொலை இல்லையென்றால் வேறு எது?
இப்போதும் தமிழருக்காய் எழவில்லையென்றால் நீ யார்?

■



# வாய்க்கரிசியும் பிச்சையா?

## ராதாகிருஷ்ணன் பார்த்திபன்

☐

'குண்டுப் பையன்'
'குண்டுப் பையன்'
உண்டு குண்டு
ஆன பையனை
ஆசையாய் செல்லமாய்
ஆக்கியோர் அழைப்பதுண்டு! ஆனால்

ஆனால் துப்பாக்கியின்
குண்டு உண்ட பையனை?

புள்ளி வைத்து
கோலமிட்டு
மையத்தில்
பரங்கிப் பூ
வைப்பதுண்டு அதை
பிடுங்கிச் சென்று
பீரங்கி கொண்டு
குண்டு பொழிந்து
சல்லடையாய்...
கொடூரமாய்...
அட்டைப் படமாய்...


அட்டைப் பூச்சிகள் ஆயிரம்
கண்களில் ஒட்டி
ரத்தம் உறிஞ்சும்
ரணத்தில்
பிணமாகிறது மனம்.

ஈழச்சுதந்திரக் காற்றே,
உயிர் மூச்சானவரின்
உயிரணுவில் உதித்த
பாலச்சந்திரனின் உருவம்,
யாழ் பாழ் மண்ணில்
தமிழ்க் கொழுந்தாய்
உயிர்க் கொலைந்த
பாவப் புத்ரர்களின் பிம்பமே!

புலிச் சின்னம் அவன்!
விடுதலைக் கொடியின்
நடுதலை முத்திரையாம்
புலிச் சின்னம் அவன்!
முன் பதிவு செய்யவே
மண் பதிந்து கிடக்கிறான்
அந்த விபர 'மாணவன்'.

கடைசி சொட்டு உயிர்
பட்டுத் தெறித்ததில்
சிலிர்த் தெளிந்ததாலே,
மானுடம் வெல்லும்
'போர்' ஆட்டத்தில் இன்று
மாணவர்கள் கரம்.

மாணவன் 'கரம்' வைத்தால்
பூமிப் பந்தை கால்பந்தாடுவான்.



வீரத்தின்
வீரிய'மவனின்'
மரண மௌன ஓலம்
ஐ.நா. காதுகளில்
Buds ஐ விட்டு
குத்திக் குடைந்து
கிழிக்கிறது.

தமிழகமும்
தமிழர் அகமும்
அசலாய் துடிக்கிறது.
இதயத்தின் மத்தியில்
ஈரத்தால் மேடையிட்டு
தனித்தாளும் தமிழுக்காய்
உண்ணா நோன்பும் அனுசரிக்கிறது ஆயின்
இந்தியாவின் மத்தியில்
தமிழர்கள் நிலைதனை
எண்ணா வீம்பும்
நீடிக்கிறதே!

தன் பலமறியா தும்பிக்கை
சில்லறைக்கு ஏந்தும் கையாய்...
தனித்தனி தீவென
தரணியெங்கும் சிதறிய
தமிழினச் சினம்
கை கோர்த்து
காறித் துப்பினாலே
காரிய சித்தியாகும்.


கல்வியும் வீரமும்
கலவி கொள்ள,
கர்ஜிக்க ஜனித்தவன்
தமிழன்!

விரல் கீறி
இருள் கிழிய
விடியலை இழுத்து வந்து
வானத்தில் ஆணி அடிப்போம்.
அதை விடுத்து...

வாய்க்கரிசியைக் கூட
பிச்சை எடுப்பதைப் போல
''அம்மா தாயே! தா... தா...''வென
Poster அடித்து Political
Post-mortem செய்ய
வேண்டாமென
வேண்டி
வணங்கி
வேண்டுதல் விடுக்கிறேன்.

இப்படி.... ... ...
நீண்டு கொண்டே இருக்காமல்
வெற்றி என்ற முற்றுப்புள்ளியை,
கர்ப்பச் சிறைகளிலிருந்து
வெளிவரத் துடிக்குமந்த
தமிழ்க் கருக்களின்
கன்னத்தில் திருஷ்டி
பொட்டிட வேண்டும் அதிவிரைவில்
இட்டிட
வேண்டும்.

■



# சாத்தானின் சக தோழன்!

## யுகபாரதி

□

நாங்கள் மீண்டும் ஒருமுறை
அழுது தீர்க்கிறோம். நீயோ
எங்கள் அழுகையை ரசிக்கும்
ஆவலில்
எப்போது வரட்டும் என்கிறாய்

நாங்கள் மீண்டும் ஒருமுறை
உரியப்பட்ட துகிலால்
பங்கப்பட்டோம். நீயோ
எங்கள் துரோகிகளின்
பொன்னாடையைப் போர்த்திக் கொள்ளும்
புளகாங்கிதத்தில் இருக்கிறாய்

நாங்கள் மீண்டும் ஒருமுறை
சாவுக்கு நேர்நின்ற காட்சியில்
சிதறிக் கொண்டிருக்கிறோம். நீயோ
எங்கள் ஊழை ஊடகங்களில்
உறுத்தல் இல்லா புன்முறுவலுடன்
பேட்டியளிக்கக் காத்திருக்கிறாய்

நாங்கள் மீண்டும் ஒருமுறை
சொந்தப் பிரதேசத்தில்
தோற்கடிக்கப்படலாம். எனினும்
நீயோ உன் சகாக்களோ
எங்களை ஒருபோதும் இல்லாமல் செய்ய இயலாது

நாங்கள் மீண்டும் ஒருமுறை
சொல்ல விரும்புகிறோம்
எந்த நிலையிலும் எம்முடல்கள்
எங்கள் இடத்தில்தான்
சாம்பலாய் உருள்கிறது. நீயோ
உன்னைப் புதைக்க இடம் கேட்டு
எல்லா தேசத்து
சாத்தான்களிடமும்
கையேந்தப் போகிறாய்.

■



# இரண்டாம் சூரசம்ஹாரம்!

## பா.விஜய்

□

பிணவறையிலே அந்தப்
பிள்ளையை சரித்தவன்
கருவறையிலேயே
களங்கமாய் ஜனித்தவன்!

யார் மன்னிப்பது?
அந்த தே.னா ம.னாவை
தேனாய் மானாய் வரவேற்று
தீட்டாகிப் போன திருப்பதியை பாவத்
திட்டாகிப் போன திருமதியை

நான்கு தோட்டா
நடுமார்பில் தாங்கி
சரிந்து கிடக்கிறான் அந்த
சந்தனப் பேழை!

புகைப்படங் கண்டு
புகைந்தது நெஞ்சுக்கூடு!
எத்தனை அழுதிருக்கும் அந்த
புலி பிறந்த காடு!

இதயம் பிளந்து
இறங்கிய குண்டுகளுக்குத் தெரியும்
துளைத்தது துப்பாக்கியல்ல
துரோகம்!

பாலச்சந்திரா
பச்சிளம் பாலகா
சிங்களன் துப்பாக்கி கண்டு
சிறுத்திருக்க மாட்டாய்

நீ தொட்டிலில் கிடந்தபோது
கிலுகிலுப்பையா காட்டியிருப்பான் தகப்பன்
கைத்துப்பாக்கி காட்டியல்லவா
கதை சொல்லியிருப்பான்

நடைவண்டி ஓட்டியா
நடை பழகியிருப்பாய்?
ஏ.கே.
நாற்பத்தியேழைப் பிடித்தல்லவா
நிற்க முயற்சித்திருப்பாய்

தோட்டாக்கள் குவித்து
பல்லாங்குழி ஆடிப் பழகியவன்
கடைசி கணத்திலும்
கண்நனைந்திருக்க மாட்டாய்!

இலங்கையின் குரல்வளை நெரித்து
எண்ணாயிரம் சிங்களரை
இறக்குமதி செய்து
கல்லணை கட்டிய பெருவளத்தானின்
கல்லறை வெடிக்கிறது!

அது
எங்கே பகைவன்
எங்கே அவன் தலை
என்றே துடிக்கிறது!

உலக அசிங்கத்தின்
ஊத்தப் பயல் அந்த
கோத்தப்பயலின்
மூத்தப்பயல்

ஒருநாய்
கூட்டியும் காட்டியும் தந்த
தெருநாய்!

முலைப்பால் கிட்டாது
மூத்திரங் குடித்து வளர்ந்த
சிறுநாய்!

அந்நாய் ஆகவேண்டும்
மண்ணோடு மண்ணாய்!
அவன்மரண ஓலம் மாறட்டும்
பலிபீடப் பண்ணாய்!

அடி மயிருக்கு சமானம்
அந்த பிறப்பறியா பிண்டங்கள்!

தமிழினத்தை மீட்கிறானாம்
தூ!
துண்டாட வேண்டுமவன்
வெறியை போர்
நெறியை மற்றும்
... ... ... ...

மீண்டும் வருவான் ஒருவன்
மீண்டு வருவான் எமது
வேலன் கரி
காலன் தமிழர்
தோழன்

சூளுரைப்பான்
நடைபெறும் இன்னொரு
சூரசம்ஹாரம்!

அடே விலாசமறியா
விந்தணுவில் பிறந்தவனே!
இது கேள் இது உறுதி

ஐ.நா.வில் தப்பலாம்
ஆயிரம் நீதிமன்றங்கள்
அத்தனையும் உனை ஒப்பலாம்

ஆனால் ஒன்று
உலகின் கடைசி வீரனாவது
உன்னை சாய்ப்பான்
உன் உதிரத்தால் நெற்றிக்கு
திலகம் சேர்ப்பான்!

■



# விழவில்லை தம்பிநீ

## ஆரூர் தமிழ்நாடன்

□

ஈழ இளவரசே!
இளம்கனவுப் புத்தகமே! நீயும்
விழிமூடித் தூங்க
விசும்புதடா வையகமே!

தென்னீழத் தீவின்
திருநிலவே உன்னை
தன்னந்தனி வளர்த்துச்
சாவின்கை கொடுத்தோமா?

உந்தன் சிற்றடியை
ஒருதூசும் தொட்டதில்லை;
வந்த கொடுங்கோலன்
வகையின்றிச் சுட்டானே!

அணுவெல்லாம் ஆயுதமாய்
ஆர்த்திருக்கப் பிறந்தவனே; நீயும்
அணுவளவும் வெடிக்காமல்
அமைதியாய் உறங்குதியோ?

ஈரமே இல்லாத
இலங்கைச் சிங்களவன் தன்
தாரத்தின் தசையையும்
பசிவந்தால் தின்கிறவன்

பிள்ளைக் கறிகேட்கும்
பேரரக்கக் கூட்டத்தின் கொடுங்
கள்ளத் தலைவன்
கனிவனத்தை அழித்தானே!

குடும்பத்தின் கற்பைக்
கூறுபோட்டு விற்கிறவன் கள
நெடுகிலும் நம்பெண்டிர்
நிணஉடலம் ரசித்தானே!

பிணத்தைத் துகிலுரிக்கும்
பெருங்கேடன் சிங்களனை எந்தக்
கணக்கிலும் வைக்காமல்
காலமே கண்கலங்கும்!


எங்கள் பகல்பிஞ்சை
இதமாக வரவேற்று இளம்
சங்கை அறுத்தானே
சண்டாள இழிகுலத்தான்!

துப்பாக்கிக் குண்டுகள்
துக்கத்தில் இறந்தன உன்
அப்பாவின் நிழலை
அழித்தோமே என்றெண்ணி!

பாலனே உன்னால்
பதைக்கிறது இவ்வுலகம்
காலனே உனைத்தொட்ட
காரணத்தால் அழுகின்றான்!

விழவில்லை தம்பிநீ;
விழிமூடி நம்மினத்தை இன்று
எழவைத் திருக்கின்றாய்
இதுபோதும்; வணங்குகிறேன்!

■



# பதுங்குக் குழியில் கொல்லப்பட்ட குழந்தை !

## ஈழக்கவிஞர் தீபச்செல்வன்

□

ஒரு பாலகனாகவே இருந்தைத்தவிர
வேறெதையும் செய்யில்லை
ஒட்டிய வயிறுடன்
நிராயுதமான களத்தில்
அணிந்திருந்த காற்சட்டையையும்
முடியிருந்த போர்வையையும் தவிர
வேறெதுவுமில்லை

இனியொரு பாலகரின் கண்களை
எப்படிப் பார்ப்பது?

ஏதுமறியாப் பாலகர்கள்
இம்மண்ணில் பிறந்திருந்தைதவிர
வேறெதையும் செய்திருக்கவில்லை


தனித்துப் பிடிபட்ட சிறுவனிடம்
ஏக்கம் மிகுந்த
இரண்டு கண்கள்மட்டுமே இருந்தன

குற்றங்களால் நிரம்பியிருந்த வானத்தில்
ஒரு பறவையும் இல்லை
பதுங்குகுழியில் பிறந்த குழந்தை
பதுங்கு குழியிலேயே கொல்லப்படுகையில்
எஞ்சியது ஒன்றுமில்லை

இப்பூமியில் மீண்டும்
புற்கள் முளைக்குமா?

நெஞ்சில் இரும்புத் துப்பாக்கிகள்
அப் பாலகன் இறுதிக் குரலெடுக்கையில்
உடைந்த நிலவைத்தவிர
எந்தச் சாட்சியுமில்லை

■



# போதிமரக் கிளையில் புத்தனைத் தூக்கிலிட்டாய்!

## இளையகம்பன்

□

ரத்தவெறி பிடித்த கொடும்
மிருகமே ராஜபக்சே!
யுத்தம் எனும்பெயரில் எம்
இனத்தையே அழித்துவிட்டாய்!

குழந்தையின் பூநெஞ்சை துப்பாக்கிக்
குண்டால் துளைத்துவிட்டாய்
பட்டாம் பூச்சியின்மேல் பீரங்கி
பற்சக்கரம் ஏற்றிவிட்டாய்!

வெட்கம் சிறிதுமின்றி எங்கள்
வீரத்தைத் தீண்டிவிட்டாய்
பக்கத்தில் அமரவைத்து சுட்டுப்
படுகொலை செய்துவிட்டாய்!

வல்வெட்டித் துறை ஈன்ற எங்கள்
வரலாற்றை நீக்கிவிட்டாய்!
போதிமரக் கிளையில் நீ
புத்தனைத் தூக்கிலிட்டாய்.

கோழைக்குப் பிறந்தவனே எங்கள்
குலத்தளிர் சிதைத்தவனே
புலிமகன் ஏற்றிவைத்த ஈழப்
புன்னகை அணைத்தவனே!

பேடிக்குப் பிறந்தவனே எங்கள்
பிள்ளைக்கறி தின்றவனே
நிலவாய் எழுந்துவந்த எங்கள்
நீதியைக் கொன்றவனே!

பிள்ளை முகம்கண்டால் அடப்
பேயும் இரங்குமடா!
மரணத்தின் கைகூட மகிழ்வாய்ப்
பூசெண்டு கொடுக்குமடா!

நாயே உனக்கில்லை அந்த
நாகரிக நடைமுறைகள்
பேயே உன்திசையில் இருட்
புதரன்றி வேறு உண்டா?

உலகப் பெருநிலமே ஏ
உணர்வற்ற மானுடமே!
இறையாண்மை பேசுகிற எம்
இந்திய சிறுஉளமே

இதற்குங்கள் பதிலென்ன? எம்
இனம்வாழ வழியென்ன?
திட்டமிட்டப் படுகொலைக்கு நல்ல
தீர்ப்பென்ன மானுடமே?

ஈழத்தின் விடியலுக்காய் பாலா
இமைகளை மூடிவிட்டான்
மரணித்த மானுடத்தை தன்
மரணத்தால் எழுப்பிவிட்டான்!

■





# புலிப்பார்வைக்காக...

**பாரிவேந்தர்**

□

தமிழீழம் பெறுவதற்கு
தலைமைப் பொறுப்பேற்றேன்
கொலை வெறியர் மத்தியிலே
குடும்பத்தின் வாரீசாய்
போர்சூழல் நாளதனில்
பெயர்சொல்ல உனைஈன்றோம்
வதனித்தாய் பால்கொடுத்தாள்
மகிழ்ச்சியாய் நீ வளர்ந்தாய்!

தந்தையாய் நான் உனக்கு
தந்தேனே புலிப்பாலை
விளையாடும் பொருள் அனைத்தும்
வீரத்தை வளர்ப்பதுமாய்
போர்க்களத்து ஆயுதங்கள்
புலி உனக்கு அத்துபடி
சிங்களவன் தலை கொய்ய
சிங்கமென நீ வளர்ந்தாய்!

காலமகள் என்னுயிரை
காக்கவே மறந்துவிட்டாள்
உள்நாட்டுப் போருக்கு
உலகிலுள்ளோர் தலையீடால்
எஞ்சியுள்ள உன்னுயிரை
எடுத்திட்டான் சிங்களவன்
உன் உடலின் குண்டைந்தும்
உலகையே உலுக்கியது.

அன்று
நீ பார்த்த புலிப்பார்வை,
வருங்கால வரலாறு!

■



# நீயா தமிழன்...?

## சென்னிமலை தண்டபாணி

□

பிணமாய்க் கிடக்கும்
இந்தப்
பிஞ்சைப் பார்த்தும்
தமிழா
வரவில்லையா
உனக்குச் சினம்...?

யாழ் நரம்பை
அறுத்த
அபஸ்வர ஒலி
இன்னுமா விழவில்லை
உன் செவியில்...?

வஞ்சகம் சிதைத்த
இந்தக்
கொஞ்சும் முகத்தைக்
கொஞ்சம் பாரடா
என் தமிழா...
இன்னுமா
கொப்பளிக்கவில்லை
உன் குருதி...?

தாய்ப்பால்
மணம் மாறாத
தளிர்
எந்த வேலியை
உடைத்துக் கொண்டு
வெளியே வந்தது...?

எப்போது வருவாள்
தாய்...
எப்போது வருவாள்
சோதரி...
எதிர்பார்க்கவில்லை
கண்கள்...
எப்போது வரும்
விடியல் என்று
எதிர்பார்த்த கண்களுக்கு
இருளைப்
போர்த்தியவனை
என்ன செய்ய...?

அழுக்குப் படாத
அப்பாவி முகத்தை
மரணம்
தழுவும் முன்
தடுமாறியிருக்குமே...

காற்றும் அங்கே
கதறி இருக்குமே...
உன்னிடம் மட்டும்
ஒரு
சலனமும் இல்லையே...

ஏதும் புரியவில்லை
என்னருமைத் தமிழனே...
தொலைக்காட்சி
அலைவரிசைகளில்
தொலைந்த நீ
இந்த முகத்தை

எப்படி அறிவாய்...?

மல்லாந்து கிடக்கும்
அவன்
மார்பைப் பார்த்தாயா...?
உன்
கோழைத் தனத்தை
உரக்கச் சொல்கிறது
உலகுக்கு...

பார்...
'பாலச்சந்திர' முகத்தை
ஒளிகனலும்
கண்களில்
சாவின் வெளிச்சமா?
இல்லையே...
வேதனை... விம்மல்...
கண்ணீர்
ஏதேனும் தெரிகிறதா
அந்த முகத்தில்...?

மலரத் துடித்த
மொக்கு போல்
மவுனமாய் இருந்தவனைக்
கசக்கி எறிந்தவனை
மன்னிக்குமா... காலம்...?

■



# பொழுதுகள் அழும் பொழுது!

## ஈரோடு தமிழன்பன்

□

கொழுந்துப் புறநானூறு
கொலையுண்டு கிடக்கிறது;
இரத்த வரலாறே
நீ அழு!
இரத்த வரலாற்றின் மூலப்பதிப்பே
நீ அழு!

மழலைச் சூரியன்
மாண்டு கிடக்கின்றான்;
வான விசாலமே!
நீ அழு!
வான விசாலத்தின் நீடுச் சுவாசமே!
நீ அழு!

பாலகன்
பாலச்சந்திரன் மார்பிலே
சிங்களத் தோட்டாக்கள்
புத்தமே நீ அழு! போதியே நீ அழு!
தர்மத்தைப் புதைத்துவிட்ட
தம்மமே நீ அழு!



பக்கத்தில் பிடித்துவைத்துக்
குருவியைச் சுடுவதுபோல்
சுட்டார்கள் பாலகனை!
மரணமே நீ அழு!
மரணத்தின் துலாக்கோல்
சட்டமே நீ அழு!

தளிர்நிலா உடம்பிலே
தோட்டாக்கள் நெருப்பு நடவுகள்
தாய்த் தமிழே!
நீ அழு!
தாய்த் தமிழின் முதல் எழுத்தே
இனத்தோடு நீ அழு!

கைக்குவந்த பொன்கனவு
காடையரால் மாண்டதென்ன?
ஈழமே! ஈழமே!
நீ அழு!
அழக்கூட ஆள்சேரா அநாதையே!
நீ அழு!

சின்னஞ் சிறுமகனின்
சித்திர உதடுகளை
உன் துளிகள் நனைக்கட்டும்
மழையே நீ அழு!
மழையின் திரவ ஆன்மாவே
நீ அழு!

ஆயிரம்
பாலச்சந்தர்க்குப்
பத அடையாளம்
இந்தப் பாலச்சந்தர்;
பகல் அதிபதியே! சூரியனே!
நீ அழு!

பகல் அதிபதியைப்
பெற்றெடுத்த வெப்பக்
கர்ப்பமே!
நீ அழு!

கப்பலைக்
கரைக்கிழுத்துக்
கட்டிவைத்து எரித்ததுபோல்
கண்மணியைக் கைப்பற்றிக்
கண்மூடிச் சுட்டார்கள்;
காலம் பல கடந்து வந்த
காலமே!
நீ அழு!
காலத்தின் கைவசத்தில்
இன்னும் இருக்கும் யுகத்தொகுப்பே
நீ அழு!

■





# அவன் மௌனம் ஆளுக்கொரு கோப்பை

## கபிலன் வைரமுத்து

□

இனத்திற்கு சால்வை
அணிவிக்கும் அவசரத்தில் உன் பிணத்திற்கும் சட்டை
இல்லாமல் செய்தோமே

ஊர்கூடி உறவாடி
தீர்மானம் தந்தாலும்
தீராதொரு மௌனத்தை
உன் கண்ணில் கண்டோமே

பேய்க்காட்டு முள் தைத்து
தாய்ச்சேலைக் கிழிந்தோமே
முகம் உனது மூடுகையில்
யுகம் ஒன்றை இழந்தோமே

பிள்ளைக்கு பொம்மை தந்து
போருக்கு சாவி தந்த
இரட்டை அரசியலால்
உன் இறக்கை அறுத்தோமே

வீரத்தின் ரத்தத்தை
விழுங்கிட்ட காலம்
உன் வெள்ளை அச்சத்தை
செரிக்க மறுத்ததுவே

இளந்தமிழ் செங்கூட்டம்
இமைகள் கழற்றிவைக்கும்
பருவ நிலை மாறும்வரை
எரிமலைகள் விழித்திருக்கும்

தர்மத்தின் வாழ்வுதனை
தர்பார் கவ்வினும்
மாணவப்பிரளயத்தால் அது
மறுபடியும் நடைபழகும்

ஒருவேளை மறுஜென்மம்
மண்மீது நீ கொண்டால்
தனிஈழத் தூளியில்தான்
தம்பி உன் துயில் தொடங்கும்

■




# அந்தக் கண் பறவைகள்!

## யாழன் ஆதி

□

கண்பறவைகள் பறந்த அந்தத் தருணத்தில்
நிழல்கள் அழிந்துபோயின பூமியில்
ஒற்றைச்சுழியில் உயிர்பிரிந்த அந்த இடம்
உறைந்து ஒரு ரத்தத்துளியாய்க் கிடக்கிறது
சுரந்து முடிந்த பால்துளி உலர்ந்து
சருகுகாய் உலகத்துக் காற்றுவிழிகளில்
மெல்ல அசைய அசைய
உள் பாய்ந்த குண்டுகள் வெட்கப்பட்டன
மென்னுடல் தின்னும் கொடுங்கழுகுகள்
சூழ்ந்த நிலத்தில் ரொட்டித் துண்டாய்க்
கொலைப்பசியாற்றி நிலாவின் பிஞ்சொன்று
இருட்டில் வீழ்ந்து முடிய
அதிகாலை வெளிச்சக் கீற்றில்
தார் ஊற்றி அடைத்திருந்தனர்
பூக்களற்ற பிரதேசமாய் ஆகிப்போன நாட்டில்
ஒரு கொழுந்தைத் தின்று பித்தம் ஏற்றி
களித்து மகிழ
கடைசியாய் கடித்த பிஸ்கெட்டுத் துண்டினை
எறும்புகள் இழுத்துக்கொண்டிருந்தன
விடுதலைக் கொடியின் முளையொன்றைக் கிள்ளி
காதுகளைக் குடைந்துகொண்டனர் அவர்கள்.

■



# தலைமுறை தலைமுறைக்கும்...

## ஆர்.சி.மதிராஜ்

□

எல்லோருக்கும் வரும்
மரணம்
ஒருமுறையாவது

நீ வீரன்
ஒரேயொருமுறை மரணித்துவிட்டாய்
இதற்காக
தினம் தினம்
செத்துச் செத்துத்தான் சாவான்
சிங்களக் கோழை

என் அண்ணைக்கு
நீ செல்லப்பிள்ளையல்ல
அப்படியிருந்திருந்தால்
உன்னை
வேறு தேசத்துக்கனுப்பி
பத்திரமாய் காத்திருப்பார்
அவருக்கு
செஞ்சோலைப் பிள்ளைகள்போல்
நீயுமொரு பிள்ளை
அவ்வளவே...

ஆனால்
ஆனால்
நீ
தமிழினத்தின்
செல்லப்பிள்ளை


தமிழினத்தின்
ஒவ்வொரு குடும்பத்திலும்
ஒரு பிள்ளையைப் பறிகொடுத்த
துக்கத்தில் சிந்தப்பட்ட
கண்ணீர்த்துளிகள்தான்
உனது ஆன்மாவுக்கான அஞ்சலி

மௌனித்தே கிடந்த
இந்த
மானுடத்தின் கண்களைத்
திறந்து வைப்பதற்காக
நீ உன்
விழிகளை மூடிக்கொண்டதுதான்
துயரத்திலும் துயரம்

எங்கள்
நெஞ்சினில் போட்டுத்
தாலாட்டவேண்டிய
உன் மார்பினை
கயவர்களின்
குண்டுகள் துளைத்தபோது
கையறு நிலையில்
நாங்கள் கண்கொண்டு
பார்க்கநேர்ந்ததே

மகனே
பாலச்சந்திரா
தலைமுறை தலைமுறைக்கும்
என்னைத்
துரத்திக்கொண்டேயிருக்கும்
இந்தக் குற்ற உணர்வு

■



# புத்தன் செத்தான்

## கவிஞர் தெய்வச்சிலை

□

பாலச்சந்திரனே!
தவறிப் போன
எங்கள் தாலாட்டே!
ஓர் அழுக்கு நாளில்
நீ துப்பாக்கியால் சாய்ந்தாய்!
நாங்களோ
துர்ப்பாக்கியத்தில் சாய்ந்தோம்!
உன்படம் வெளிவந்த நாள்
இந்தப் புவனம்
அழுத கடைசி நாள்!
எங்கள் மூச்சு
வீரமெனும் காற்றை
உரமாக்கி சுவாசித்த நாள்!
நாங்கள் வடித்த கண்ணீரால்
கடும் பாறையிலும்
கண்ணீர் கசிந்த நாள்!
மகனே! சந்திரா!
ஈழ விடுதலை
என்றொரு நாடகத்தில்
எத்தனையோ பாத்திரங்கள்! ஆயினும்
சாகாத சரித்திரத்தின்
சீரில்லா காட்சிதான் எங்கள்
சிந்தை நொறுங்கிய உந்தன் படம்!

உறங்கிய சூரியன் மீண்டும்
உதிக்குமென
வானம் அறிந்திருக்க...
சருகாகிப்போன இலைகள் மீண்டும்
உருவாகி வசந்தத்தில் வருமென
மரங்கள் தெரிந்திருக்க...
தந்தைக்குப்பின்
தலைமையேற்று
தளபதியாய் உருவெடுப்பாய் என
நாங்கள்
காலத்தின் மடியில்
காத்திருக்க... நீயோ
கண்ணீர் சொரியச் சென்றதன்
காரணம் என்னவய்யா!
கொலைக் கருவிகளோடு
அலைந்து திரிந்து உன்னை
வேட்டையாடிய சிங்கள
வெறிநாய்கள்
புத்தனின் வாரிசுகளா!
விழுப்புர வெண்மணி
விதைகளுக்கு
அங்குதான்
நாற்றங்காலா!
உன்
பிஞ்சு முகமும்
பிள்ளைக் குறும்பும்
பார்த்த பின்னருமா
சிங்கள நாய்கள்
உன்னை
சிதைக்க முற்பட்டார்கள்?
புத்தன்,
தோட்டாக்கள் துளைத்த
உன்
மேனியைப் பார்த்தால்
போதிமரத்திலே தூக்கில்
தொங்கியிருப்பான் நிச்சயமாக!
எங்கள்
உணர்வுகளுக்கு
வேள்வித்தீ வளர்த்த

வேங்கையின் மைந்தனே!
புயலின் புதல்வனே!
நெருப்பைச் சுமந்த மாவீரனின்
அருமை வாரிசே!
உன்னை
துப்பாக்கிக் குண்டுகள்
துளைத்தெடுத்த போதுதான் நாங்கள்
தூக்கம் கலைந்து எழுந்தோம்,
தெரியுமா மகனே!
உன் படம் பார்த்த பின்னர்
எங்கள் உடன்பிறப்புகள்
தங்கள் சந்ததியினருக்கு
உந்தன் பெயரைச் சூட்டி
வணங்குகின்றனர்.
தம்பி சந்திரா! நீ
போர்க்களத்தின் நடுவே
பூத்து மலர்ந்த ரோஜா!
உன் நினைவால்
உணர்வற்ற ரத்தங்களும்
ஓட்டம் பெற்றுவிட்டன!
தமிழ்ஈழத் தாய்க்கு
தைரிய ஒத்தடங்கொடுத்து
போராட்டத்தை வாழ்க்கையாக்கி,
வாழ்க்கையையே போராட்டமாக்கிய
போராளியான உந்தன் தந்தை அறிவாரா?
உன் பூமுகம் எங்கே என்று!
தேடிச்சென்ற தமிழ் மேகங்கள்
கருத்துப்போய் கதறியழுவதை
உன்
காந்தவிழிக் கண்களுக்குத்
தெரியவில்லையா!
உன்முகம் பார்த்த பின்னரே
என் எழுதுகோலுக்கும்
வீரம் பிறக்கிறது!
நீ
தமிழன் விடுதலைக்கு
வீரப்போர் புரிந்த
வீரமகனின் புதல்வன் என்பதால்,
எரிமலையாய் நீயும்

எழுவாய் என்பதால்தானோ,
கொழும்பு அரக்கன் ராஜபக்சேயின்
கொழுப்பெடுத்த தொங்கு தசைகள்
உன்னைச் சாய்த்துவிட்டனவா?
உன்
உயிரோடு நான்
உரையாடிப் பார்த்தேன்!
இனியாவது இரக்கமற்ற
இந்திய அரசின்
இதயச்சுவரின் ஓரத்திலாவது
ஈர உணர்வை
எழுதச் சொன்னாய்!
வாழ்ந்த இனங்கள்
வாலிபத்தைத் தொலைத்ததும்,
வருங் காலத்தில்
வசந்தத்தை அரவணைத்துக் கொண்டதும்
வரலாறு கூறும் கட்டியங்கள்!
வீழ்ந்த இனம் ஒருநாள் விழிப்புறும்!
தாழ்ந்த மக்கள் ஒருநாள் தலைநிமிர்வர்!
பத்தாயிரம் பேரை சுட்டு வீழ்த்துவதாலே
சுதந்திரப் போராட்டம்
சுவடு தெரியாமல் போய்விடும் என்று
சிங்கள நாய்களுக்கும் பேய்களுக்கும்
தெரிந்ததுதான் விந்தையிலும் விந்தை!
இந்திய சுதந்திரப் போராட்டமே ஒரு
இதிகாச உதாரணம் என்பதும்
சிங்கள நாய்களுக்கும் பேய்களுக்கும்
தெரியாததுதான் விந்தையிலும் விந்தை!
விடுதலை என்பது ஆதிபத்தியங்களின்
அடக்குமுறைகளுக்கு அப்பால்
பீறிட்டுக் கிளம்புகிற பாதரசப்படை மருந்து!
துந்துபி முழக்குகிற துப்பாக்கிகள்
துளைத்ததுண்டு அவற்றை
தூர்த்ததாக வரலாறுகள் இல்லை!
பாலச்சந்திரனே! நீயும் அதைப்
பார்க்கத்தான் போகிறாய் விரைவில்!

■



# சின்ன தம்பி

## நெல்லை ஜெயந்தா

□

அதோ...
செத்துக் கிடக்கிறான்
சின்ன வயது
சித்தார்த்தன்!

புத்தரின் சீடர்கள்
நிற்கிறார்கள்
போர்க்குற்றவாளியாய்!

பலருக்கும்
பார்வையைக்
கொடுத்திருக்கிறான்
பாலா,
தன் கண்களை மூடி!


கர்ப்பப்பைகளையும்
கண்ணீர் விட
வைத்தவர்களே!
உங்களைத் தேடுகிறது
எங்கள் இரைப்பை!

வேர்களில் ஊற்றுங்கள்
அவன்
சாம்பலைக் கரைத்த நீரை!

முதலில்
ஞானம் வரட்டும்
தீவிலிருக்கும்
போதிமரங்களுக்கு!

தொலைத்துவிடாதீர்கள்
பாலாவின்
தொட்டில் கயிறை!
எப்படியும் தேவைப்படும்
ஈழத்திற்கு
ஒரு
கொடிக்கயிறு!

■



# ஐயநாவும் கந்தக பூதமும்...

## சேரங்குலத்தான்

□

தன்னிகரில்லாத் தலைவனின்
தளிர்நடை சூரியனாம்
பாலச்சந்திரனை
மதிவதனி ஈன்றெடுக்க
மூன்றாம்புலியாய் சிலிர்த்தெழுந்தான்
மன்றத்து மேடையில்
மாமேதை ஆகும்முன்
சரித்திரத்தின் ஏடுகளில்
சான்றாகி நிலைத்துவிட்டான்

ஈழத்து இளவேந்தனின்
இளமார்பை இலக்காக்கி
கயவன்
இரக்கமில்லாத் திமிர்த்தனத்தால்
இறுமாப்பை காட்டிவிட்டான்
கந்தல்புத்தி மந்தியொன்று
கையில்கிட்டிய பூமாலையை
துப்பாக்கித் தோட்டாவால்
துஷ்பிரயோகம் செய்ததப்பா

ஆவணப்படத் திரைவழியே
அவனுருக்குழைந்த காட்சிகளை
காணுகையில்
அய்யோ... அய்யய்யோ...
அய்ம்புலனும் கதறுதடா
சுற்றும்முற்றும் ஆர்த்தெழ
சுதந்திரப் பேரிகைக்கு
உணர்வுகளைத் தூதாக்கி
உயிரடக்கி ஒலியெழுப்புகிறான்

வெண்கொடியேந்திய வீரர்களை
வேருக்கடியில் புதைத்திட்டால்
ஆவி
புகையாகிப் போகுமென
புல்லுருவி எண்ணிவிட்டான்
புதைந்துபோனது சதைகளல்ல
புத்துலகின் விதைகளென்று
பொன்சேகாவின் கனவிலுரைத்து
பாடைச்சங்கு முழங்கியிருக்கும்

கொண்டைக்கோபுரம் கூன்விழுக
கொத்துக்கொத்தாய் கருவறுத்த
ஒரு
புறமுதுகனுக்குப் பிறந்திட்ட
போர்நெறி பிறழ்ந்தவனே
எதேச்சாதிகார தோளுயர்த்தி
எமக்கான நிலப்பரப்பில்
கொடியடுப்பில் பால்காய்ச்சி
குடிபுக விழைந்தாயோ

கட்டுடல் கந்தகபூதத்தை
கண்ணில்கண்ட வேகத்தில்
களமாட
உமிழ்நீரும் ஊழித்தீயாய்
உருமாறி எரியுதய்யா
எய்துவிட்ட அம்பெல்லாம்
எதிர்ப்பதமாகி திரும்பிடுமோ
நெஞ்சுக்கூட்டில் ரகசியமா
நாசக்காரன் அழுகின்றான்

துன்பியல் சம்பவத்தை
தமிழீழப் பங்காளி
கையாலாகா
கர்ணாக்களின் கைங்கர்யத்தால்
கண்ணியர்களை காடேற்றிவிட்டான்
கொடுங்கோல் மயானனை
கொடுந்தணலில் மாய்த்திடுக
கோத்தபாய கோழைப்பய
குருத்தெலும்பும் கொக்கரிக்கும்

மண்ணே மண்ணீரலென
மண்டியிட்டுக் கும்பிட்ட
சண்டாளனை
புயலாகப் புரவியேறி
புழுதிகூட போர்த்தொடுக்கும்
சஞ்சலத்தை தலைமுழுகி
சத்தான தருணமொன்றில்
சமதர்மத்தை வென்றெடுக்க
சகோதரத்துவம் ஓங்கியெழும்

ஆயிரமாயிரம் தீர்மானங்கள்
அரசியலில் ஒப்பமானாலும்
இந்தியாவோ
இலங்கையின் வக்கீலாகுது
இறையாண்மைப் பொய்யனா
பாமரரும் போற்றுகிற
பேதமற்ற நீதிதனை
பகராதெனில் ஐநா
பல்லில்லா ஐய நா

■





# ஒழிந்தழிக!


## நெல்லை கண்ணன்

□

உனைப் பார்த்தோர் தந்தையாய்க் கதறுகின்றேன்
தந்த ஒரு பண்டத்தை உண்ணுகின்ற
தளிரே உன் முகம் பார்த்தும் கொன்றார் என்றால்
எந்தையாம் இறைவன் மேலே கோபம்
எழுகிறது எழுகிறது அழுகின்றேன் நான்

பந்தமோ பாசமோ இல்லார் கையில்
படைத்தவனும் உனைக் கொடுத்தான் என்ற பொது
சிந்தையெலாம் நிறைந்திருக்கும் சிவனின் மீது
சீற்றம்தான் எழுகிறது என் குழந்தாய்
கந்தவேள் பிள்ளையார் இருவரையும்
காப்பாற்றி கடவுளாய் வைத்தவனா
இந்த ஒரு வினை செய்தான் அந்த ஒரு
இறைவனுமே அழிந்தொழிக அழிந்தொழிக.

■



# சரித்திர சந்திரன்!

## தாகம் செங்குட்டுவன்


□

ஆயுதம் செய்யாததை உன்
அப்பாவி மௌனம் சாதித்தது
காதலர் தினம் கொண்டாடியவர்களை
களத்திற்கு அழைத்து வந்தவன் நீ

கப்பல் படை, காலாட் படை, விமானப் படை
இருந்தும் தோற்றோம்
மழலை சிரிப்பு, ஏக்கப் பார்வை, அன்பு முகம்
கண்டுதானே வீரம் பெற்றோம்

தண்ணீர் இன்றி தவிக்கும் எங்களுக்கு
வீரம் வந்ததே இல்லை
செந்நீர் குளத்தில் நீங்கள் மிதந்தபோதும்
எங்களுக்கு ஈரம் மட்டுமே வந்தது

எப்போதும் அரசியல் ராஜா ராணிக்கு
சாமரம் வீசும் எம் தமிழகம்
முதல்முறையாக எங்கள் ராஜாவின்
ரோஜாவை ஏந்தியது தமிழ் அகம்



சிறுவர்களைக் கொண்ட படை
என்பது பலரின் குற்றச்சாட்டு
தன் சிறு குழந்தையையும் இனத்திற்கு
தந்தானே... எங்கே பாராட்டு!

உண்மையை சொல்... நீ உண்பது
தின்பண்டமா... சயனைடு குப்பியா?
அந்த ஆத்திரத்தில்தான் உன்னை
சல்லடை ஆக்கினானா சிங்களன்?

ஆயுதத்தால் வெல்லமுடியாத ஆங்கிலேயனை
அகிம்சை காந்தி விரட்டினார் இங்கு
அறவழியும் ஆயுதமும் பெறமுடியாததை
குழந்தை காந்தி தரப்போகிறாய் அங்கு

ஈழத்தந்தை செல்வா ஈழத்தலைவர் பிரபாகரன்
ஈழ மகன் பாலச்சந்திரன்
காந்தள் மலர், புலிக்கொடி, பனைமரம்
அவைபோல் இனி நீ நிரந்தரம்

எந்த நாட்டு விடுதலையும் பாலகனால்
கிடைத்ததாக வரலாறு இல்லை
தமிழ் ஈழம் உன்னால் கிடைத்ததாக
படைக்கப் போகிறோம் புது வரலாறு

சிலுவையில் ஏசுபிரான் அறையப்பட்ட
பிறகுதான் வென்றது யூத இனம்
சிறுவன் நீ சிதைக்கப்பட்ட பிறகுதான்
சீறிப்பாய்கிறது எம் தமிழினம்

ஒன்று சேராத நண்டினம் அவப்பெயர்
நீக்கியவன் பாலச்சந்திரன்
தலைவர்களே இல்லாத ஒரு புரட்சி...
தமிழகத்தில் தந்த சரித்திரன்!

■



# சந்திரனே கண்ணுறங்கு!

## எஸ்.ராஜகுமாரன்

□

புலிக்குப் பிறந்தவனே!
போர்க்களத்தில் இறந்தவனே!
தமிழீழ வரலாற்றில்
தனித்துவமாய் வாழ்பவனே!
நாளை ஈழம் வரும்
நல்லரும்பே கண்ணுறங்கு.

சதிகார தேசங்கள்
சாமரங்கள் வீசியதால்
ஐநாசபை கூட
மௌனத்தைப் பேசியதால்
ஈவிரக்கம் ஏதுமின்றி
எம்மினத்தை மாய்த்தனரே!

போரின் தருமங்கள்
போனவழி யாரறிவார்?
செஞ்சிலுவைக் கருணையதும்
சிதைந்தகதை எவரறிவார்?
இதுபோல்ஓர் இன அழிப்பு
எங்கேனும் நிகழ்ந்ததுண்டா?

தள்ளாடும் முதியோரை
தவழும்இளம் பிஞ்சுகளை,
பேறுகால வலிஎடுத்த
பிள்ளைத் தாய்ச்சிகளை
ஏவுகணை களைப்பாய்ச்சி
எரித்தானே சிங்களவன்?

பாலுக்கழுத பிள்ளை
ரத்தத்தைக் குடித்தனவே!
இளம்பெண்டிர் கற்பதனை
ஈனமற்றோர் அழித்தனரே!
நன்னீர்க்கால் வாய்நெடுக
செந்நீராய் ஓடியதே!

அதிகார மமதையிலும்
ஆணவத்தின் போதையிலும்
குதியாட்டம் போடுபவன்
குலைநடுங்கும் காலம் வரும்!
செருக்கான செங்கோல்கள்
சிதறுகிற நேரம் வரும்!

தமிழீழ மண் புதிதாய்
தமிழீழ வான் புதிதாய்
தமிழீழ வனம் புதிதாய்
தமிழீழக் கடல் புதிதாய்
வீழ்ந்த இனம் மீண்டு எழும்!
வீணர் இனம் மண்ணில் விழும்!

மாவீரன் ஈன்றெடுத்த
மறவர் குலச் சூரியனே!
ஈழத்தின் சரித்திரத்தில்
இளைப்பாறும் சந்திரனே!
உலகத் தமிழர்களின்
உயிருக்குள் கண்ணுறங்கு!

■



# மரிக்கப்பட்ட நதி!

## செல்மா மீரா

□

ஒரு
முடிவற்ற பதற்றம்
உச்சி முதல்
உள்ளங்கால் வரை
பரவி நிற்கின்றது
அதிர்வலைகளாய்

இதயத்தின்
ஒவ்வொரு பக்கத்திலும்
செய்வதறியா
உன்
வெள்ளந்தி விழிகளும்
உன்
கள்ளமற்ற குழந்தை முகமும்
உன்
சூதுவாதில்லா மனமும்
காற்றோடும்
காலத்தோடும்
கலந்திட்ட நாளிலிருந்து
ஆன்மாவில் தீராவலியுடன்
கொப்பளிக்கிறது
புண்ணின் திசுக்களும்
ஆறாவடுவென உணர்வுகளுமாய்



காளான் பூத்த
மனிதர்கள்
தந்து மகிழ்ந்த
இனிப்பைச் சுவைத்து
தன்னிலை அறியா
பாலகனாய் நீ
பாலச்சந்திரனாய்

மரத்துப் போன நொடிகளினுள்
சரிந்து
உறைந்து போன
உன் நிலையதில்
பற்பல இதயங்களில்
வழிந்தோடின
வெப்ப வெடிப்புகள்

உன்
மென்மையான இதயமதை
பதம் பார்த்தன
துப்பாக்கி ரவைகள்
சிறகடித்த
ஆயிரம் கனவுகளையும்
ஒளிபடர்ந்த நம்பிக்கைகளையும்
பூமித்தாயிடம்
விதைத்து விட்டாய்

உன் மீது
திணிக்கப்பட்ட வன்முறையதில்
பால்நிலவின் மீது
தெளிக்கப்பட்ட களங்கமென
சுக்கலாக
நொறுங்கிப் போன
நெஞ்சங்கள் வதைபட்டன
அளவற்ற வேதனைகளாய்

மனதோடு
ஒட்டிக்கொண்ட
உன் உருவமது
மறுபடியும் மறுபடியும்
உள்ளுக்குள் வியாபித்து
மறுசுழற்சியிட்டன

சொற்களற்ற துயரமதில்
பதுக்கி வைக்கப்பட்ட
உன்
வாழ்நாட்களை
மூச்சுத் திணற திணற
தேடுகின்றோம்
வழி நெடுகலுமாய்

■



# தாயின் மடியில்!

## பேராசிரியர் வி.மருதவாணன்

□

மகனே!
இது கவிதை அல்ல!
உன்
காயங்களில் இருந்து
வழிந்த
என் ரத்தம்!

நீ
மண்ணிலே கிடக்கவில்லை!
ஈழத்தாயின்
மடியிலே கிடக்கிறாய்!

உன்
உறக்கத்தில்தான்
தமிழினமே
விழித்துக்கொண்டது!

நீ என்ன
தமிழீழத்தாயிக்கு
தாலாட்டு பாடிவிட்டு
உறங்கிவிட்டாய்?

நீ போர்க்களத்தில்
மார்பு காட்டி
துளைத்த குண்டுகளுக்கு
நெஞ்சு கொடுத்தாய்
புலிக்குப் பிறந்தது
பூனையாகுமா!


வீரர்களுக்கு
துப்பாக்கி ரவைகள்தான்
முற்றுப்புள்ளிகள் ஆகி இருக்கின்றன.

சிங்கள ஓநாய்கள்
உன்
குடும்ப போட்டோவோடும்
துளைக்கும் தோட்டாவோடும்
தேடுகிறார்களாம்!
எதிரிகளே!
அவன்
குடும்பம் என்ன
போட்டோவுக்குள்
அடங்குகின்ற குடும்பமா?

எதிரிகளே
இந்தப் பிஞ்சை
பிய்த்தெறிந்த
உங்களையும்
உங்களுக்கு
கைகொடுத்தவர்களையும்
காலம் மன்னிக்கப் போவதில்லை.

தமிழர்களே!
பாலகனைச் சுட்ட
பாவிகளை
தூக்கில் ஏற்றுவதுதான்
தமிழச்சியின்
முலைப்பால் குடித்தவனின்
முதல் வேலை.

■



# அஸ்தமனத்தில் ஆயிரம் சூரியோதயங்கள்!

## கவிஞர் இளையபாரதி

□

'தென்றிசையைப் பார்க்கிறேன்
என்சொல்வேன் என்றன்
சிந்தையெல்லாம் தோள்களெல்லாம்
பூரிக்குதடா அன்றந்த லங்கையினை
ஆண்ட தமிழ்மறவன்' என்று
புரட்சிக்கவிஞர் பூரித்ததைப் போல்
இனி பூரிப்பு கொள்ள முடியாது...
வெட்டுண்ட கரங்களின் கவிதையை
இங்கே எழுதுகிறேன்.
பிடுங்கப்பட்ட கண்களின்
காட்சிகளை இங்கே தீட்டுகிறேன்.
'ஏர்நடக்கும் கார்நடக்கும்
சீர்நடக்கும் பேர்நடக்கும்'
என்றெல்லாம் எம்கம்பன் எழுதிவைத்த
கவிதையெல்லாம் பொய்யாக
எம் இனத்தின் மீது
போர்நடந்து... போர்நடந்து...
நந்திக் கடலருகே எம்
நாயகன் கிடக்கின்றான்
அவன் சிந்திய குருதியிலே
என் ஜீவன் துடிக்கிறது.


அந்திக் கருக்கலிலே
அலறும் பறவைகளின் அவலம்
அறையும் செவிகளிலே.
யோனிகள், முலைகள், குறிகள்
எல்லாம் சிதைக்கப்பட்டுவிட்டன.
எழுதவோ, சொல்லவோ, பகிரவோ
இனி என்ன இருக்கிறது.
சாம்பல் மேட்டின் மீதமர்ந்து
சமரசம் பேசிக் கொண்டிருக்கிறோம்.
கையறு நிலையினிலே
காலம் கழிகிறது.

காயத்தின் ரத்தமாய் வழியும் சொற்கள்
வாய்க்கரிசியாய் விழுகின்றன வார்த்தைகள்
தேசம் சிதையாக
வைத்தகொள்ளி எரிகிறது
வான் வரைக்கும்.
நரபலி கேட்கும் நபும்சகர்களால்
ரத்தத்தில் நனைந்து கிடக்கிறது நாடு.
வெட்டுண்ட மறவனைப் போல
வீழ்ந்து கிடக்கிறது நிலம்.
வேட்டுச் சத்தம் நின்றபிறகு
குருவிகள் கூடுகட்ட சேகரிக்கின்றன
பிஞ்சு எலும்புகளை.
விண்ணுக்கும்
மண்ணுக்குமான இடைவெளியெங்கும்
பிடுங்கியெறியப்பட்ட உயிர்கள்
காற்றில் நீந்துகின்றன
கண்ணுக்குத் தெரியாத இறகுகளாக.
காட்டிக் கொடுக்கப்பட்டவர்களால்
எமதுசூரியன் சூறையாடப்பட்டான்
ஓர் விடியாத இரவைப்போல்
எமது இனத்தின்மீது கவிந்து கிடக்கிறது மரணம்.
மாவீரர்களின் கல்லறைகளை உழுது
பயிரிடுகின்றனர் துரோகத்தின் காளான்களை.
'இளம்பிறையே
ஏங்காதே
உன்னுள்தான்
பூரணசந்திரன் புதைந்துகிடக்கிறான்'

என்றான் மகாகவி இக்பால்
இங்கோ
எங்கள் பாலச்சந்திரன்
நீலம் பாரித்துக் கிடக்கிறான்
நிலத்தின் மீது.
புறமுதுகு காட்டாமல்
புன்னகை மாறாமல்
சாவின் திகைப்பு தீராமல்
மரணத்தின் வடுதாங்கி.
இந்த பால்ய மரணம் எதனால்?
தமிழனாக பிறந்ததனால் சுத்த
தமிழனுக்கு பிறந்ததனால்.
செஞ்சோலையில் குழந்தைக் கூட்டத்தைக்
கொன்றவர்கள்
இதோ கடைசித் தளிரையும்
கிள்ளிப் போட்டுவிட்டார்கள்.
நிர்கதியின் சாட்சியாய் கிடக்கிறது
உனது நிழற் படம்.
மாக்பெத்தின் ரத்தம் நனைந்த கைகள்
கிழித்தெறிந்துவிட்டது உன் ஆயுளின் அத்தியாயங்களை
எங்கள் திருச்சங்காட்டான் குடியில்
சிவபெருமான் பிள்ளைக்கறி கேட்டான்
தன் பக்தனை சோதிக்க.
தாயார் தலையையும்
தந்தை கால்களை பிடித்துக்கொள்ள
தலைச்சன் பிள்ளையை அறுத்து
கறி சமைத்துப்
பரிமாறியபின்
பிள்ளையில்லா வீட்டில் சாப்பிடமாட்டேன் என்று
பரமன் சொல்ல
பக்தன் தவிக்க
வாசலில் போய் நின்று
உன் மகனை
சீராளா... சிறுதொண்டா என்று
அழை எனக்கூறி பரமன் மறைய...
தந்தையின் குரல் கேட்டு
விளையாடப்போனச் சிறுவன்
வீட்டுக்குத் திரும்புவதுபோல்
வீதியில் ஓடிவந்தான்

கடுகும் கறிவேப்பிலையுமாய்
சீராளன் ஓடி வந்தானாம்
தாளித்த வாசனையோடு.
இதோ பாலசந்திரன் எழுகிறான்
தீயின் கிளைகளாய் திசையெங்கும்
இதோ பாலசந்திரன் எழுகிறான்
செத்துக் கிடந்த தமிழனின் மனசாட்சியாக.
இதோ பாலசந்திரன் எழுகிறான்
போர்க்கோலம் பூண்ட மாணவசமுத்திரமாக.
இதோ பாலசந்திரன் எழுகிறான்
மரணத்தின் இருளை உடைத்து
விடுதலைச் சூரியனாக!
தம்பியின் மைந்தனே!
சார்லஸின் தம்பியே!
உன் அஸ்தமனத்தில்
உதிக்கின்றன ஆயிரம் சூர்யோதயங்கள்.

■



# ஈழப்பரணி!

**சுகன்**

□

அசிங்கங்களுக்கு
ஆயிரம் பிறப்புகள் உண்டு!
வீரம் அசலாய்
ஒரேமுறை உதிக்கும்
உதய சூரியனாய்!

ஈழத்தில் விளைகிற
புலிகளைப் பார்த்துதான்
உலகம்
புறநானூற்றை நம்பியது!
இல்லை
புனைவு என்று
புறந்தள்ளியிருக்கும்!

மார்பில் புதைந்த
குண்டுகளின் பாவத்தை
பாலகனின்
கொப்பளித்த
குருதி தழுவித்
தமிழ் ஈகம் சொல்லியிருக்கும்!

சிங்களர்களின்
பௌத்த ஞாயங்களை
புரியாமல்
தலைவெடித்து
சாய்கின்றன...
புத்த பெருங்கனவுகள்

பால்வடியும்
சித்தார்த்தனை
சிதைத்துவிட்ட
சிங்கள பயங்கரவாத
பங்காளிகளின்
அத்தனை உடல்களும்
அம்மணமாய்
பற்றி எரியும்
இரத்த வீச்சம்
துரத்த... துரத்த...
அதோ கடலில்
பற்றி எரிகிற
வடிவில் பளிச்சிடுகிற
தீவுப் பார்க்கையில்
தீ வைத்த எங்கள்
இந்தியக் கோமாளிகளின்
துரோகமும் துளிர்விட்டு
துடிதுடிக்கிறது!

கழுவ முடியாத
சுமையொன்றை
வட இந்திய
ஆட்சியாளர்கள்
வடுக்களாய்
சுமப்பார்கள்!

ஈழமென்னும்
தமிழர் கனவு
என்றாவது
கைவசப்படும்
அன்றைக்கு
அமையும்
ஆனந்தப் பூங்காவில்
ஆயிரமாயிரம்பாலச்சந்திரன்கள்
வண்ணப்பூக்களை
சுவாசித்தபடி
ஈழப்பரணி வாசித்திருப்பார்கள்!

■



# உயிர் மை!

## கவிவாணன்

□

வனந்திரம் ஒன்றில்
ஒற்றை நிலவாய் இருக்கும் உன்னை
பிணையக் கைதியாக்கிய
நரமாமிச உண்ணிகளை
எப்படித்தான் சகிப்பது?

அருவருப்புற்ற வாழ்க்கை
அவர்களிடம் எனில்
தொடங்கும் இடம்
எதுவாக இருக்கும்?

எத்தகைய நிலைகொண்டும்
தன் நியாயம் என பிதற்றினாலும்
நியாயம் அர்த்தமிழக்கும்!

பூர்வீகக்குடி என
இந்த
பூவுலகில் யாதும்
நிலை கொண்டதில்லையடா!

நீர்வளம், நிலவளம்
தட்பவெப்பம் சார்ந்தே
மனித பயணம்,
எப்போதும் நகர்கிறது!

நகரும் மனிதனுக்கும்
நகர்ந்த மனிதனுக்கும்
இடையில் இருப்பது
மனிதம்.

மனிதம் பூத்தூவிய
புத்தன்.
ரத்தத்தில்
சித்திரம் வரைய
ஒருபோதும்
ஒப்புக்கொள்வதில்லை!


நீயோ
அவன் சிலைக்கு
ரத்தத்தில் அல்லவா
அபிஷேகம் செய்கிறாய்!

நீர்சூழ் நிலத்தில்
நீ
செந்நீர் சூழ் நிலமாக அல்லவா
மாற்ற நினைக்கிறாய்.

மாற்றம் உனக்கும் உண்டு!
இந்த
பிஞ்சைப் பொசுக்கி
என்ன வாழப்போகிறாய்?
மாற்றம் உனக்கும் உண்டு!

இந்த
உயிர் விதை
நாளைய
விடுதலையை
அமைதியை எழுதும் மை!

■



# இலக்கு ஒன்றுதான் இனத்தின் விடுதலை!

## 'தமிழ் முழக்கம்' சாகுல் அமீது

□

இரவல் தேசத்தின்
எடுபிடிகள் நாங்கள்!

போரில்லா தேசத்தில்
புரட்சிய தலைமைகளும்
மட்டைக் கத்திகூட
ஏந்திராத மாவீரர்களும்
படைத் தளபதிகளும்
நிறைந்த நாட்டின்
தாய்த் தமிழ்
அடிமைகள் நாங்கள்!



அதனால்தான்
மொத்த இனமும்
செத்த போதும்
மலட்டுத் தன்மையோடு
கவனமாய்
மவுனம் காத்தோம்!



அதேபோல்தான்
உன் சாவைக்கண்டும்
காணாமல் இருந்தோம்!

இப்போதுதான்
நான்காண்டுகள் கழித்து
அந்நியன் சொல்லித்தான்
நாங்களும் அழவேண்டும்
என்கின்ற
உணர்வையே பெற்றோம்!

இரண்டாம் உலகப்போரில்
அணு வெடித்து
இறந்த மனிதர்கள்
குவியல் குவியலாய்
படங்கள் ஊடே
சிறுமி ஒருத்தி
சிதைந்த உடலாய்
சாலையில் ஓடினாள்
மரண ஓலமிட்டே!

அந்தப் படம்தான்
இதுவரை
மானுட உலகை
தகிக்கச் செய்தது!

இப்போது நீ
மகனே...!
இப்போது நீ
பிணமாய் படமாய்
யாருக்குப் பாடமாய்..?

அழுகிறோம்
நாங்களும் அழுகிறோம்
மேடைகளிலும் வீதிகளிலும்
அழுதுகொண்டே இருக்கிறோம்!

மன்னித்துவிடு
இதற்குமேல் எம்மால்
எதுவும் செய்துவிட
இயலவே இயலாது!

ஆனாலும்
ஒன்றை நம்புகிறோம்.

முள்ளிவாய்க்கால்
முடிவல்ல!
மாவீரர் மூச்சுக்காற்றும்
வீணல்ல!
இலக்கு ஒன்றுதான்
இனத்தின் விடுதலை!

■



# நீ பிணமல்ல... தீ!

## சே.த.இளங்கோவன்

□

வீர வேலன் எங்கள் தோழன்
ஊருக்கு நீ பாலகன் வீரர்களுக்கு
நீ மாவீரன்

கண்ணிவெடிகளை தாண்டித் தாண்டிதான்
நீ நொண்டி விளையாடினாய்...
கையெறி குண்டுகளை தூக்கிவீசி
நீ பந்து விளையாடினாய்...
பதுங்கு குழிகளுக்குள் மறைந்து
கண்ணாமூச்சி விளையாடினாய்...
நீ விளையாடிய விளையாட்டையும்
கொரில்லா பயிற்சியாக ரசித்தார்
உம் தந்தை
உலக தமிழ் தந்தை

கையில் கொடுத்த பிஸ்கட்டுகளையும்
நெஞ்சை துளைத்த குண்டுகளையும்
ஒன்றாகவே பார்த்த வீரன்...
வயிற்று பசிக்கு பிஸ்கட்டையும்
மார்பு பசிக்கு குண்டுகளையும் உண்ட
வீரன்...
நீ!

பூக்களின் தேசத்தில் போர்க்களம்
புத்தன் கை பிடித்தே யுத்தம்
செய்த ஆரிய அரக்கன்...
புத்தமும் காந்தியமும்
கை கோர்த்தே பாலச்சந்திரனின்
'புன்னகையை' புதைகுழிக்குள்
தள்ளியது

வீரமும் ஈரமும் நிறைந்த
இனத்தில் துரோகமும் ஒன்றாகி
போன 'விஷத்தின்'
விரல் பிடித்தே எங்கள் பாலகனின்
மார்பை துளைத்தாய்
கரிகாலன் பெற்றெடுத்த
மாவீரனின் மார்பை
'கரு'(ணா) நாகத்தின் துணைகொண்டு துளைத்தாய்

உன் மார்பில் துளைத்தது
தோட்டாக்கள் அல்ல
தமிழின துரோகத்தின் அடையாளம்...
ஊடுருவி கொன்ற துரோகத்தின்
தலையெடுக்கவே தகிக்கின்றது
மானமுள்ள தமிழர்களின்
கரங்கள்
முடங்கி சுரணையற்று கிடக்கும்
தமிழ் மூடர்களை முடுக்கிவிட்டுள்ளது
உன் வீர மரணம்...

நீ பிணமல்ல...
சோம்பிக் கிடந்த தமிழர் இதயங்களை
எரியூட்டும் தீ!
நீ மூட்டிய தீயில் கருகிப்போவார்கள்
'கருணை' இல்லா கருடர்கள்
உன் சிதைக்கு மூட்டிய தீ
காற்றோடு காற்றாக
கடல் தாண்டி பரவட்டும்...

தமிழ் பேசும் நெஞ்சங்கள் எல்லாம்
சுவாசமாய் மாறட்டும்...
எம் மண்ணோடு கலந்துள்ளது
உன் வீர சாம்பல்...
அங்கே முளைக்கும் பயிரும்
பாலகனும் எங்கள் பாலச்சந்திரனாய்
பிறப்பான்...
ஆயிரமாயிரம் புதிய பாலச்சந்திரன்களாய்
பிறப்பான்...

அதுவரையிலும் உன் சாம்பல் பூசி
துரோகிகளின் தோலுரிக்க
எதிரிகளின் உயிரெடுக்க உலகமெங்கும்
துடித்துக் கொண்டுள்ளது ஈரமுள்ள
வீரமுள்ள நல்லோர் இதயங்கள்.

■



# விதையாகி முளைக்கும் துப்பாக்கிக் குண்டுகள்!

## அமீர் அப்பாஸ்

□

காயாத
கண்ணீர்த் துளியாய்
கடல் நடுவே
மிதந்தது தேசம்!

கொடுமை கண்டு
அஞ்சாமல்...
தன் குருதிக் கொண்டு
வரலாற்றை
திருத்தி எழுதிய தீரத்தை

துரோகம்
ஒரு தீவைப்போல்
சூழ்ந்தது!

எரிநட்சத்திரம் போல்
வீழ்ந்திட்ட பிறை நிலவே!
பாலச்சந்திரா...!

மண்ணின் விடுதலைக்கு
மகனை ஒப்படைத்தான்
மாவீரன்!

பிள்ளைக்கறி கேட்டது
பிணங்களின் அரசியல்!

காணா துயரம் கண்டு
சித்தம் கலங்கி
சிதைந்தான் புத்தன்!

இன அழிப்பென்னும்
இருளை
தின்று செரித்து

போர்க்காலத்தை
முடித்து வைக்க
இனியொரு
பூக்காலம் மலரும்!

வளரும் போதே
வஞ்சகத்தால்
உதிர்ந்திட்ட
பிறை நிலவே!

ஈழம் மலர்ந்திட்ட
ஒரு நாளில்
முழுநிலவாய்
உன் முகம் பார்ப்போம்!

தியாகத்தின் கருவறையில்
வரலாறு உன்னை
மீண்டும் பிரசவிக்கும்!

■



# புலி சொப்பனமே...!

## பா.செல்வி

□

உன் கனவு என்னவாக இருந்தது மகனே?

ஏழைகளின் நாடி பிடித்து
மருத்துவம் பார்ப்பதா?

எழுதப் படிக்கத் தெரியாதவர்களின்
விரல் பிடித்து
ஈழத் தமிழ் கற்பிப்பதா?

உன் கனவு என்னவாக இருந்தது மகனே?

செயல் இழந்த எந்திரங்களின்
பழுது பார்ப்பதா?

முள்ளிவாய்க்காலின்
ரத்தச் சரித்திரம் எழுதுவதா?

சிங்களர்களின் உறக்கத்தில்
புலி சொப்பனமாக மாறுவதா?

உன் கனவு என்னவாக இருந்தது மகனே?

ஈழக்கிரியை நடத்த நினைத்தவர்களுக்கு
ஈமக்கிரியை நடத்துவதா?

எல்லாக் குழந்தைகளும்
வீட்டுப் பாடம் எழுதிக்கொண்டிருந்தபோது...
நாட்டுப் பாடம் எழுதியவனே...

ஒன்றரை லட்சம் ஈழத் தமிழர்களின்
மகா கல்லறையில்
எழுதி வைப்போம்...

'தீபகற்பத்தை
நம்பாதே தீவே' என்று.

■



# உயிர்ப் பிச்சை!

## பாவலர் வையவன்

□

என்னதான் நினைத்திருந்தாய் என் மகனே
என்னதான் நினைத்திருந்தாய்
உன்னுயிர்ப் பறிப்பதற்கு முன்புநீ
என்னதான் நினைத்திருந்தாய்
சின்னதாம் விழிகளிலே என்னென்ன
சித்திரம் வைத்திருந்தாய்
சின்னவன் உன்நெஞ்சில் எத்தனை
கனவுகள் வளர்த்திருந்தாய்?

வெடித்திடும் போர்முனையில் கிடைக்கும்
வெற்றியை நினைத்தாயா
துடிக்குமுன் தந்தையரின் போருக்குத்
துணைவரத் துடித்தாயா
விடுதலை பெற்றதனித் தமிழீழ
விடியலை நினைத்தாயா!
வடித்தநம் இலக்கியத்து வாழ்க்கை
வாழ்ந்திட நினைத்தாயா?



பள்ளியை முடித்தவுடன் நல்ல
பல்கலை நினைத்தாயா
துள்ளிடும் நண்பருடன் கூடும்
தோழமை நினைத்தாயா
முள்ளிவாய்க் காலினிலே நேர்ந்த
முடிவுகள் நினைத்தாயா
முள்வேலிக் கம்பிக்குள்ளே முன்னோர்
முடங்கினார்; துடித்தாயா!

மொத்தமாய் கருவறுக்க எண்ணும்
இந்தியம் வெறுத்தாயா
புத்தனவன் பெயர்ச்சொல்லி ஆடும்
எத்தரை மறுத்தாயா
எத்தருக்குத் துணையாக எத்தனை
தேசமெனக் கசந்தாயா
கொத்துகிற நாகத்துடன் எங்கள்
கூட்டணி; அசந்தாயா!


அன்னையும் அருகிலில்லை அன்புத்
தந்தையும் அருகிலில்லை
உன்னுடன் பிறந்தவர்கள் அங்கு
ஒருவரும் கூடஇல்லை
என்போன்ற எழுகோடித் தமிழர்
எட்டிடும் தொலைவிருந்தும்
ஒன்றுமே சொரணையின்றி வெட்டியாய்
நின்றதை நகைத்தாயா!

குற்றமெதும் செய்யாமல் அய்யகோ
குண்டுக்கு இரைகொடுத்தாய்
சற்றேனும் அஞ்சாமல் பாலச்
சந்திரா உயிர்க்கொடுத்தாய்
ஒற்றையாய் பகைவர்முன்னே உன்தன்
ஒளிமார்பு காட்டிநின்றாய்
பிற்றைநாள் வருமென்றா ஈனர்க்கு
பிச்சையாய் உயிர்க்கொடுத்தாய்!

நஞ்சினும் கொடியவர்கள் வீரத்தில்
நம்பிக்கை இழந்தவர்கள்
அஞ்சினர் நீவளர்ந்தால் நாளை
அவர்கதை முடியுமென்று
பிஞ்சினைக் கொன்றுவிட்டு தம்மேல்
பெரும்பழி தேடிக்கொண்டார்
வெஞ்சமர் வரலாற்றிலே உனக்கோர்
வெற்றியைத் தேடித்தந்தார்

என்னதான் இருந்தாலும் எங்களின்
நெஞ்சங்கள் எரியுதடா
சின்னவன் உனைநினைத்து கண்களில்
செந்நீராய் வழியுதடா
இங்குயாம் ஊமையராய் இருக்கிறோம்
அடிக்கடி விழித்திடுவோம்
பின்வரும் தேர்தல்வரை பேசுவோம்
வேறென்ன கிழித்திடுவோம்

■



# தீபத்தின் பிறை நிலவு!

## பாரதி வசந்தன்

□

பயங்கரவாதம் திட்டமிட்டு நடத்திய
பச்சைப் படுகொலைக்குப்
பலியானது ஒரு பிஞ்சுப் பூ

பதுங்கு குழி அந்தப் பாலகனால்
தன் பழிச்சொல் நீங்கி
புலி வாழ் குகையென்று
புவி முழுவதும் போற்றப்படுகின்றது

வாழ்வின் கடைசி நொடிகளிலும்
பயமின்றி மரணத்தை
சுவைத்துத் தின்னும்
நெஞ்சுரம் மிக்க புயல் முகத்தில்
அஞ்சுவது சிறிதும் இல்லை
அதில் தெரிகிறது
ஈழத்தை அடையப் போகும்
இலட்சியக் கனவு

வன்னிக் காட்டில் மீண்டும்
பகை முடிக்கும் புலியாக
வலம் வருவேன்
முள்ளி வாய்க்காலின் துயரத்தை
முடித்து வைப்பதற்கு என்கிற
பார்வையின் உறுதி கண்டு

பயந்து போனது இலங்கையின்
இன வெறி பாசிஸம்

மாவீரன் தம்பி பெற்றெடுத்த
மதிப்புமிக்க இன்னொரு
தம்பி அவன்

அதனால்தான்
துரத்தி வந்த வல்லூறுகளை
அரியாசனத்தில் அமர்த்தி வைத்து
அடைக்கலமான புறாவின் சதையை
அரிந்து தின்றிருக்கிறது
சிபிச் சக்கரவர்த்தியை சிறுமைப்படுத்திய
சிங்களப் பேரினவாதப் பேய்

அப்பாவி அல்ல
அப்பாவைப் போலவே
ஆயிரம் ஆயிரம் போராளிகளை
ஆயுதம் ஏந்தி யுத்தம் செய்யக்
கற்றுக் கொடுக்கக் காத்திருக்கும்
காலன் என்று கருதியே
கயமை புத்தியோடு
துப்பாக்கியால் துளைத்தது
தொடரும் வஞ்சகம்

இன விடுதலைக்கென்று
எழுந்து வந்த ஒரு
பெரு நெருப்பின் சிறு பொறிதான்
பிரளயத் தீயாகி விடுமெனத்
தெரிந்திருந்தும் பேடிகள்
அக்கினிக் குஞ்சை அழிப்பதாக நினைத்து
தங்கள் சிதைக்குத் தாங்களே
தீ வைத்துக் கொண்டனர்
எரிந்து சாம்பலாகிக் கிடக்கிறது
ஈனர்களின் இறுமாப்பு

புத்தனின் காலடியில்
மானுடத்தை கொன்று குவிக்கும்
இரத்த வெறி பிடித்த
இராஜபக்சே இராட்சசர்களுக்குப்

பிள்ளைக் கறி வேண்டுதலில்
பிணம்தான் நிவேதனம்

உலகம் காறித் துப்புகிறது
வேலுப்பிள்ளை பிரபாகரனின்
மகன் என்பதற்காக
பால் மணம் மாறாத
சிறு பிள்ளைக்குச் செய்த
பாதகத்தின் கொடுமை கண்டு

இந்த வரிப் புலியின்
ஈடு செய்ய முடியாத
வீரச் சாவுக்கு எழுதுவது
இரங்கல் கவிதையல்ல
எமது ஈழ மண்ணை உயிர்ப்பிக்க
தங்கள் இன்னுயிரைத் தந்த
எண்ணற்ற ஈகியர் ஆன்மா
ஒன்று சேர்ந்து பாடப் போகிற
தென் திசை விடியலின்
தேசிய கீதம்

பிரபாகரன் எனும் பெயருக்கு
ஆதவன் என்று அர்த்தம்
அதன் ஒளியை உள் வாங்கித்தான்
இரவுகளில் சிரிக்கிறது
எழில் மிகுந்த சந்திரன்

பாலச்சந்திரன் சாகவில்லை
அவன் சாகவும் மாட்டான்
பிரபாகரன் என்கிற பேரதிசயம்
இருக்கும்வரை அந்த
இன எழுச்சி வடிவத்தின் தியாகம்
எப்போதும் நிலைத்திருக்கும்

நாளை மலரும் தமிழ் ஈழத்தின்
சூரிய தீபம் பிரபாகரன்
அதில் வாழும் இளம்பிறை நிலவு
எங்கள் பாலச்சந்திரன் வரலாறு

■





# பீனிக்ஸ் புத்திரன்!

## பேராசிரியர் தி.இராசகோபாலன்

□

பனைமரக்காட்டில்
தோட்டாக்களின் படுக்கையில் துயிலும்
எங்கள் ஈழத்து பீஷ்மனே!

பாவிகளின் பத்மவியூகத்தில்
பால்மணம் பரப்பி
ஓய்ந்த பாலகனே!



உன் ஒற்றைப் பார்வை
உலுக்கிக்கொண்டே இருக்கிறது
மானுடத்தின் ஆன்மாவை!



எட்டுக்கோடித் தமிழர்களின்
இதயத்தில் நிமிர்ந்து நிற்கும்


இமயத்தின் புத்திரனே!

தன் மரணத்தால்
ஆயிரமாயிரம் வீரர்களைப்
பிரசவித்துச் சென்ற
புறநானூற்றுத் தீச்சுடரே!

எதிரிகளின் குண்டுகள் பாய்ந்தது
உன் மார்பில் மட்டுமல்ல;
உறக்கத்தில் கிடந்த
ஒவ்வொரு தமிழனின்
மனசாட்சியிலும் தான்!

இனி
ஈழத்தின் சரித்திரம் எழும்;
உன் நெஞ்சக்கூட்டின்
ரவைகள் பாய்ந்த துளைகளில் இருந்து!

■



# விழிகளின் ஒளி!

## மு.முருகேஷ்

□


வெறிகொண்டு
வீசப்படும் குண்டுகளுக்கு
பள்ளிக்கூடமா
பதுங்கு குழியா
தெரியாது.

இரத்தப் பசியோடு
நீளும் கத்திகளுக்கு
வயதான பெரியவரா
கர்ப்பிணிப்பெண்ணின் வயிறா
அறியாது.

அதர்மம் ருசித்த
துப்பாக்கித் தடிகளுக்கு
நசுக்கப்படுவது
ஆண்குறியா, யோனியா
புரியாது.



சிங்கள பூட்ஸ் கால்கள்
எடுத்து வைத்த
ஒவ்வொரு அடியிலும்
ஓராயிரம் தமிழர் உயிர்கள்
நசுங்கிச் செத்தன.



சாப்பிட்ட கையைக்
கழுவுகிற கணம்
சிறுநீர் கழிக்கிற கணம்
சாக்லேட் ஒன்றை
சுவைக்கிற கணமொன்றில்
பாலகன் பாலச்சந்திரனின்
பிஞ்சு உடலைத் துளைத்தன
ஐந்து தோட்டாக்கள்.

மரண பயமேதுமின்றி
விழுந்து கிடந்த
பாலகனின் பார்வையிலிருந்த
தீட்சண்யத்தை உள்வாங்கி
இனியேனும் எழுவோம்...
உலகத் தமிழர்களின்
ஒருமித்த குரலாய்.

■



# சிங்களவன் கோழையன்!

## கு.கா.பாவலன்

□

பாராண்ட தமிழரினம் இடையில்
பல தோல்வி கண்டதால்
படைகட்டி போர்செய்தான்
பாலச்சந்திரா உன்தந்தை
கிரேக்கரும் ரோமானியரும்
தொன்மை இனமென்று
உலகறிந்த வேளையில்
மூத்தகுடி தமிழ்க்குடி அது
போர்தொழில் செய்யும்குடி என
உலகறியச் செய்தவன்
உன்தந்தை பிரபாகரன்



நாடுகள் பலவற்றில்
நாதியற்று சிதைக்கப்பட்ட
யூதர்இனம் தனக்கென
தனிநாடு கண்டதுபோல்
சிங்களவன் ஆட்சியிலே தமிழரினம்
சிறுதுண்டாய் ஆனதால்



பகைவென்று தமிழருக்கென்று
தனிநாடு காணக்கிடைக்க
பிறந்தான் ஒருவன் பிதாமகன்
அவன்தான் பிரபாகரன்

நாடுகள் பல போகையிலே
நான் தமிழன் என்றபோது
'ஓ டைகர்' என அழைத்தான்
வெள்ளைக்காரன் வெளிப்படையாய்
இப்படி எம்மை
உலகறியச் செய்தவன் மகனே
பாலச்சந்திரா!

சிங்களவன் பிடியிலே நீ
சிக்கியபோதும் உன்
கண்களில் கலவரமில்லை
சூழ்ச்சியால் சுடப்பட்டு
வீழ்ந்தபோதும் நீ
கண்ணீரும் சிந்தவில்லை
நல்லவேளை உன்முதுகில்
காயமில்லை!

அகன்ற மார்பில்
ஐந்து குண்டு பாய்ந்ததோ
அஞ்சுக அஞ்சாமைக்கு
ஆணாய் பிறந்ததால்
பிஞ்சு உனையும் பகை
பிய்த்து எறிந்ததோ!

செஞ்சோலையில் சிந்தி
முள்ளிவாய்க்காலில் முடித்ததால்
இப்போது கண்ணீரும் இல்லையே
கதறி அழுவதற்கு!


பத்துகோடி தமிழனுக்கும்
பாதை வகுத்தவன் பிள்ளை
பகைவனிடம் செத்துக் கிடக்கிறாய்
நெஞ்சு வெடிக்கிறது
சிந்தை சிதறுகிறது!

உன் அப்பன் வீரன்
வீரச்சாவடைந்த நீயும் வீரன்!

பகைவனிடம் சிக்கிய
நீயோ பாலகன்
போர்முறைமீறி உனைசுட்ட
சிங்களவனோ கோழையன்!

நீ புதையுண்ட பூமியில் மீண்டும்
புரட்சி வெடிக்கும்
பூர்வகுடி தமிழனுக்கோ
ஈழம் கிடைக்கும்!

■



# மானிட அணில் குஞ்சே...!

## தஞ்சாவூர் கவிராயர்

□


ராஜபக்ஷே
கழுத்தில் எப்போதும்
போட்டிருக்கும் அந்த
சிவப்புத் துண்டை
கழற்றி விடாதே
எப்போதும் அது
உனக்குத்
தேவைப்படும்.

ஒரு சிறுவனின்
நெஞ்சை
துப்பாக்கி ரவைகளால்
துளைத்துவிட்டு
நீ புன்னகைக்கும்
ஒவ்வொரு முறையும்
உன்மீது ஒட்டுமொத்த
மனிதகுலமும்
காறித்துப்பும் எச்சிலை
அடிக்கடி துடைக்க
அந்தத் துண்டு உனக்குத்
தேவைப்படும்
வைத்துக்கொள்!

தம்பி
பாலச்சந்திரா!
சின்னத் தொந்தியும்
சிங்காரக் கண்களுமாய்
எதையோ கொறித்தபடி
மானிட அணில்குஞ்சாய்
மணல் மூட்டைகளில்
சாய்ந்துகொண்டு
எங்களைப் பார்க்கிறாய்
எல்லாம் முடிந்த பிறகு.

உன்னைக் கொன்றவன்
புத்தனின் சீடன் என்றார்கள்
பொறுத்துக் கொண்டேன்.
கடவுளின் நண்பன் என்றார்கள்
தாங்கிக் கொண்டேன்.
கடைசியில் அவன் ஓர்
மனிதன் என்றார்கள்
ஓவென்று அலறிச் சாய்ந்தேன்!

■



# உன் முகம்
# என் முகம்
# உலகத்தின் முகம்!

## உதயை மு.வீரையன்

□

சின்னஞ் சிறுபறவை அது
சிறகுகள் முளைக்காமல் பறக்கிறது!
தன்னந் தனியாக இதோ
தயங்கியும் மயங்கியும் தவிக்கிறது!
தின்னக் கொடுத்துவிட்டார் ஓ!
திருடிய வேடர்கள் சிதைத்துவிட்டார்;
என்னென்று கூறுவது? அதன்
ஏக்கங்கள் எப்போது தீருவது?

பச்சிளம் பாலகன்மேல் அந்தோ!
படைகொண்டு தாக்குதல் நடத்திவிட்டார்;
துச்சமாய் எண்ணுகின்றார் எங்கள்
தோழர்கள் உயிரையும் பறித்துவிட்டார்;
அச்சம் இழந்தவனை அங்கே
ஆத்திரம் கொண்டவர் முடித்துவிட்டார்;
எச்சம் இருக்கிறதா? மனம்
எட்டியே பார்த்திட மறுக்கிறதா?

எத்தனை சோதனைகள் அங்கே
ஈழத் தமிழரின் வேதனைகள்!
சொத்தும் இழந்துவிட்டார் வெறும்
சோகத்தை மட்டுமே சுமந்துவிட்டார்!
இத்தரை மீதினிலே ஓர்
இனத்தினை அழிப்பதும் முறையாகுமா?
மொத்தமாய் ஆர்த்தெழுந்தால் அந்த
மூடர்க்கு தண்டனை சிறையாகுமா?

என்ன நடக்கிறது? நாடே
ஏதும் அறியாமல் விழிக்கிறது!
சொன்னதும் செய்யலையே! அவன்
சொல்வதும் செய்வதும் மெய்யிலையே!
உன்முகம் என்முகம்தான் இந்த
உலகத்தின் முகமாகும் உன்முகம்தான்!
இன்னும் பிறந்திடுமா? ஈழம்
எப்போதும் விடியாமல் இருந்திடுமா?

போர் அங்கே ஓயவில்லை ஐயோ,
பெருகிய குருதியும் காயவில்லை!
யார் அங்கே ஆளுகின்றார் ஹிட்லர்
எப்படி இங்கேயே வாழுகின்றார்?
பார்த்தது போதுமையா? இந்தப்
பாவியை கூண்டிலே ஏற்றிடுவீர்!
ஆர்த்தே எழுந்திடுவீர் ஓர்
அநியாய உலகத்தை மாற்றிடுவீர்!

நாட்டை இழந்துவிட்டார் எங்கும்
நாடோடி யாகவே மாறிவிட்டார்!
கோட்டை பறிகொடுத்தார் வஞ்சக்
கோழைகள் வந்தே குடிபுகுந்தார்!
வீட்டை எடுத்துக்கொண்டார் அந்த
வெறியர்கள் படையோடு படுத்துக்கொண்டார்!
மீட்டுப் பணிமுடிப்பார் அங்கே
மீண்டும் தமிழர்கள் கொடிபிடிப்பார்!

■



# தளிர்களின் தவம்!

## இயக்குநர் 'யார்' கண்ணன்

□

பாலச்சந்திரா!
உன் பிறப்பிடம்;
குண்டுமழையில் மூழ்கிப்போன
குமரிக்கண்டத்தின் மிச்சம்!
அது;
தண்ணீரின் நடுவே
தமிழகம் வடித்த
கண்ணீரின் துளி!

மனிதனை
மனிதனே விரட்டும்
மஞ்சுவிரட்டுக் களம்!
பசியாறத் தீமூட்ட
பானைகளே பற்றி எரியும்
பாதகர் பூமி!

உலக வரைபடத்தில்
இன்னும்
ரத்த நிறத்தில் அச்சாகும்
பிழை திருத்த முடியாத
அச்சச்சோ பிரதேசம்
நீ பிறந்த தேசம்!

பாலச்சந்திரா!
நீ கேட்ட தாலாட்டு
திராவிட ராவணன்
ராகம் வரைந்த
லங்கா புரியில்
அபஸ்வரங்களின்
அலாரிப்பு...
ஆலாபனை!

பீரங்கி
ஏவுகணை
துப்பாக்கிச் சத்தம்!
ஆதியைக் கூவிவிற்று
ஆயுளைப்
பசிக்குத் தின்ற
பதுங்கு குழி ஓலம்!

பிணம் தின்னிக் கழுகுகளின்
பேரிரைச்சல்
சடலங்கள் கரையாக
கொப்பளித்து ஓடிய
குருதியாற்றின் சலசலப்பு!

முலைகள் திருகப்பட்டும்
அசிங்கம் கொட்டப்பட்டும்
அந்தரங்கம் வெட்டப்பட்டும்
பவித்திரத்தை பறிகொடுத்த
பத்தினிப் பெண்டிர் அலறல்!

சாஸ்திரிய தம்புராக்களை
உடைத்து
கைக்குச்சிகளாக்கிய
பறைகொட்டு!

அதர்மம்! சரணம்! கச்சாமி
என
ஆற்றாது அழுத
உரத்த குரல் ஒப்பாரி!

பாலச்சந்திரா! உன்
ஓர் உயிர் அறுவடையை
ஊடகங்கள் எல்லாம்
பிரகடனப்படுத்திய
பெருதுக்கப் பொழுதில்
ஆயிரம் லட்சம் கோடியாய்
நீ
அவதரித்துக்கொண்டே இருந்தாய்!

கடந்த காலத்தின்
போர்க்குற்றப் பொழுதுகள்
இன்றின்
இனப்படுகொலைகள்
எல்லாவற்றிற்கும்
ஒரு முற்றுப்புள்ளியாய் உன்
ரத்தச் சொட்டு!

பாலச்சந்திரா!
வாழ்க்கையைக்
கொஞ்சம்கூட
ருசி பார்க்காத உன்னை
சாவு எப்படி
சாப்பிடச் சம்மதித்தது?
மடியில் கிடத்தி
மகனே என்று
அடையாளம் இட
எந்தப் புறநானூற்றுத் தாயும்
அருகில் இல்லையே

பாலச்சந்திரா!
பால் கொஞ்சும் முகத்துக்குச்
சொந்தக்காரனே!
உன் நேற்றைய மரணத்துக்கு
இன்றைக்கும் பால்
எவரும் ஊற்றவில்லையே!

அரிசி உணவை
ஆரம்பிக்கும் அகவையில்
வாய்க்கரிசிக்கிக்கூட


வகையில்லாமல்
ஒரு மரணமா?

போராளித் தந்தையைப்
போலவே
புகைப்படத்தில்
ராணுவப் பார்வையுடன்
நின்றாயே!
உன்னைத் தின்ற
மண்ணைக் கீறி
மீண்டும் நீ
மலர்ந்து வருவாயா?

செஞ்சோலையில்
செத்துப்போன
நானூறு குழந்தைகளை
ஞாபகப்படுத்தியது
உன் சிறிய புன்னகை!
அமில குண்டின் அணைப்பால்
2009ல்
இன்னுயிர் நீத்த
ஒன்றரை லட்சம்
தமிழ் உயிரின்
நிலையை உயர்த்தி உணர்த்தியது
உன் கலைந்த கேசம்!

பாலச்சந்திரா!
இலைகள் உதிர்வது கூட
இப்போதும் உண்மைதான்
என்றாலும்
உன்னால்
காம்புகள் கால் வைத்த
தடங்களில் எல்லாம்
கண்ணுக்குத் தெரியாத
தளிர்களின் தவம்!
நாளைகளில்
சத்தியமாக
தமிழீழ வனம் தழைக்கும்!

■



# பாலச்சந்திரன்!

## கவிஞர் பெ.சிதம்பரநாதன்

□

மின்மினியைக் காட்டிக் கொடுப்பதைத் தவிர
இருட்டுக்கு வேறு என்ன வேலை?
கண்மணியே! உன்னைக் காட்டிக்கொடுத்ததைத் தவிர
கயவர்களுக்கு வேறு என்ன வேலை?

மாட்டுத் தொழுவத்தில் பிறந்த
ஏசுவைக் கொல்ல முடியாமல்
அன்று பிறந்த எல்லாச் சிசுக்களையும்
கொன்று குவித்தார்களாமே கொடியவர்கள்!

பிள்ளைக் கனியமுதே!
ஊர்ப்பிள்ளைகள் அப்படிச் சாகக் கூடாதென்றா
யார்பிள்ளை நீயென்ற ரகசியத்தைச் சொல்லிவிட்டாய்

தாயோடும் தமக்கையோடும் நீயும்
தப்பித்துப் போய் இருந்தால்
இரண்டாம் ஈழப் போருக்கு
இன்னொரு தளபதியாக
அன்னையே உன்னை உருவாக்கியிருப்பாரே

சயனைடுகுப்பிச் சைனியத்தை நிறுவிய தலைவன்
உனது கழுத்திலும் விஷக் குப்பியைச் சூட்டியிருந்தால்
உனக்குமல்லவா சுதேசி மரணம் வாய்த்திருக்கும்

பிள்ளைக் கறிசமைத்த சிறுத்தொண்டனுக்கு
சீராளனை மீட்டுத் தந்த
சிவனடியார் போல புத்தபிட்சு
எவனாவது உன்னைப்
பிழைக்க வைத்திருந்தால்

ஆழ்துளைக் குழாயிலிருந்து சிசுவை மீட்ட
ஆனந்தமல்லவா அடைந்திருப்போம்


இருவிரல்களின் கொய்தலையே தாங்காத
இளந்தளிரே!
உன்னையா தோட்டாக்களால் துளைப்பது?
பிஞ்சு நிலாவே!
பால்வடிந்த உன் முகத்தைப்
பார்த்தாலே பரவசநிலை சித்திக்குமே!

பிறைச் சந்திரா!
உன்னைச் சுட்டுக்கொன்ற பாவிக்கு
மனச்சாட்சி மட்டுமிருந்தால்
தற்கொலைதான் செய்திருப்பான்

வரிப்புலியின் வாரிசே!
குள்ளநரிகள் உனது கூடாரத்துக்குள் இருந்ததை
பாலகனே! உன்னால் எப்படிப் பகுத்தறிய முடியும்?

ஒரே ஒரு ஆறுதல்
ஈழமண்ணில்தான் நீ இறந்திருக்கிறாய்
இறந்த பின்பு தமிழர்களின் வீடுதோறும்
பிறந்துகொண்டே இருக்கிறாய்!

■



# மண்ணில் விழுந்த இளைய நிலாவே!

## வானம்பாடி இளமுருகு

□

மண்ணில் விழுந்த
இளைய நிலாவே

கதியற்றுக் கிடப்பதாய்
கலங்காதே மகனே

அடக்கி
அடிமைப்படுத்த நினைத்து
மனித வேட்டை யாடியவர்கள்

காலத்தின் காலில்
மிதிபட்டுப் போனார்கள்

அடிமைப் படுத்தியவர்கள்
அடிமை யானார்கள்

சகலரும் அறிந்த
சரித்திரம் இதுவே

கொலைக் கள நடுவில்
நாற்புறமும்
சுற்றி வளைத்து

காலம்
அவர்களைக் கைது செய்கையில்...

இட்லரின்
தற்கொலைதான்
அந்தக் கொலைக் கும்பலுக்கும்

முசோலினியின்
விளக்குக் கம்பத்
தலைகீழ்த் தொங்கல்தான்
அவர்களுக்கும்


முகத்தில்
காறித் துப்பலும் நடக்கும்

இட்லரின்
நச்சுப் புகைக்கூண்டின்
யூதப் படுகொலைப் பிரசவம்தானே
யூதர்களின் இஸ்ரேல் நாடு

தமிழ்இனப் படுகொலையும்
நிச்சயம் பிரசவிக்கும்
தமிழ் ஈழம்

நகரும் சரித்திரம்
இனி
அந்த திசை நோக்கித்தான்

■



# புத்தம் மரணம்!

## ஆரூர் புதியவன்

□

கவிதையா
வருகிறது...
அழுகைதான்
வருகிறது...

பாலகன்
பாலச்சந்திரனே
உன்
பனிமலர் வதனத்தில்
விடுதலை விழையும்
தேசங்களின்
தியாகமுகம்
தெரிகிறது

ஈராக், பாலஸ்தீன்
ஆப்கான், வியத்நாம்
இன்னும்
ஏராள நாடுகளில்
நசுக்கி, பொசுக்கப்பட்ட
மழலை மலர்களின்
நினைவுருவாக
நின்முகம்
திகழ்கிறது.

என்னசெய்வேனடா
தம்பீ...!
துப்பாக்கி உள்ளவனிடம்
இதயம் இல்லை
இதயம் உள்ளவனிடம்
துப்பாக்கி இல்லை.

புத்தநெறி
யுத்தவெறியானதால்
சித்தார்த்தனை
சிதைத்தார்கள்
சிங்கள வெறியர்கள்.

அவர்களது
நாவில்
புத்தம் சரணம்...
அவர்களது
நாட்டில்
புத்தம்
மரணம்
என்ன செய்வேனடா
தம்பீ!

அன்னை நாட்டின்
அதிகார அவைகளில்
'அவர்கள்' என்ற
அடைமொழியோடு
அமர்ந்திருந்தன
அவைகள்...
அதனால் பாய்ந்தது
உன் மார்பில்
ரவைகள்!

மலரில் வண்டுகள்
என்றால் சுகம்...
மலரில் குண்டுகளா?
எரிகிறது மனம்.




பதுங்கு குழியில்
வைத்து
படுகொலைகளைப்
பார்க்க வைத்து
பாலகனே உன்னைக்
கொன்றனர் பாதகர்கள்
அதனைப்
படமெடுத்துப் பரப்பி
மகிழ்ந்தன
அந்தப் பாம்புகள்
கருணையற்றக்
கொடியவர்கள்
இழிவு சுமந்து
அழிவார்கள்...

வஞ்சிக்கப்பட்ட மக்கள்
அன்று
வாழ்த்துகளை
மொழிவார்கள்.

நீ
பிரபாகரனுக்குப்
பிறந்த பிள்ளை
இப்போதோ
ஒவ்வொரு
தமிழனுக்கும்,
தமிழச்சிக்கும்
நீ
இறந்த பிள்ளை.

■



# தமிழ் விதையே!

## ஞானாச்சாரியார் கண்ணன்ஜி

□

விழுந்த மரங்களை விழிக்கவைக்கும் தமிழ்விதையே!
உலர்ந்த நிலத்தை நனைக்கவந்த உயிர்நதியே!
உன்னை ஈன்றவன் உலகத்தார் நெஞ்சத்தில்
தன்னை வீரத்தால் நிறுத்திவிட்டு விடைபெற்றான்!
நீயோ
தமிழர்தம் நெஞ்சமெலாம் உன்னை நிறுத்திவிட்டு
விடைபெற்றுப்போய் விட்டாய்; காலமகள் அழுகின்றாள்!

போரிடும் வயது உனக்கில்லை என்பதனால்
தேகத்தை இன்னுயிரை தியாகம்நீ செய்தாயோ?
ஒரேஒரு பாலாவை உன்தந்தை படைத்தான்; நீயோ
உன்தேக விதையால் பலகோடி பாலாவை;
விதைத்துச் செல்கிறாய்; விழிமழையில் நனைகின்றோம்!

இரவே இரவின் இரவான காலமே!
துயரே துயரின் துயர்கொண்ட மூலமே!
இடியே இடியின் இடரான தாக்கமே!
உயிர்த்தோம் உயிர்த்தும் உயிரற்று வாழ்கிறோம்!

கோடானு கோடி தமிழரின் வெளிச்சத்தை
நாடாளும் அரக்கனும் இருட்டாக்கிக் குதிக்கிறான்;
ஏடாண்ட தமிழரின் தத்துவ நூலினைக்
காடாளும் மூளையால் கொளுத்தியே சிரிக்கிறான்.

இறைவனின் சித்தமும் அங்கெங்கு போனது?
அவனது கருணையும் அங்கென்ன ஆனது?
ராஜபக்ஷேவின் திமிர்போக வேண்டுமே!
ரகசிய நெருப்பினில் அவன்வேக வேண்டுமே!

உலகத்தின் கோபத்தை முழுதாக வாங்கினான்;
மனிதப் பட்டியலில் அவன்தானாய் நீங்கினான்!
புலிவாலைத் தொட்டவன் பயங்கொண்டு வாழ்கிறான்!
வரலாற்றின் சரிவுகளில் கொடுநெஞ்சன் வீழ்கிறான்!
காலத்தின் கணக்கிலே பாலச்சந்திர தேவனை

யார்நீக்க இயலும்? அவனொரு இளஞ்சித்தன்!
மரணத்திலும் நொடியிலும் புன்னகை பூக்கிற
சின்னவன் ஞானத்தில் பெரியவன் ஆகிறான்!

கண்ணீரால் காவியம் கணக்கற்று எழுதலாம்
செந்நீரால் சரித்திர முகத்தையே மாற்றலாம்
அறத்தால் அநீதியை அடியோடு வீழ்த்தலாம்
அசிங்கனாம் பக்ஷேவை அறத்தீயால் எரிக்கலாம்!

■



# புலம்பியழுகிறேன் பாலச்சந்திரனே...!

**ச.பாபுஜி**

□

என் உள்ளத்தை
துன்பம் தகர்க்க
என் இமைகளைக்
கண்ணீர் உடைத்தது.

உனக்கும் எனக்கும்
தொடமுடியாத தூரம்
ஆனால்
நெஞ்சின் ஆழத்தை
தொட்டுவிடும் துயரம்.

ஒரு வீரனின் குழந்தையை
வீழ்த்திட
துணைபோனது துரோகம்
ஒரு பாலகனைக் கொன்று
பலியானது மனிதம்.



வறண்ட உன் கண்களில்
அந்த
வெறிச்சோடியப் பார்வையில்
இருந்தது
அந்நியப்பட்ட முகம்.



வல்லூறுகள்
உன்னை வட்டமிட்டபோது
கிடைத்த உணவை
நீ அருந்திக்கொண்டிருந்தாய்
காவல் இல்லா கோழிக்குஞ்சாக
இருந்த உன்னைக்
கொத்திச் சென்றன
பிணம் தின்னும் கழுகுகள்.

உயிரை மேய்ந்தன
உன் மெய்துளைத்த
துப்பாக்கிக் குண்டுகள்.

பாலச்சந்திரனே!
எப்படித்தான் தாங்கினாயோ?
என்னவெல்லாம் நினைத்ததப்பா?
உன் மனம்
தாயை நினைத்தாயா?
தந்தையை நினைத்தாயா?
பிறந்த தாய்நாட்டை நினைத்தாயா?
அல்லது
நினைவுகளெல்லாம்
மறந்துபோன
நிலையில் தவித்தாயா?

யாரை நீ தேடினாய்?
சாவு வரப்போகிறதென்று
சந்திக்கக் காத்திருந்தாயா?
ரத்தம் சிந்திய உனக்கு
என்னால்
கண்ணீரை மட்டுமே
சிந்த முடிந்தது.
எங்கள் கோபக்குரல்களை
காற்று
சிதற அடித்தது.

உன்னை
தோற்கவிட்டு நிற்கின்ற
தொப்புள்கொடி
உறவுகளப்பா நாங்கள்.


தாயின் மடியில்
உறங்கும் குழந்தையாய்
தாய் மண்ணின் மடியில்
கண்மூடிய குழந்தையே
உன்னைத்
தாலாட்ட யாரும் இல்லையென்றா
தனியாகத் துயில் கொண்டாய்.

உன்னை மண்மூடினாலும்
உலகின் கண்மூடாது.
உலகத்தின் நெஞ்சில்
உன்னைக் கைவிட்ட
உறுத்தல் இருக்கிறது
உலகத் தமிழரின்
நெஞ்சமெல்லாம்
உன்னை எண்ணி எண்ணி
உதிரம் வடிக்கிறதய்யா!

மீண்டும் மீண்டும் வருகிறதப்பா
நீ மாண்டு கிடக்கும் காட்சி!

எதைக் கொண்டு
மீட்டெடுப்பேன்
என் துயரத்தையும்
உன் ஈழத்தையும்!

■



# மானுடமே மரித்துப்போனதா

## பிறைசூடன்

□

ஊடகத்தில் பார்த்த காட்சி
ஊடுருவி உயிர் வலித்தது
ஏடகத்தில் எழுதிஅழுவதால்
இளங்குருவி எழுந்து பறக்குமா?

பூக்குமுன் இளநாத்தை
வெட்டி சாய்ப்பதா?
பூவுக்குள் குண்டு வைத்தே
வெடித்துப் பார்ப்பதா?
மானுடமே மரித்துப்போனதா
மண்ணகமே திகைத்துப்போனதே

மல்லாந்து கிடக்குமந்த
மரிக்கொழுந்தை
மரணிக்கத்தான் செய்தது யார்?
இறையில்லையா?...

நாதியற்ற தமிழனுக்கு
நடந்ததிது இழவா!
நல்லதமிழ் மழலைக்கு
நிகழ்ந்தது பழுதா!

பாதிமூடித் திறந்திருக்கும் மென்விழிகள்
பதிவு செய்ய விரும்புகின்ற சேதிஎன்ன?
நீதியற்ற கொடுங்கோலின் நிகழ்விற்கு
நெஞ்சமுள்ளோர் எடுத்துரைக்கும் வாதம் என்ன!

குற்றமதன் சுவடறியா நெஞ்சகத்தை
குண்டுவைத்து துளைத்ததொரு கொடூரமிது
கொலைத்தொழிலே செய்வோரும் செயத்துணியா
கூற்றுவனும் கலங்கிநிற்கும் கொடுமையிது.

பால்மணமே மாறாத பசுங்கிளிக்கு
சாவதனை பரிசளித்த சோகமிது
கால்முளைத்து நடந்ததொரு தாமரைக்கு
கைத்துப்பாக்கி செய்ததோர் சதியுமிது

தாய்அணைத்த சூடுமாறா
தளிர்க்கொடியின் பூவுடலை
நாயினும்கீழோர் நயவஞ்சகம்
நடுவீதியில் சாய்த்ததென்ன...?

சேய்கூட நாடுகாப்பானென்று
செருக்குற்ற தந்தை சவமானதால்
பேய்ஆடிய ஆட்டமிது
பிடுங்கி எறிந்த தோட்டமிது

ஒப்புக்குஅழுது ஊர்கூட்டி
ஒப்பாரி வைத்து பின்
உண்டுறங்கி காலம்தள்ளும்
உன்மத்தர்களே!
எப்பொழுது விழிப்பீர்கள்
எப்படி வெல்வீர்கள்

தப்புக்கு தலைகுனிந்து
தன்குடும்ப நலம் நினைத்தால்
உப்புக்குபதில் உன்கண்ணீரே
உன்வீட்டில் ஓயாமல் வழிந்தோடும்!

■



# பூமிக்காக விழுந்த புலிப்பால் சொட்டு

## வாணியம்பாடி அப்துல்காதர்

□

புலிகளாக நீங்கள் அங்கு!
அலிகளாக நாங்கள் இங்கு!

பிறப்பிலேயே
தாயின் பனிக்குடத்தை
தாய்க்கும்
தனக்குமான
ஈமக் குடமாக்குபவர்கள்
நீங்கள்!

இடையில்
இருப்பது
அவிழாமல்
இருப்பதைக் காட்டிலும்
தலையில் இருப்பது
கவிழாமல் இருப்பதிலேயே
கவனம் செலுத்தும்
கரகாட்டக் கலைஞர்கள் நாங்கள்!

தமிழ் ஈழ வடிவத்தில்
இருப்பதால்
தூக்குக் கயிறுக்குத்
தலைகொடுப்பவர்கள் நீங்கள்!

தந்தை பிரபாகரனை
இந்தியா கொணர்ந்து
தூக்கிலிட வேண்டுமெனத்
தீர்மானம் நிறைவேற்றுபவர் நாங்கள்!

தாலாட்டிற்கும்
ஒப்பாரிக்கும்
வாய்ப்பில்லாத்
தாய்பூமியில்
சமரில்
சாவது
சகஜம் என்பவர் நீங்கள்

போரில்
பொதுமக்கள்
சாவது சகஜம் என்பவர் நாங்கள்!
மருத்துவ அனுமதி
மறுத்துத் திருப்பி அனுப்பி
உன்
பாட்டிக்குப் பாடைகட்டுவோம்
ஆனால் பேரனான உன் இரங்கலுக்கு
இங்கு மேடைகட்டுவோம்!

உங்கள் மீது பொழியச்
சிங்களவனுக்குப் பயிற்சியொடு
குண்டு தருவோம்
உங்களுக்கு வாய்க்கரிசி போடச்
சண்டு தருவோம்!

சிங்களத் துச்சாதனன் கைகளில்
அங்குள
எங்குலப் பெண்களுக்காக
சேலை தருவோம்
புடவை விநியோகப்
பொறுப்பையும் தருவோம்!

உங்களுக்காகத் திரட்டப்பட்ட
உயிர்காக்கும்
மருந்து தடுப்போம்

பச்சைத் தமிழ் மாமிசபட்சிணி
பருந்துக்கு இங்கே
விருந்து கொடுப்போம்!

எப்படி
ஈழத்தமிழரைச் சுட்டுப்பொசுக்குவது
என்பதற்கு
இலங்கைப் படைக்கு
தமிழக மீனவரைச்
சுட்டுப் பழகச் சுடச்சுட
சொல்லிக் கொடுப்போம்!

அங்கே
பலாத்காரக் கைகள்
தமிழ்ப் பெண்மை நிலத்தில்
சிங்கள விதைகளைத்
தூவத் தூவ
இங்கே
இறையாண்மை ரேஷன் கடையில்
இலவச அரிசிக்காக நிற்கிறோம்!

வர்ணம் பூசும் பாவனையில் வந்து
அமெரிக்கத்
தீர்மானக் காளையின்
கொம்பினை ஒடித்துப்
பூம்பூம் மாடாக்கிய
புண்ணிய வான்கள் நாங்கள்!
காயடித்த
கைகளோடு
கை குலுக்கக்
காலம்பார்ப்பவர் நாங்கள்!

வெள்ளந்தியாக
வெறித்துப் பார்த்திருக்கிறாய்
பாலச்சந்திரா!
ஒரு
புலிக்குட்டி என்பதால் பதுங்கு குழியில் நீ!


பிறக்கும் தமிழ் ஈழத்தின்
அறுக்கப்படாத
தொப்பூள் கொடியாக நீ!

பிரபாகரன் பிள்ளை
பிஸ்கட் சாப்பிட்டால்
இராஜபக்ஷேயின் வாரிசு
சயனைட் சாப்பிடும்
சரித்திரம் மலரும்!

இறுதியில்
உன்னை நோக்கி
நீட்டப்பட்ட
அந்த துப்பாக்கித் தோட்டாக்கள்
ஓர் கோழையின்
கைவிரலுக்கு
அடிமையா யிருப்பதை விட
ஒரு
மாவீரன் பிள்ளையின்
மார்பில்
அடைக்கலப் படலாமே என
உன்
சந்தன மார்பில்
சரணடைந்திருக்கும்!

உன்
நிழற்படம்
நிச்சயமாய்ச் சொல்லும்
என் ஈழத்தமிழினமே!
எச்சிலைக்
காறி உமிழக்கூட
இந்தியா பக்கம்
எப்போதும் திரும்ப வேண்டாம்!

■



# உன் குருதியில்...

## இலக்கியா நடராஜன்

□

எங்கள் பேனாக்கள்
மைக்குப் பதிலாக
நீ சிந்திய
செங்குருதியை
ஊற்றிக் கொள்கின்றன.

இன உணர்வுள்ள
எந்த எழுத்தாளனின்
பேனாக்கள்
எழுதுகிற நிறமெங்கும்
உன் குருதியின் சிவப்பே.

எங்கள் நாசிகளில்
இராஜ திராவகத்தைச்
சுவாசித்ததைப் போல
அனல் தெறிக்கும்
நெருப்பின் தகிப்பு.

அடடா...
தோட்டாக்கள் துளைத்த
உன் மார்பில் வடிந்த
வீர ரத்தத்தையல்லவோ
எங்கள் நாசிகள்
சுவாசிக்கின்றன...

கண்களின் எண்ணிக்கையில்
கடவுளையும் விஞ்சிய
காவியன் நீ.

நெற்றிக்கண் திறந்தபோது
சிவனுக்கு மூன்று கண்கள்
அஞ்சாப் பிஞ்சு நீ
உன் மார்பைத் திறந்தபோது
கொடுமை தம்பி,
கொடூரமான தோட்டாக்கள் துளைத்த
ஐந்து கண்கள்.

சிவபெருமானின்
நெற்றிக் கண்ணில்
நக்கீரன் எரிந்தது தவறு.

சின்னஞ் சிறு
செல்லக்கிளி
உன் மார்புக் கண்களில்
வழிந்த குருதியில்
ஒரு புதிய இனத்தின்
விடுதலை எழுவது உறுதி.

வண்டுகளால் துளைக்கப்பட்ட
துரோணாச்சாரியாரால்
இங்கு மகாபாரதம் பிறந்தது
குண்டுகளால் சிதைக்கப்பட்ட
துவார பாலகா,
தம்பி, பாலச்சந்திரா...
உன்னால்
ஒரு புதிய காவியம்
உன் மண்ணில் எழுந்திடும்.

கையறு நிலையில்
இப்போது
நாங்கள் இருந்தாலும்
காலத்தின் மீது
கனன்று எரியும்
மெய்யுறு உலையாக
அனுமன் விட்டுவந்த
அந்தத் தீயின் புயலாக
எங்கள் எழுத்துக்கள்
விரைவில் எரிக்கும்
வீறுகொண்ட பெரும் ஊழித்தீயாய்
அக்கினிக் கங்குகளை விரிக்கும்.

அப்போது
எம் இனத்திற்கெதிரான
எல்லாக் கொடுங்கோன்மையும்
அந்த ராட்சத நெருப்பினில்
மரிக்கும்.

■



# உலகத் தலைமையும் ஏற்று ஆள்வோம்!

## கவிஞர் பொன்னடியார்

□

எவர்செய்தாலும் அது
இழிந்த செயலே!
ஏற்க முடியாத
ஈனச் செயலே!
பதுங்குக் குழியில்
பசியாறிக் கொண்டுள
பச்சிளம் பாலகன்
பாலச்சந்தரை
பகைவர் அங்கே
பதைக்கப் பதைக்கப்
படுகொலை செய்தனர்!
பாவிகள் செயலைப்
பாரே பார்த்துப்
பதறித் துடித்தது!
பைந்தமிழர் மனமும்
குமுறி வெடித்தது!
மனித சமூகத்தின்
மாண்பினை எல்லாம்
போட்டு மிதித்துப்
புத்தர் வேதம்
படித்திடும் நீசர்
பொல்லாச் செயலெலாம்
பூமிப்பரப்பைப்
புண்ணாக்கும் செயலே!

ஒருபாவமும் அறியா
ஒளிமுகச் செல்வன்
குண்டுகளாலே
குதறப்பட்டது
மன்னிக்க முடியா
மாபாதகச் செயல்!
கேவலங்களுக்கெலாம்
கீழான கீழ்ச்செயல்!

இனப்போர் மதப்போர்
எல்லைப் போரெனும்
சாக்குகளின் பெயரால்
சாந்தி உலகின்
குரல்வளை நெரிப்பது
கொலைஞரின் கொடுஞ்செயல்!

முதியோர் பெண்கள்
குழந்தைகள் அறிவோர்
என்றும் பாராமல்
இன்னுயிர் பறிப்பவர்
பிசாசுகள் பெற்ற
பெரும் பிசாசுகளே

அமைதிக்குப் பங்கமினி
ஆர்விளைத் தாலும்
அமைதிக்கு அழிவை
ஆர்விதைத்தாலும்
மனித சமூகம்
மன்னிப்பதில்லையெனும்
உறுதியை ஏற்று
ஓரணி திரள்வோம்!
உலக அனுமதியின்
ஒளிமுகங் காண்போம்!
ஒப்பிலாத தமிழர்
ஒன்றுபட் டுழைத்து
உலகத் தலைமையும்
ஏற்று ஆள்வோம்!

■



# உதவியதும் உதவாததும்

## சங்கர சுப்பிரமணியன்

□

அவல் கொடுத்த குசேலனுக்கு பொருள் கொடுத்தாய்
ஏழைப்பங்காளன் என உன்னைக் காட்டிக் கொண்டாய்
குரல் கொடுத்த பாஞ்சாலிக்கோ துகில் கொடுத்தாய்
மானங்காத்தோன் என உனை அறிய வைத்தாய்
பிளிறியே கலங்கிய கஜேந்திரனுக்கு அபயமளித்தாய்
ஆபத்பாண்டவன் என உனை போற்றவும் வைத்தாய்


போரால் எம்மக்கள் உணவின்றி மாண்டபோது
எங்கு சென்றாய் உன்னிடம் பொருளில்லையா?
எம்பெண்கள் ஆதரவின்றி மான பங்கப்பட்டபோது
என்னவாயிற்று உன்னிடம் ஆடை இல்லையோ?
முள்ளி வாய்க்காலில் மொத்தமாய் மடிந்தபோது
உன்விரல் சுற்றும் சக்கரம் எங்கோ சென்றுவிட்டதோ?

வானரங்கள் பாலங்கட்ட வந்து உதவி செய்யலையோ?
அயல்நாடு என்பதால் அனுமதியும்தான் கிடைக்கலையோ?
சீதை இருந்தால்தான் பெருஞ்சேனையுடன் நீ வருவாயோ?

அண்டை நாட்டுக் கடவுளானதால் அமைதி காத்திட்டீரோ?
அந்நாட்டுக் கடவுளும் எனக்கென்னவென இருந்திட்டாரோ?
அரசியல் வேண்டாமென இருவரும் மௌனமாயிருந்தாரோ?

அக்கடவுளும் காக்கவில்லை இம்மனிதரும் காக்கவில்லை
எவரும் எம்மக்களை என்றைக்கும் காக்கப் போவதில்லை
எம்மக்கள் விடுதலையை எம்மக்களே வென்றெடுப்பர்!
எம்மக்கள் வென்றெடுப்பர் எம்மக்களே விடுதலையை!!

■



# இதயக் கண்ணீர்

## அ.பாரூக்கனு

□

பாலச்சந்திரா...
உன்
உயிர் நின்றுவிட்டது!
ஆனால் இன்னும்
எங்கள் கண்ணீர் நிற்கவில்லை!!

அரைக்கால் பேண்டுடன்
அழகாய் அமர்ந்திருந்தாய்.
அதற்குள் என்ன நடந்தது?

உணவு கொடுக்காமல்
உன் வயிற்றுக்கு
குண்டுகளையா கொடுத்தார்கள்?

துப்பாக்கி குண்டுகளா
உன்னை
தூங்க வைத்தது?
அவைகள் கூட,
உன்
பால் முகத்தை
பார்க்கவில்லையா?

நீ...
தமிழனாய் பிறந்ததா
தவறு?

இந்த சின்ன
"இதயத்தை" சிதறடிக்க,
எந்த
மனித இதயத்திற்கு
மனம் வந்தது?

பாலச்சந்திரா
உன்
உறக்கத்திலாவது,
தமிழன் விழிக்கட்டும்
தமிழ் வாழட்டும்.

இதோ... எங்கள்
இதயங்கள்
கண்ணீரில் குளிக்கின்றன.

■



# புறநானூற்றுத் தாயாய்...

## இரா.பெ.வெற்றிச்செல்வி

□

பச்சைப் பொய்களை
மெய்கீர்த்திகளாய்க்
கடை விரித்து
துதிபாடி பிழைக்கும்
ஈனக்கூட்டங்களுக்கு மத்தியில்
மானக் கூட்டமாய்
மலர்ந்திருக்கும்
மாணவக் கண்மணிகளே!
தமிழகத்தின்
உறக்கம் கலைக்கிறது
உங்கள் முழக்கம்.
வெற்று முழக்கம்
கேட்டு, கேட்டு
புளித்துப் போன செவிகளில்
உங்கள் வீரமுழக்கம்
தேனாய் இனிக்கிறது.

ஆயிரம் ஆரியனை
ஒருதனி வென்றுவந்த
செங்குட்டுவனின்
செருவெங்கோலம்
உங்கள் விழிகளில்...


பாலகனைப்
போருக்கு அனுப்பி
பூரித்து நின்ற
புறநானூற்றுத் தாயாய்
உங்கள் தெளிவு கண்டு
திறன் கண்டு
பனிக்கிறது கண்கள்.

உங்களிடம்
அச்சம் இல்லை.
அப்பழுக்கில்லை.
புகழ் வணிகம் இல்லை.
பொறாமை வசை இல்லை.

கணக்குப் பார்த்துச்
சுருங்கும்
கடுகு மனம் இல்லை.
கட்சி கறை இல்லை.
கள்ள வித்தை இல்லை.
சுயம் உடைத்து...
சுகம் உடைத்து...
ஆதித் தமிழனின் வீரம் எடுத்து
அன்னையர் நெஞ்சில்
ஈரம் எடுத்து
வெள்ளமாய் வந்திருக்கிறீர்கள்
வீதிக்கு.

கடல் தாண்டிப் போய்
இனத்தின் கண்ணீர் துடைக்கும்
உங்கள் கைகள்
அரசியல் அழுக்கைக் கழுவ
இனி
அமிலம் எடுத்து வரட்டும்!

■



# இலங்கை தமிழ்ச் சகோதரியின் கண்ணீர்

## கவிஞர் கே.ஆர்.சுப்பிரமணியம்

□

வன்னிக் காட்டுக்குள்ளே எங்க
வம்சமே அழியுதய்யா
ஏனென்று கேட்டிடவும்
எங்களுக்கோர் நாதியில்லை
எங்களுக்கோர் நாதியில்லை... (வன்னிக்)

அக்னி குழம்பினிலே
அழியுதே தமிழினமே
பெற்றவர்கள் கண்ணெதிரே
பிள்ளைகள் பிணமாகுதே
பிள்ளைகள் பிணமாகுதே... (வன்னிக்)

சீரோடும், சிறப்போடும்
செல்லமாய் வளர்ந்த மகன்
சிங்கள ராணுவத்தால்
சிதறியே போனானே
சிதறியே போனானே... (வன்னிக்)


கையிழந்து காலிழந்து
கதறுதய்யா மக்களெல்லாம்
கருணை புரிந்திடவும்
கடவுளுக்கும் மனமில்லையே
கடவுளுக்கும் மனமில்லையே... (வன்னிக்)

கொள்ளி போட பிள்ளை ஒன்று
கொஞ்சி வளர்த்தோமே
கொஞ்சி வளர்த்த மகன்
குண்டுக்கிரையானானே
குண்டுக்கிரையானானே... (வன்னிக்)

எடுப்பார் கைப்பிள்ளையாய்
ஏங்கிக் கிடந்தோமே
எடுக்க ஒரு நாதியில்லை
இறைவா நீ எடுத்துக்கொள் (எங்களையே)
இறைவா நீ எடுத்துக்கொள் (எங்களையே)... (வன்னிக்)

மன்றாடிச் சொல்லுகின்றோம்
மறுபிறவி ஒன்று இருந்தால்
மனிதனாய் பிறந்தாலும்
தமிழனாய் பிறந்திடாதே
தமிழனாய் பிறந்திடாதே... (வன்னிக்)

■



# தமிழினம் சேரட்டும்... இனமானம் ஊறட்டும்...

## கவிஞர். காடாம்புலியூர் கா.சங்கரன்

இனிமேலும் வருவானா எழுந்து?! தனி
ஈழம் மலர்ந்திடத் துளிர்விட்டக் கொழுந்து
ஈனர்கள் அவன் மார்பில் சுட்டது உலக
ஏழுகோடித் தமிழரின் இதயத்தைத் தொட்டது.

பச்சை இளவாழைக் கன்று சிங்களப்
படுபாவி போட்டானே அதைசுட்டுக் கொன்று!
பால்மணம் மாறாத பாலன் அதற்குப்
பகையாகி வந்தானே உயிர்வாங்கும் காலன்!

பயமென்றும் அறியாத பிள்ளை நடுப்
பகலிலே நம்முன்னே போனதய்யோ கொள்ளை!
பார்க்கின்றப் பார்வையைப் பாருங்கள் அந்தப்
பார்வையில் பதுங்கிய பொருளென்ன கூறுங்கள்...?

அம்மாவும் அப்பாவும் வருவாரா இங்கே?! என்
அண்ணாவும் அக்காவும் போன இடம் எங்கே?
ஏங்குகின் றான்பதுங்குக் குழியிலே அதை
இருவிழியும் சொல்கிறதே மௌனத்தின் மொழியிலே!

இன்னுமா நடக்கிறது யுத்தம் காதில்
இடியாகக் கேட்கிறதே பீரங்கியின் சத்தம்!
எங்குபோய் இருப்பாரென் காவலர்? என்ற
ஏக்கம் தெரியுதே இளஞ்சிட்டின் பார்வையில்.


மார்பிலே புண்பட்டு இறப்பது எங்கள்
மறத்தமிழ் வீரரின் தனிப்பட்டச் சிறப்பது!
என்பதை நிரூபித்துக் காட்டினான் என்றும்
இறவாத வான்புகழ் இவனிங்கே நாட்டினான்!

கொத்தாகத் தமிழர்கள் சாவதா? இந்தக்
கொடுமையை நாம்கண்டு பேசாமல் போவதா?
ஒன்றாகத் தமிழினம் சேரட்டும் நம்
உள்ளத்தில் உதிரத்தில் இனமானம் ஊறட்டும்.

மானத் தமிழர்க்கொரு வேண்டுகோள் அது நம்
மாண்புகள் ஒளிவிடச் செய்கின்ற தூண்டுகோல்,
கட்சியின் போர்வையை நீக்குங்கள் நெஞ்சில்
கசப்பான பகையினை அடியோடு தூக்குங்கள்.

ஒன்றாகக் கைகோர்த்து வாருங்கள் ஈழம்
உருவாகித் தனிநாடாய் ஒளிவீசும் பாருங்கள்!

■



# என்ன செய்ய பாலச்சந்திரா?

**மகிராஜா**

□

தமிழனின் உயிர்களை
உலைவைத்து சமைக்கும்
சிங்களவனின் குடிலுக்கு
விருந்துக்கு விரையும்
இந்தியனிடத்தில்
இருந்து கொண்டு
என்ன செய்ய பாலச்சந்திரா?

எத்தனை தமிழனை கொன்றாலும்
தட்டிக் கேட்க
தைரியம் இல்லாமல்
நட்புநாடு என்று சொல்லி
முட்டு கொடுக்கும்
முடவன் வீட்டில்
தமிழன்
கூட்டுக் குடும்பமாய்
இருக்கின்ற பட்சத்தில்
என்ன செய்ய பாலச்சந்திரா?

தேச விடுதலைக்காகப்
போராடிய
நேதாஜியையும்
மகாத்மாவையும் போற்றிவிட்டு
இன விடுதலைக்காகப் போராடும்
என் இனத்தலைவனை
தீவிரவாதி என்று சொல்லும்
சில பயங்கரவாதிகளை
வைத்துக்கொண்டு
என்ன செய்ய பாலச்சந்திரா?

■



# குருத்தல்ல... விதை

## ந.இராசசேகரன்

□

குட்டிப் பிறைநிலவே
உன்
அப்பாவி விழிகளைப்
பார்த்த பின்னுமா
அப்'பாவி' துப்பாக்கி
எடுத்து உன்னைத்
துளைத்தெடுத்தான்

புலிக்குட்டியே ஆகட்டும்
அது வளரும் வரை
பூனைக்குட்டிதானே
வெறிபிடித்த சிப்பாயே
அதனிடமா
உன் சிங்கள வீரத்தை
சிலுப்பியிருக்கிறாய்?

சிங்கள தேசத்தின்
சிப்பாய்க் கூட்டமே
இவன் ஒருவனை
விட்டுவிட்டால்
ஓராயிரமாய் எழுவான்
என்றுதானே
இளங்குருத்து இவனென
நசுக்கிப் போட்டாய்

ஏமாந்து போனாய்
ஓநாய்க் கூட்டமே
நீ...
நசுக்கிப் போட்டது
குருத்தல்ல... விதை
அது
நசுக்கப்படவில்லை
விதைக்கப்பட்டுவிட்டது

பாலச்சந்திரா
உன் வினாத்தொடுக்கும்
விழியிரண்டை
நேர்நோக்கும் வீரம்
எமக்கில்லையடா
குற்ற உணர்வில்
குறுகித் தலை குனிந்தோம்.

■



# நெஞ்சம் வேகுதடா

## வெள்ளாங்குளி வி.ரமேஷ்

□

சூரியன் என்னை சுட்டாலும்
சூளை நெருப்பில் இட்டாலும்
மனதில் இருப்பது தனி ஈழம்
மறவேன் இதனை ஒருநாளும்

உயிரை கொல்ல கற்றவனே
யுத்த நெறிமுறை அற்றவனே
மடிந்து கிடப்பது தமிழினமே
மறவேன் இதனை அனுதினமே

இலங்கை அதிபர் ராஜபக்சே
என் இனத்தை அழித்தது நீதானே
விலங்கை பூட்ட வந்திடுவான்
தனி ஈழத்திலிருந்து இன்னொரு கோட்சே

உயிர்பசி உனக்குள் தீராமல்
ஒருவரிடமும் கூறாமல்
பச்சிளம் குழந்தையை பாராமல் உன்
பதவிக்கு ஆபத்து நேராமல்
நெஞ்சில் பாய்ந்தது சில குண்டு இதன்
நினைவே எனக்கு தினமுண்டு

ஐ.நா. உன்னை துறந்திடலாம்
ஆண்டவன் கூட மறந்திடலாம்
பன்னிரெண்டு வயது பாலகனை
பாழும் குழியில் போட்டவனே
நாளும் கோளும் மறக்காது
நாய்கூட உன்னை மதிக்காது
நெஞ்சம் எமக்குள் வேகுதடா அந்த
நினைவே வந்து வந்து போகுதடா...
வஞ்சம் தீர்க்க வந்திடுவான் உந்தன்
வம்சத்தை துவம்சம் செய்திடுவான்...

■



# போர் பிறையானது

## புதுவைத் தமிழ்நெஞ்சன்

□

புறமுதுகு காட்டாத
புலிக்குட்டியே!
புலிநானூறு படைத்த
பிரபாகரனின் பிள்ளையே!
ஈழச் செல்வா எங்கள்
பாலச் சந்திரா!

சிதறிக் கிடந்த தோட்டாக்களை
சேகரிக்கச் செய்தது
உன் இறப்பு அதனால்
மீண்டும் நீ பிறப்பு.

அச்சத்தின் அடையாளம்
அணுவளவும்
உன் முகத்தில் இல்லை
நீ மதிவதனியின்
புறநானூற்றுப் பிள்ளை!

வீரத்தின் விளைநிலமே!
தமிழீழம்
அதில் நீ விதையானாய்!
வெள்ளைக்கொடி ஏந்தி வந்த
நடேசனை கொன்றவன்
பிள்ளைக் கொடியை
விட்டு வைப்பானா?

நீ... சின்னத் தீப்பொறிதான்
ஆனால்...?
பற்றி எரிகிறது
உலகெங்கும்
இனவுணர்வு போராட்டம்.

நீ அறியா சிறுவன்தான்
இரண்டகம், சூது, வாது
அறியாச் சிறுவன் தான்.
விழித்த கண் வேல்கொண்டு எறிய
அழித்து இமைப்பின்
ஒட்டன்றோ வன் கணவர்க்கு!

வேலுக்கு அஞ்சி
விழியினை மூடுவது
வீரனுக்கு இழுக்கென்று
இமைமூட மறந்தாயா?

பாலச் சந்திரனே!
நீ செத்துவிட்டாய்
ஆனால்?
உனக்கு வரலாறு இருக்கிறது
உன்னைச் சுட்டவன்
சாக வில்லை
ஆனால்...?
அவனின் வரலாறு செத்துவிட்டது.

■





# நியாயத் தீர்ப்பு நாளில்...!

**செல்வ.மதிவாணன்**

□

மண்டை ஓடுகளில் மேடைகள் அமைத்து
மனித உரிமைகள் மாநாடு!
வழிந்தோடும் இரத்தத்தால் வரையப்பட்டிருக்கிறது
ஒரு தேசத்தின் எல்லைக் கோடு
எல்லைக்குள் எங்கெங்கும் பிணக்காடு!


வீரனும், வீரனும் மடிவது சமர் இது
போரின் எதார்த்தம் அதில்
அப்பாவியும், பிஞ்சுகளும் சமம் இது
எவன் சொன்ன தர்மம்?

சின்னஞ்சிறு பிஞ்சைக் கொல்ல தோட்டா
நிரம்பிய துப்பாக்கி ஒன்று தெருநாய்களிடம்
இருந்தால் போதும் இதற்கு
வீரமும், ஒரு இராஜ்யமும் வேண்டுமா
வெட்கம்... வெட்கம்!

முற்றிலும் முடித்து விட்டோமென்று கொட்டிக்
கொக்கரித்த அந்த மாபாதகன் இந்தப்
பாலகனை சிதையில் வைப்பதாய் நினைத்து
விதையில் வைத்து விட்டான்!
இனி உலக மண்ணெங்கும் தெறித்த இந்தப்
பிஞ்சுப் பாலகனின் காயாத இரத்த ஈரம்
வீரம் செறிந்த தமிழினத்தின் உரம்!

விரைவில் ஒரு நியாயத்தீர்ப்பு நாள் வரும் அப்போது
தீய்ந்த உயிர்களை கணக்கெடுப்போம்! அந்தத்
தீர்ப்பு நாளில் கடனடைப்போம்!

■





# அழிவின் அந்தராத்மா...

## வெற்றிப்பேரொளி

■

இந்த நூற்றாண்டின்
இனக்கொலைகாரன்
நீ!

மண்டையோடுகளால்
தயாரிக்கப்பட்டிருக்கிறது
உன் மகுடம்!

கொத்துக் குண்டுகளால்
குதறப்பட்ட மண்ணால்
எடுக்கப்பட்டிருக்கிறது
உன் கோட்டைச்சுவர்

காணாமல் போனவர்களின்
எலும்புக் கூண்டுகள்
ஏந்திப்பிடிக்கின்றன
உன் அரண்மனையை!

அறுபட்டத்
தாலிச்சரடுகளே
தொங்குகின்றன அங்கே
தோரணங்களாய்!

அடுக்கப்பட்ட
பிணங்களே
உன் சிம்மாசனமாய்!

உயிரோலங்களைப் பிழிந்து
உருவாக்கப்பட்டிருக்கிறது
உனக்கான வாழ்த்திசை!

முள்வேலி முகாம் ரணங்கள்
உன்னை அலங்கரிக்கும்
ஆபரணங்கள்!

வல்லுறவுகளில் சிதைக்கப்பட்ட
பெண்களின் அனல்மூச்சுகளில்
இயங்குகின்றன
உன் குளிரூட்டிகள்!

''போரில்லா மண்டலம்''
உன் பொய்யை
நம்பிவந்த சனங்கள்
ஆனார்கள்
உயிரில்லாச் சவங்கள்!

உன் தோள்களில்
நீண்டுகிடப்பது
குருதியில் நனைந்த
எம் வெள்ளைக்கொடிகள்!


புலிகளை மட்டுமல்ல
போர் அறத்தையும்
கொன்றவன் நீ!

புத்தகயாவும்
திருமலை திருப்பதியும்
பாவபூமியாகிவிட்டன
உன்
பாதம் பட்டதால்!

சிரிக்காதே...
உன்
புன்னகையில் நிழலாடுகிறது
'பாலா' போன்ற
பிஞ்சுகளின் மரணக்கோலம்!

நீ
எழுப்பி இருப்பவை
வெற்றிச் சின்னங்களல்ல
'வெறி'ச் சின்னங்கள்!

வரலாற்றில்...
தோற்றும் வென்றிருக்கிறார்கள்
எம் புலிகள்
வென்றும் தோற்றவன்
நீ... நீ...தான்!

■



# துரோகத்தின் தீ மழை!

## அருள்குமார்

□

அதோ மனிதவுடல் தின்னும் ராட்சஷப் பேய்களின்
மணற் கோட்டைக்குள்
அரை நிர்வாணியாய் என் பாலகன் அமர்த்தி
வைக்கப்பட்டிருக்கிறான்
என் பாலகனின் தலைமேற்பரப்பெங்கும் துரோகத்தின் தீ
மழை பெய்துகொண்டிருக்கிறது
என் பாலகனின் கைகளில் ராட்சஷப் பேய்கள்
திணித்திருக்கின்றன
கொடும் விஷம் தோய்த்த பிஸ்கட்டுகளை

துயரச்சம் கவிழா தன்னிரு கண்களையும்
வெளிப்பரப்பெங்கும் விரிக்கிறான் என் பாலகன்
வெளிப்பரப்பில் முழு நிர்வாணிகளாய் வீழ்ந்து கிடக்கும்
உடல்களுக்காக அவன் தலை மேற்பரப்பெங்கும் பெய்யும்
துரோகத்தின் தீ மழையில்
தங்களை பொசுக்கிக் கொண்ட பறவைகள் சாம்பல்களின்
போர்வைகளாய்
அவ்வுடல்களின் மேல் விரிந்துகொண்டிருக்கின்றன

கண்கள் திருப்பி அச்சமின்றி அப்பிஸ்கட்டுகளை
உடைக்கின்றன அவன் விரல்கள்
கொடுவிஷம் தோய்த்த பிஸ்கட்டுகள் என் பாலகனை
கொலை செய்யும் விதம் காணும்
பேராவல் கண்கள் ராட்சஷப் பேய்களுக்கு பற்களை விடவும்
பெரிதாய் முளைத்திருக்க
உலகத்தின் கண்கள் பல வர்ண கொடிகளில் இலாவகமாய்
கட்டப்பட்டிருந்தன
கையொலியெழுப்பி ஆர்ப்பரிக்கின்றன பேய்கள்
உடைத்த பிஸ்கட்டுகளை வாயிற்போட்டு அசை
போடுகிறான்
அகிலத்தையும் சேர்த்தே என் பாலகன்

பேய்களின் ஆரவாரம் தீப் பிடித்த காடாய் பெருகுகிறது
கொடுவிஷ பிஸ்கட்டுகளோடு தவறு கொண்டுவிட்டதாக
என் பாலகனின் வயிற்றுக்குள்
தற்கொலை செய்துகொண்டு விட்டதை
பேய்களறிந்துவிட்டன
கொடுவிஷம் முறித்து ரச முகம் மாறாத என் பாலகனை
ஆரவாரம் அடங்கிய
ராட்சஷப் பேய்கள் அவன் யாரென இனம் கண்டும் விட்டன

பேய்களில் சில பேரொளி சூழ அமர்ந்திருக்கும்
என் பாலகனை
இவ்வுலகத்தின் கடவுளென அலறி மிரள்கின்றன
சில பேய்களோ முன்னரே தருவிக்கப்பட்டிருந்த
கடவுள்களைக் கொல்லும்
துப்பாக்கிகளை தேடியெடுக்கின்றன
என் கடவுளின் மார்பின் முன் கடவுள்களை கொல்லும்
துப்பாக்கிகள்
சீற ஆயத்தமாகி விட்டன
அதோ சீறுகின்றன சீறுகின்றன


எவ்வித ஓலமுமற்று அடுக்கப்பட்டிருந்த
மணற்மூட்டைகளின் மேற்விழுந்து
மணற் மூட்டைகளோடு சரிகிறது என் கடவுளின் உடல்
அம்மணற்மூட்டைகள் ஒவ்வொன்றிலுமிருந்து
பிரபஞ்சமெங்கும் சரிகின்றன

ஓராயிரம் கடவுள்களின் உடல்கள்

உலகின் கண்கள் பலவர்ணக் கொடிகள்
அவிழ்க்கப்பட்ட பின்னும்
கொடிகளின் நிறங்களிலேயே அலைவுறுகின்றன
ஆயினும் துயர தீப்பிழம்பொன்றிலிருந்து பிறந்த
வினாவொன்று
பிரபஞ்சப் பெருவெளியெங்கும் பதிலுக்காய்
அலைந்து திரிகிறது

மனிதவுடல் கொன்ற பேய்கள் குற்றப்படுவதும்,
தண்டனையுறுவதும் தவறெனில்
சரி கடவுள்களைக் கொன்ற இராட்சஷப் பேய்களை
என்ன செய்ய...
பதிலளியுங்கள் உலகப்பெரு வெளியெங்கும்
கடவுள்கள் வளர்ப்போரே..!

■



# உலகை உலுக்கும் புகைப்படம்!

## ஈரோடு இறைவன்

□

நீ வாங்கிய துப்பாக்கிச் சத்தம்
இந்தியாவின் பாராளுமன்றத்தில் கேட்கிறது!

நீ மணல் மூட்டைகளுக்கு நடுவே அமர்ந்தது
ஐ.நா.வை அமர வைத்து பேச வைக்கிறது!

காயங்களை வாங்கிக் கொண்டவன் நீ
துடிக்கிறது இனம், வலி தாங்க முடியாமல்!

உன்னைக் கொன்றவனுக்கு திருப்பதி
லட்டு தருகிறான், வாழ்கிறோம் விடியாமல்!

வியட்நாம் சிறுமியின் அலறல் படம்
உலகைத் திருத்திய புகைப்படம்!

உலகை உலுக்கும் உன் புகைப்படம்
வரைகிறது தம்பி ஈழ வரைபடம்!

மண்ணில் கிடப்பவனே மறுபடியும்
எங்களுக்காக சிரிக்க மாட்டாயா?

உன் தாய் கொஞ்சக் கொஞ்ச ஓடுவாயே
ஒருமுறை எழுந்து ஓட மாட்டாயா?

உலகில் நீதி கேட்க நீயே சரியென
உன் தந்தை உன்னை அனுப்பி வைத்தாரா?

துப்பாக்கிக்கு பிறந்தவனே நீ தோட்டாவை
தாங்குவாய் என்றே நினைத்தாரோ?

ராஜபக்சேவுக்கு தேவை என்று
தூக்கு கயிறுக்கு சொல்லியிருக்கிறோம்!

நீ உயிர் சிந்திய இடத்தில்
இனமே கூடி நீதி கேட்கிறோம்!

■



# சாபம்

## ஆண்டாள் பிரியதர்ஷினி

□

கர்ப்பப்பை எரியுதய்யா!
தாய்ப்பாலும் கருகுதய்யா!
நெஞ்சுக்குள் புயலடிச்சு
நிம்மதியும் கரையுதய்யா!

பார்த்த நொடிமுதலாய்க்
கண்ணுரெண்டும் தூங்கலியே!
சோத்துக்குள் கைவச்சுப்
பசியாற முடியலியே!

பிஸ்கட்டைத் தின்ன புள்ள
சின்னக் குழந்தை ஐயா!
இஷ்டப்படி கொன்னுபோட
இரக்கம் இல்லியாய்யா!

துப்பாக்கி தூக்கையிலே
உன்புள்ள தெரியலியா?
பிஸ்டல் அழுத்தையிலே
உன்கொழந்தை
நெனப்பில்லியா?

ஆடு மாடு பன்னி கூடக்
குட்டிக்கு உருகி நிக்கும்!
மனுசப்பய உருகலேன்னா
என்னன்னு பேருநிக்கும்?

சிறுபுள்ள பிஸ்கட்டைத்
தின்னு முடிச்சானா?
முடிக்காமலே கொலகாரன்
கொன்னு முடிச்சானா?

படுபாவி! என் வயிறு
பத்தி எரியுதய்யா!
உம்புள்ள மக்கமாரு
செத்துக் கருகுமய்யா!

ஒன்னோட சிம்மாசனம்
உருக்குலைஞ்சு போகுமய்யா!
உன் உசுரு சீக்கிரமாக்
கட்டைல வேகுமய்யா!

■



# புலிக்குட்டிக்கு வீரவணக்கம்!

## திண்டுக்கல் ஐ.லியோனி

□

புனர்வாழ்வு தேடிவந்த
பூவின் மொட்டினை
புல்லட் குண்டுகள்
புகுந்து கொன்றது ஏன்?
மறைந்து கொன்றது ஏன்?
புலிக்குட்டி என்பதாலா?

புகலிடம் தேடிய புள்ளிமானை
புத்தனின் பேர் சொல்லும் மண்ணிலே
துப்பாக்கி ரவைகள் குடித்த ரத்தத்தால்
நம் ஈழத்தாய் செந்தூரப் பொட்டுவைத்து
விரைவில் மலர்ந்திடுவாள் மங்கலமாக


பால் மணம் மாறாப் பாலகனை
பாலச்சந்திரனை தம்பியின் மைந்தனை
வீரச்சாவுக்கு இட்டுச் சென்ற
சிங்கள வெறியனே! உன்
கொடும்பாவி எரிகிறது இப்போது
படுபாவி உன்னை உலக மனித நேயம்
எரித்துவிடும் விரைவில்

சிங்கள வெறியர்களே
எங்கள் வீர வரலாற்றுக்கு
பாலச்சந்திரனின் நெஞ்சில் நீங்கள்
வைத்தது உலோக முற்றுப்புள்ளிகள் அல்ல
ஈழம் மலர வைத்த முதற்புள்ளிகள்

துப்பாக்கிக் குண்டுகளே!
கோழைகளின் விரலில்
கட்டுப்பட்டு இருப்பதை விட
மாவீரன் மகனின் இதயத்தில்
பதக்கங்களாய் பதிந்துவிட்டீர்!

வீரன் வேலுத்தம்பி பிரபாகரனின் மகனே!
உன் நெஞ்சில் பதிந்த இரு தோட்டாக்கள்
ஏவுகணைகளாய் மாறி
போர்க்குற்றக் கண்களைக் குருடாக்கட்டும்
கோழைகளின் கால்களை முடமாக்கட்டும்
தனிஈழக் கொடிமரத்திற்கு உரமாகட்டும்!

■



# விளைந்தது மகசூல்... விதைநெல் தின்று!

## மரபின் மைந்தன் முத்தையா

□

அன்னை மடியில் அமர்ந்திருப்பது போல்
அந்நியர் பிடியில் அமைதிக் கொழுந்து;
பளிங்கு விழிகளில் பசுவின் சாயல்
விலங்குகள் நடுவில் வண்ணச் சிறுமான்;
அரக்க பூதகி அழைத்த அழைப்பில்
இருக்கும் வஞ்சனை இனம் காணாததால்
நீலம் பூத்தது பாலகன் மேனி
ஈழ நெருப்பில் இறங்கிய நெய்யாய்
பால சந்திரனின் பச்சை ரத்தம்.

கதலி வாழைக் கன்றின் தியாகம்
பதற வைத்தது பூமி உருண்டையை;
பத்தடி பாய்ந்த போர்வீரர்களை
செத்துக் கடந்தான் சின்னஞ்சிறுவன்.
செருமுகம் நோக்கிச் செல்கென விடுத்ததும்
போர்க்களம் கண்ட புறநா னூற்றுச்
சிறுவன் பெயரை உரைகாரர்கள்
பொறிக்கலாம் இனிமேல் ''பாலசந்திரன்'' என.


மளிகைக்கடை முன் கால்கள் எக்கி
ஜாடிகள் நடுவே ரூபாய் நீட்டி
பிஸ்கட் கேட்கும் பிள்ளைகளுக்கு
பிரியமாய்க் கொடுத்தே பழகிய அண்ணாச்சி
ஐந்தாறு நாட்களாய் பிஸ்கட் தருகையில்
கண்கள் சிவக்கக் கலங்குவது ஏனென
புரியாமல் குழம்பும் பள்ளிச் சிறுவன்
பாலசந்திரன் புகைப்படத்தைப்
பார்க்கவில்லை போலும் இன்னும்...

பயமிலாக் கண்கள்; போர்த்திய அங்கி
பிஞ்சு உதட்டில் பிஸ்கட் துகள்கள்;
கோலம் இதனில் காட்சி கொடுத்த
பாலசந்திரனின் புகைப்பட உருவம்
கனவில் வந்து கலக்குவதாலே
ரணப்பட்டுப் போன ராஜபக்ஷே
இலங்கை முழுவதும் பிஸ்கட் விற்பதைத்
தடைசெய்திருப்பதாய் தகவல் வந்துள்ளது

பாலகாண்டம் பாடிய கம்பா
யுத்த களத்தினில் எங்கள் இளந்தளிர்!
யுத்த விதிகளை மொத்தமாய் மீறிய
ரத்தக் களறியில் ரத்தினத் துண்டு;
வியாசனைத் தமிழ்செய்த வில்லியே எங்கள்
நேச அபிமன்யு நிழற்படம் காணாய்

சற்றும் உணர்வின்றி சருகாய்க் கிடந்தவர்
முட்டி மோதி முனைப்பாய் எழும்படி
செத்தும் கொடுத்தான் சின்னப் பிள்ளை
எழுந்தது தமிழினம் இனக்கனல் கொண்டு;
விளைந்தது மகசூல்... விதைநெல் தின்று!!

■



# பாலச்சந்திரன் நான்மணி மாலை

## ஆலந்தூர் கோ.மோகனரங்கன்

□

மிகச்சிறந்த சான்றோர்களைப் போற்றிப் பாடப்படுவது நான்மணி மாலை என்னும் பழைய இலக்கிய மரபு. கள்ளமற்ற குழந்தை பாலச்சந்திரனுக்காக உலகமே அழுகிறது. இது அவன் மீது பாடிய நான்மணி மாலை. வெண்பா, கட்டளைக் கலித்துறை, விருத்தம், அகவல் என்னும் நான்கு வகைப்பாடல் மணிகளால் அந்தாதித் தொடை அமையப் புனைவது நான்மணி மாலை ஆகும்.

(வெண்பா)
பிரபா கரன்பெற்ற பிள்ளை! இலங்கை
உரமாய் அமைந்த உயர்வை மரமாய்
இருப்போர் அறியார்! இதனால் அவரைத்
தெருவில் நிறுத்திச் சிரி!

(கட்டளைக் கலித்துறை)
சிரித்த இளம்பிறை! தேன்மொழி செப்பும் குழந்தையிடம்
உரித்த பழத்தினை உண்ணக் கொடுக்க மனமறியார்
விரித்த வலையில் விழவே வெறுத்த கயவரிடம்
தெரித்தன குண்டு! திடமாய் அணைத்த இளங்களிறே!



(எண்சீர் விருத்தம்)
இளங்களிறே! வரிப்புலியின் குட்டி உன்னை
'என்இனமே! என்அண்ணா!' என்று சொல்லும்!
உளங்கொதித்த சான்றோர்கள் இன்னும் வாழ
உயிர்பொறுக்க மாட்டாரே! அழித்த பாவி
களங்களிலே போர்மரபு காணாக் கீழோர்!
கருவண்டு கண்களினைக் கனலில் இட்டார்!
இளங்குருத்தே! உனைவெட்டிச் சாய்த்தோர் மண்ணில்
இருட்டறையில் உலவுகின்றார்! காலம் பார்க்கும்!

(அகவல்)
பார்க்கும் மக்கள் பதறு கின்றார்
கையும் காலும் உதறு கின்றார்
மீசை துடித்திட ஓசை வெடித்திட
நீசரை நிலத்தில் நின்றே அழிப்பார்!
இராச பக்சே! இராச பக்சே!
அடாஉனைத் தொடாமல் அடக்கப் பலர்உளர்
கெடாதினி அறமே! படாரென விழுவாய்!
விடாத பழிகள்! அடாத செயல்கள்!
நடநட! சாவூர் நன்கு தெரிந்திடும்
மடமட என்றே மண்ணில்
வீழப் பாடுவேன் வெஞ்சின அறமே!

(வெண்பா)
அறமே அறியார்! அழிவார் விரைந்து!
திறமே மிகுந்தோர் சிதைப்பார்! உறவே
உனக்கினி இல்லை! உலகம் உமிழும்!
கணக்கை முடிப்போம் கருது!



(கட்டளைக் கலித்துறை)
கருதும் அறிவேஉன் கைவசம் கொஞ்சமும் இல்லையடா!
எருது விழுந்தது சேற்றில்! இதுபெரும் தொல்லையடா!
சருகு மணக்கத் தவழ்வதில் நாணுமே முல்லையடா!
உருகும் பனியாய் ஒழிவாய்! ஒருநாள்உன் எல்லையிலே!

(எண்சீர் விருத்தம்)
எல்லையிலா உலகத்தில் பாலச் சந்தன்
இருந்திங்கே வாழாமல் போக லாமா?
பல்லழகும் மூக்கழகும் பார்த்தி ருந்தால்
பசியெடுக்கா தென்கின்றார்! அந்தோ! எந்தச்
சொல்லழகால் மீண்டுமந்த குழந்தை வண்ணம்
தோன்றிடுமோ? எனஎண்ணித் துவளு கின்றோம்!
வெல்லமென இனிப்பவனை அழகின் ஊற்றை
வேறெங்கே காண்பதினி? அந்தோ! அந்தோ!

(அகவல்)
அந்தோ! அந்தோ! அவலம் என்னைப்
பந்தாய் எண்ணிப் பாடாய்ப் படுத்தும்
கதிரவன் கண்டும் காத்திட வில்லை!
பொதுநிழல் மரங்கள் போர்செய வில்லை!
காற்றே! நீயுமா காக்கா திருந்தாய்?
கடலேநீ நினைத்தால் காத்திருக் கலாம்!
இயற்கை எல்லாம் இரக்கம் இன்றி
இருந்ததால் பழியை ஏற்றீர்!
வருந்தாமல் இருப்போர் வையத்தில் யாரே?



(வெண்பா)
யாரே பொறுத்திடுவார்? யானே வறியவன்!
யாரே மறவரினி யாண்டுமிங்கே? யாரே
உயிர்வாழ்வார்? தீயோர் ஒழியவே வெற்றிப்
பயிர்செய்ய முந்துவீர் பார்த்து!

(கட்டளைக் கலித்துறை)
பார்த்த படுகொலை பார்வையிலே நின்று பசியகற்றும்
வேர்த்த உடம்பினை வேய்ங்குழல் வந்தா துயரகற்றும்
சேர்த்த புகழெலாம் தீயினில் சேர்ந்து மறைந்தொழியும்
ஆர்த்த அலையாய் அயரா திருப்போம் பகைகெடவே!

(எழுசீர் விருத்தம்)
கொள்ளி வைத்த கள்ளன் வீழக்
கொதித்துப் பரணி பாடுவோம்!
அள்ளி நெருப்பில் அடக்கம் செய்த
அவனைத் துரத்தக் கூடுவோம்!
முள்ளில் கல்லில் மோதி னாலும்
முடிவில் வெற்றி தேடுவோம்!
தள்ளி மிதிக்கும் தமிழர் இனத்தைத்
தாங்கி நின்று சாடுவோம்!

(அகவல்)
சாடு கின்ற தலைவ னுக்குப்
பாடும் செல்வம் பாலச் சந்திரன்
வாடிப் போன வஞ்சம் என்ன?
கோடி மக்கள் குமுறு கின்ற
சூடு தணிப்போம்! சூழ்ச்சி அறுப்போம்!
ஈழ மக்கள் இன்னும் அழுவதா?
வாழ வழியைக் கண்டு
சூழ நின்று தொடுவோம் வெற்றியே!

■





# பௌத்தம் மீறிய ரௌத்திரம்...

## கு.ஶ்ரீகல்ப விருட்சா

□

பால்வீதி பயணம் செய்யுமாறு
பிள்ளையை வாழ்த்தி பிறப்பளித்திருப்பாள்
மங்கை மதிவதினி...
வாழ்ந்த மண்ணோ
வழியனுப்பியது துப்பாக்கிக்கு இரையாய்
மரணம் நோக்கி...

பிழையேதும் நிகழ்ந்ததோ
ஈழ மண்ணில்?
ஈரமும் உலர்ந்ததோ
சிங்களவன் கண்ணில்!

போதி மரமும் இனபோதையுற்றதோ
பௌத்தமும் ரௌத்திரமும் கற்றதோ
புத்தனின் போதையும் காற்றோடு கரைந்ததோ
இரக்கமும் இத்துயர் கண்டு இறைஞ்ச மறந்ததோ



புத்தனும் தன்னை ஞானியாய் நிரூபித்துக் கொண்டார்...
ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே
இந்த அவலம் காணப் பொறுக்காது
கண்களை இறுக்க மூடிக்கொண்டு...

பாவப்பட்ட பூமி
இனியேனும் புத்துயிர் பெறட்டும் என
நின் செங்குருதியால்
நிலமகளை புண்ணியப் படுத்தினாயடா!

மறப்பால் குடித்தவர்களடா
நாம் பிறப்பால்!
நீ சிந்திய குருதி
நாளை மலரும் ஈழக்குழந்தைக்கு
ஆகுமடா முலைப்பால்!

■



# பாலச்சந்திரனிடமிருந்து நான்கு தோட்டாக்கள்...

## குகை மா.புகழேந்தி

□

தோட்டா -1
ஒன்றரை இலட்சம் தமிழ்ப்பிணங்கள்
ஒற்றை உயிர்
பாலச்சந்திரன்.

தோட்டா -2
பாலச்சந்திரனின் பிஞ்சு நெஞ்சில்
பதிந்த தோட்டாக்களில்
முன்பே எழுதப்பட்டுவிட்டது ஈழ விடுதலை.

தோட்டா -3
ரொட்டித் துண்டுகளை சுவைத்த உயிரை
சுவைத்த மரணத்தின் உதடுகளிலும்
அதே ரொட்டிச் சுவை.

தோட்டா -4
குழந்தைப் புலியும் கூட
குதறிவிடும் என்கிற அச்சத்தில்
கடைசிவரை எதிரில் நிற்க
திராணியற்ற அவனின்
பணியாட்களின் தோட்டா மட்டுமே
பரிதாபமாய் பாய்ந்தது இறுதியாய்.

■



# சுட்டவனும் சுட்டியவனும்...

## இ.எஸ்.லலிதாமதி

□

நீ சந்திரனாய்
உதித்த தருணம்
உச்சி முகர்ந்து
உளம் குளிர்ந்த
பிரபாகரச் சூரியன்
பக்கத்திலில்லா பொழுதில்
உன்னைப்
பாழ் செய்த கொடியோன்
யாரடா செல்லம்?

யுத்தக் களமே
நித்தமும் ஆனதனால்
உனக்கான உணவை
போர்க்களத்தில் சமைத்த அன்னை
அருகிலில்லா வேளையில்
உண்ணக் கொடுத்து உன்
உயிர் பறித்தார் யார் தங்கம்?

உப்பு மூட்டை தூக்கி
உன்னோடு கதை பேசி
ஆகாய விமானம் செய்யும்
அறிவியல் நுட்பம் சொன்ன
அண்ணனற்ற வேளையிலே
கொடுமையிலும் கொடுமை செய்த
கொலைகாரன் யார் கண்ணே?



யாழ் நூல் எரித்து
தமிழரின் தடம் அழித்த
பாழ் நில போதிகளின்
தவறுகளை உனக்குச் சொன்ன
தமக்கை உடனில்லையென
படுபாதகச் செயல்புரிந்த
பாவிகள் யார் செல்லம்?

பாண்டியனும்
பல்லவனும்
புலிக்கொடிச் சோழனும்
பரம்பரையாய் ஆண்ட
தமிழ்நிலம் ஈழமென
தாத்தாவும் பாட்டியும்
கதைத்த கதையனைத்தும்
கண்மணி நீ கேட்டதனால்
களப்பலி ஆனாயோ?

சுட்டவனும்
சுட்டியவனும்
சுடுகாடு வரும் நாள்
வரும் கண்ணே
ஒரு நாள்

அப்போது
சாவு வீட்டில்
சிரிக்கக்கூடாதென்ற
சம்பிரதாய மரபை மாற்றி
இவ்வுலகம்
சத்தமிட்டுச் சிரிக்கும்
அந்தச் சிரிப்பிற்காக
காத்திருக்கிறேன் என் கண்ணே.

■




812











ISBN 938182858-X
9 789381 828588